Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 28 | 05-11 செப்ரெம்பர் 2003



## கிழக்கின் துயரம்



## அவலத்தின் நீட்சியாய்...



## குரங்குபாஞ்சான்



## யாழ் முற்றுகைக்குள்ளாகும்...

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 05.09.2003

மின் அஞ்சல : Ehatham@sltnet.lk


## ஜே.ஆரின் சுவடுகளில் ஜே.வி.பி மீண்டும் இனவாதிகளின் யாத்திரைகள்...

சமாதான நகர்வுகளுக்கு எதிரானகோசங்களுடனும், ரணிலின் ஆட்சியை அகற்றும் பிரச்சார நோக்கிலான இலக்குடனும், எதிர்வரும் மாகாணசபை மற்றும் உள்ளூராச்சித் தேர்தல்களின் வெற்றி வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்குடனும் காலியிலிருந்து கொழும்பு வரை மேற்கொண்ட பாதயாத்திரை நாடகம் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் நடைபெற்று முடிந்ததாகக்கூறப்படுகின்றது.

இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளுக்கு வழங்கக்கூடாது என்றும், நோர்வே நாட்டவரை - சமாதான ஏற்பாட்டாளர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என்றும், ரணிலைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு சகல தேசபக்தர்களும் ஓரணியில் அணிதிரள வேண்டும் என்றும் பாதயாத்திரையின் ஆரம்பத்தில் ஜே.வி.பியினர் வெளியிட்ட கருத்துக்கள், அவர்களின் சமாதான விரோத - சிறுபான்மையின விரோத- சிந்தனைகளின் வெளிப்பாடாகவே அமைதி ஆர்வலர்களாலும், அரசியல் நோக்கர்களாலும் உணரப்பட்டது.

காலி - கொழும்பு பாதயாத்திரையின் வெற்றி அடுத்த சில வாரங்களில் கண்டியிலிருந்து கொழும்புக்கு மற்றொரு பாதயாத்திரையை நடத்தும் திட்டத்தை ஜே.வி.பியினர் அறிவிக்க வைத்திருக்கிறது.

கண்டி- கொழும்பு பாதயாத்திரை என்றதும் நினைவுக்கு வருவது ஜே.ஆர் ஜெயவர்த்தன தலைமையில் 1958இல் ஐக்கிய தேசியக்கட்சியினர் புத்த பிக்குகளின் ஆசீர்வாதங்களுடன் அச்சமயம் மேற்கொண்ட வரலாற்றுக் கறைபடிந்த பாதயாத்திரையேயாகும்.

பண்டா - செல்வா உடன்படிக்கைக்கு எதிராக மிக அநாகரீகமான அரசியல் நடவடிக்கையாக இன மற்றும் மத வெறியைத்தூண்டும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஜே.ஆர் ஜெயவத்தனாவின் தலைமையான கண்டி முதல் கொழும்பு வரையிலான பாதயாத்திரை தான் 1958 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாதிகளால் மேற்கொள் ளப்பட்ட இனக்கலவரத்தின் உந்துவிசையாகும்.

அதுவும் அக்கால சமாதான உடன்பாட்டை எதிர்த்தே மேற் கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்ட 'இனவெறி' இன்னமும் சிங்கள .பௌத்த பேரினவாத சிந்தனையாளர்களால் தொடர்ந்தும் 'போதை' குறையாமல் பாதுகாக்கப்பட்டே வருகிறது.

சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்தை அலங்கரித்த அரசியல் தலைமைகள் அனைத்துமே இந்த போதைக்குள் தம்மை புதைத்துக் கொண்டவை தான்.

இந்தப்போதை அப்போது வலதுசாரிகளிடம் தான் பெருமளவில் இருந்தது. இப்போது இடதுசாரிகளும் அப்போதைக்கு அடிமையாகி விட்டார்கள் என்பதை ஜே.வி.பியின் பாதயாத்திரைகள் எடுத்துக்காட்டுகின்றன. புரட்சிவாதம் பேசிய அரசியல் பிரமுகர்களின் சமதர்ம அரசியல் வரட்சி கண்டு விட்ட நிலையில் இனவாதச் சுவடுகளைத்தொடரும் பரிதாபகரமான அரசியல் 'வங்குரோத்து' நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஜே.ஆரின் சுவடுகளில் ஜே.வி.பியினரின் பாதங்கள் கண்டி கொழும்பு பாதயாத்திரையின் போது பதியப்போகின்றன....

1958 இன் இரத்தக்கறை படிந்த வரலாற்றை ஜே.வி.பி மீண்டும் தொடர நினைக்கிறதா?

ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இந்தப்பாதயாத்திரை தமிழருக்கு பாதகமான யாத்திரை... அவ்வளவு தான்.

எதுவானாலும்.... அது.... அப்போது தந்தை செல்வநாயகத்தின் காலம்..... தமிழர்கள் உயிர் தப்ப ஓடி ஒளியத்தான் முடிந்தது. இது.... பிரபாகரன் காலம்..... இன்றைய தமிழர்கள் அப்படியல்ல. என்பதை கடந்த கால வரலாற்றிலிருந்து ஜே.வி.பி கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

## தூரனின் பார்வையில்

பாரிஸில் கடந்த மாதம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை இடைக்கால நிர்வாகம் குறித்த விடுதலைப்புலிகள் தயாரிக்கும் திட்ட வரைபு சம்பந்தமான ஆலோசனைகளைத்தொடந்து அதன் எதிரொலிகள் சிறிலங்காவின் தலைநகரில் சமாதான எதிர்ப்பு சக்திகளில் கடும் அதிர்வுகளை ஏற்படுத்தத்தொடங்கியுள்ளது.

அரசு சமர்ப்பித்த யோசனைகளை விடுதலைப்புலிகள் நிராகரிக்கவில்லை. ஆனால் அதன் உள்ளுடனை உள்வாங்க முற்பட்ட போது அது வெறும் 'கோது' மட்டுமே என்பதை உணர்ந்து கொண்டதையடுத்து, அரசின் திட்டவரைபுக்கு மாற்றீடாகஅன்றி, தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கொண்டதான இடைக்காலநிர்வாக திட்ட வரைபொன்று எப்படி இருக்க வேண்டுமென - அரசின் திட்ட வரைபை வைத்துக்கொண்டே ஆய்வு செய்து, தமது தரப்பு திட்டவரை பொன்றை அரசியல் நிபுணர்கள், சட்ட வல்லு நர்கள் ஆகியோரின் ஆழ்ந்த ஆலோசனையுடன் உருவாக்கியுள்ளார்கள்.

கொண்டுள்ளனர் என்பதைக் கடந்த அரை நூற்றாண்டு கால, சிறிலங்காவின் அரசியல் வரலாறு எமக்கு உணர்த்தியுள்ளது.

கடந்த வாரத்தில், புரட்சிகர சோஷ லிஸ சமூகத்தை உருவாக்க ஆயுதப்புரட்சி என்ற பேரில் கிளர்ச்சிகளையும் கலவரங் களையும் ஏற்படுத்தி சிங்கள இளைஞர் - யுவதிகளுக்கு பேரழிவை ஏற்படுத்திய, தொலைநோக்கு சிந்தனையற்ற செயற்பாடு களின் மூலவர்களான ஜே.வி.பியினர் தென் பகுதியில் சமாதான நகர்வுகளுக்கு- குறிப்பாக இடைக்கால நிர்வாக உருவாக்கத்திற்கு எதிராக - இனவெறியைத் தூண்டும் வகையில், யதார்த் தத்திற்கு முரணான பொய்ப் பிரச்சார கோஷங் களை முன்வைத்தபடி வெறும் சுயஅரசியல் லாபநோக்குடன் கூடிய பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டனர்.

உண்மையில் இந்த இனவிரோத- சமாதான விரோத நடவடிக்கையின் பின்ன ணியில் பொ.ச.ஐக்கிய முன்னணி என்ற சந்தி ரிகா தலைமையிலான கூட்டமைப்பு இருந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. சந்திரிகாவின்




ஜே.வி.பி தலைமையிலான பாதயாத்திரைக்கு தான் நேரடி ஆதரவை பிரகடனம் செய்யாவிட் டாலும், அநுரா மற்றும் மகிந்த ராஜபக்ஷ போன்ற அவரது கட்சிக்காரர்கள் அதற்கு ஆதரவு வழங்குவதை தடுக் கவுமில்லை.

## கோஷம் மாறுகிறது... வேஷம் கலைகிறது...!

இத்திட்ட வரைபு தேசியத்தலைவரின் பரிசீலனையின் பின்னர் அரசிடம் எதிர்வரும் வாரங்களில் கையளிக்கப்படும்.

'இடைக்கால நிர்வாக' பிரச்சினை யின் நிலை இவ்வாறிருக்கையில் சிறிலங் காவின் எதிர்க்கட்சிகளான சமாதானத்தின் எதிர்க்கட்சிகள் அரசின் 'வெற்றுக்கோது' யோசனைகளையே 'தமிழீழத்திற்கான முன் வரைவு' எனப்பிரச்சாரம் செய்வதில் தீவிரம் காட்டத்தொடங்கியுள்ளதை பார்க்கும் போது, விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் நிரந்தர தீர்வை நோக்கிய சமாதான நகர்வுகளின் ஒரு படி நிலை வளர்ச்சிக்கட்டம் என்று வர்ணிக் கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப்புலிகளின் திட்ட வரைபினை 'இது தான் தமிழீழ அரசு நிர்வாகத்திற்கான சட்ட வரைபென' கூறி குழப்பத்தை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

குழம்பிய அரசியல் குட்டையை மேலும் குழப்பி அதில் மூழ்கிச்சுகம் காணும் ஒரு அருவருப்பான அரசியல் செயற்பாட்டையே சிங்களப் பேரினவாத சிந்தனையாளர்களும், அரசியல்வாதிகளும் தமது தத்துவார்த்த கோட்பாடாக காலங்காலமாகவே வரித்துக் தம்பியும் 'கோமாளி இளவரசர்' என சிங்கள பத்திரிகைகள் சிலதால் வர்ணிக்கப் படுபவருமான அநுரா பண்ராடநாயக்காவின் பலமான ஆதரவு இந்த இனவாத செயற்பாடு களுக்கு இருக்கவே செய்தது.

அநுராவின் 'பலமான' ஆதரவை நம்புவது தான் ஜே.வி.பியினரின் தற்போதைய மிக மோசமான பலவீனம் என்பது வேறு விடயம்.

ஆனால் 'அநுரா' தனது சனாதி பதிக்கதிரையில் அமரும் கனவை நனவாக்க இனவாதத் தையும், ஜே.வி.பியின் பக்கத் துணையையும் பலமாக நம்புகிறார்.எனவே இனவாதிகளின் ஆதரவையும், இடதுசாரிகள் என இன்னமும் ஜே.வி.பியினரை நம்பிக் கொண்டிருக்கும் சிங்கள இளைஞர் யுவதிகளின் அன்பை(?!)யும் பெறஅநுரா பெரும் பிரயத்த னப்படுகிறார்.

ஜே.வி.பி தொடர்பான சந்திரிகாவின் பார்வை சில மூலோபாயங்களையும் பல தந்திரோபாயங்களையும் இலக்காகக் கொண்டுள்ளமையால் தான் இன்னமும் 'கூட்ட மைப்பு' என்ற பிடிக்குள் இறுகச்சிக்காமலும், முற்றாக விலகாமலும் 'சர்க்கஸ்' காட்டி வருகிறார்.

தென்னிலங்கையின் சகல அரசியல் கட்சிகளும் எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மகாண சபைத்தேர்தல்களை நோக்கியே தமது முழுக்கவனத்தையும் குவிமையப்படுத்தியுள்ள வேளையில் அரசாங்கத்தைத்தவிர ஏனைய அனைத்துக்கட்சியினருக்கும் சிங்கள மக்களின் உணர்ச்சிகளைக்கிளறி இனவாத கொதிப்பில் அரசியல் லாபங்களை எட்டும் தமது வழமை யான பாரம்பரிய செயல்முறைகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ரணில் தலைமையிலான ஐ.தே.முன் னணிக்கும் இனவாதம் தேவையானது தான், ஆனால் சமாதான சங்கீதத்தை தாமே உரத்து ஒலிக்க தொடங்கியுள்ள வேளையில், அதனை அடக்கி ஆனாலும் தேவைப்படும் பொழுது தம்மை தமது மக்களுக்கு இனம் காட்டும் வகையில் பயன்படுத்தியும் வருகின்றன. இது அவர்களுக்கு தவிர்க்க முடியாத அவசிய மாகும்.

சர்வதேச சமூகம் சமாதானத்தை வலியுறுத்துவதால் சமாதானத்தை பெயர ளவில்.... அதாவது பேச்சளவிலாவது தொடர் ந்து கொண்டே இருக்க வேண்டும். அதே சமயம் இனவாதமே தமது மூச்சாக இருப்பதை பௌத்த சிங்கள மக்களுக்கு இனங்காட்டிக் கொள்ளவும் வேண்டும். இது சிறிலங்காவின் ஆளும், மற்றும் எதிர்க்கட்சிகளின் நிரந்தர அரசியல் கோட்பாடாகவே நிலைத்து விட்டது எனலாம்.

கடன் வாங்கி கல்யாணம் செய்தவ ரின் நிலை தான் கடன் பட்டு போரை நடத்திய சிறிலங்காவின் நிலையும். கடன்படாது போரை யும் தொடர முடியாது. கடன்படாமல் அரசை யும் நடத்த முடியாது.

கடன் வழங்கும்: நிதி உதவி செய்யும் நாடுகளே சமாதானத்தையும் உபதேசித்துக் கொண்டு போருக்கு ஊக்குவிக்கும் வகையில், சிறிலங்காவுக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களையும் விற்று, கொடுத்த கடனை - நிதியை மீளவும் தந்திரோபாயமாகப் பெற்றுக் கொள்ளும் மூலோபாயத்தையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை வெளிப்படையான ஏமாற்று வேலையுமாகும்.

ஆனாலும் சிறிலங்காவின் பேரின வாதிகள் ஏமாளிகள் அல்ல... தனக்கு மூக்கு டைபட்டாலும் எதிரிக்கு சகுனப்பிழையாக அது இருக்க வேண்டுமென்றே நினைப்பவர்கள்.

பொ.ஐ. முன்னணியும் சரி. ஐ.தே.முன் னணியும் சரி ஆட்சிப்பீடத்தை- அதிகார பதவிக் கான கதிரையை இலக்கு வைத்தே போரையும் நடத்தி வந்துள்ளனர். சமாதானத்தைப்பற்றி பேசியும் வந்துள்ளன.

ஒவ்வொரு கட்டத்திலும் தமது அரசியல் வியாபாரத்திற்கு எது இலாபம் தருவதாக இருக்குமோ அதையே மேற் கொண்டு வந்துமுள்ளனர்.

சமாதானத்திற்கான யுத்தமாயினும் சரி, யுத்தத்திற்கான சமாதானமாயினும் சரி,

(23 ம் பக்கம் பார்க்க)

# கிழக்கின் துயரம்

அவர் ஒரு தொழில்முறை புகைப்படக்கலைஞர். கிழக்கைச் சேர்ந்தவர். சிறுவயதிலேயே தாயாரிடம் இருந்து பிரிந்து தகப்பனின் தாயாரோடு யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டார். அவர் வளரத் தொடங்கவும் சண்டையும் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. இயக்கத்துடன் தொடர்புகள் இருந்தபடியால் அவர் அதற்குப்பிறகு இராணுவத்தின் பிடியிலிருந்த தனது ஊருக்குப்போக முடியவில்லை. தாயார் இடைக்கிடை யாழ்ப்பாணம் வந்து போவார்.

ஒருமுறை யாழ்ப்பாணம் வந்த போது தாய் சொன்னார் இவருடைய தம்பி ஒருவரும் இயக்கத்தில் சேர்ந்து விட்டதாக. இதற்கும் பல ஆண்டுகளுக்குப்பின் ஒரு நாள் பத்திரிகையில் இவர் படித்த ஒரு வீரச்சாவுச்செய்தியில் பலாலிக்கூட்டுப் படைத்தளத்தின் மீதான தாக்குதலில் வீரச்சாவுற்ற ஒரு கரும்புலியின் சொந்தப்பெயர் அவருடைய தம்பியினுடையது போல இருந்தது. இது தவிர அவர் அடிக்கடி போய்வரும் நண்பர் ஒருவருடைய வீட்டில் மேற்சொன்ன கரும்புலிவீரரின் படம் வைக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டு இருந்தது. இவர் அவர்களிடம் கேட்டார்... "இது யார்?" என்று. அவர்கள் சொன்னார்கள் "இந்தக்கரும்புலியை உங்களுக்குத்தெரியும் அவர் அடிக்கடி எமது வீட்டுக்கு வருவார். அப்படி அவர் வந்துபோன சந்தர்ப்பங்கள் சிலவற்றில் நீங்களும் அவருடன் கதைத்திருக்கிறீர்கள்" என்று. இவர் மேற்கொண்டு எதையும் கதைக்கவில்லை.

சில மாதங்களின் பின்பு இவருடைய தாயார் கிழக்கிலிருந்து வந்தார். மேற்சொன்ன கரும்புலி இவருடைய தம்பி தான் என்றும் இது குறித்து தாய்க்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே அவர் யாழ்ப்பாணம் வந்ததாகவும் கூறப்பட்டது.

இவருக்கோ அதிர்ச்சி. தனது தம்பியின் படம் வைக்கப்பட்டிருந்த வீட்டுக்குப்போய் விசயத்தைச் சொன்னார். அவர்களோ நம்பத்தயாரில்லை. வித்தியாசமான முகச்சாயலோடு காணப்பட்ட இருசகோதரர்களும் இடைக்கிடை அந்த வீட்டில் சந்தித்திருக்கிறார்கள், கதைத்திருக்கிறார்கள். ஆனால் தாங்கள் யார் என்று தெரியாமலேயே......

இதுதான் கிழக்கின் துயரம். சிதறடிக்கப்பட்ட குடும்பங்கள், சிதைக்கப்பட்ட பெண்கள், கைவிடப்பட்டுக்காடுமண்டிய கிராமங்கள்..... இதுதான் கடந்த சில தசாப்தங்களாக கிழக்கின் கதியாக இருந்து வருகின்றது. முறிக்கப்பட்ட எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும் முதற்பலியாவது அனேகமாக கிழக்கே.

கிழக்கை தனிமைப்படுத்தி அழிப்பதென்பது கொழும்பிலிருந்த எல்லா அரசாங்கங்களினதும் மாறாத ஒரு மூலோபாயமாகக் காணப்படுகிறது.

எளிதில் படையெடுக்கப் படக்கூடிய நிலத்தொடர்ச்சியும், எப்பொழுதும் முற்றுகையிடப்படக் கூடிய தரைத்தோற்ற அமைப்பும், மூன்று இனங்களும் கலந்து வாழ்வதால் ரகசியங்களைப் பேண முடியாத ஒரு சூழலும் இவற்றுடன் முக்கியமாக படித்த ஆங்கில அறிவுடைய பலமான ஒரு மத்தியதரவர்க்கம் அதிகம் வளர்ச்சி பெறாத ஒரு சமூக அமைப்புமாக எல்லாமும் சேர்ந்து கிழக்கை தனிமைப் படுத்துவதும் வெளியுலகின் கவனத்தையும் சர்வதேச மீடியாக்களின் கவனத்தையும் அதிகம் ஈர்க்காதவிதத்தில் அங்கே அட்டூழியங்களைச்செய்வதும் கொழும்பு மையபடைத்துறை நிபுணர்களிற்கு எப்பொழுதும் வசதியாக இருந்து வந்துள்ளது.

இப்படித் தனிமைப்படுத்தப்பட்டு வேட்டையாடப்பட்ட கிழக்கின் தமிழர்களை நினைவு கூர்ந்து இன்று மட்டக்களப்பில் துக்கநாள் அனுஷ்டிக்கப்படுகிறது. கிழக்கின் கல்விச்சூழலைப்பொறுத்தவரை அதன் கேந்திரமையம் என்று கருதத்தக்க வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில், 1990இல் அகதிகளாய் ஒதுங்கியிருந்த 158 பேர் படையினரால் அழைத்துச்செல்லப்பட்டு கொல்லப்பட்டு நாவலடியில் புதைக்கப்பட்ட நாள் இன்றாகும். இதையொட்டி கிழக்கில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல்போன எல்லாத் தமிழர்களையும் நினைவு கூர்ந்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் இன்றைய நாளை ஒரு துக்க நாளாக அறிவித்திருக்கிறது.

பெருமளவிற்கு விவசாய பொருளாதாரத்தையுடைய அதிகம் நகர மயப்படாத கிழக்கில் ஒருபலமான படித்த, ஆங்கில அறிவுடைய மத்தியதரவர்க்கம் நகரங்களுக்கு வெளியே பெரியளவில் வளர்ச்சி பெற்றிராத ஒரு சூழலில் கிழக்கை மீடியாக்களிடம் இருந்தும் வெளியுலகிடமிருந்தும் தனிமைப்படுத்துவது சாத்தியமாகி இருந்து வந்துள்ளது.

ஆனால் வடக்கை, குறிப்பாக யாழ்ப்பாணத்தை இவ்விதம் தனிமைப்படுத்த முடிந்ததில்லை. அங்கு காணப்பட்ட படித்த பலமான ஒரு மத்தியதர வர்க்கமும், மிக நீண்ட பட்டே யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததாக ஒரு ஆய்வாளர் கூறுகிறார்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏதாவது நிகழ்ந்தால் அது மீடியாக்களின் தீனி ஆகிவிடும். உடனடியாகவோ அல்லது சற்றுப் பிந்தியோ அதுஒரு விவகாரமாகி வெளியரங்கமாகிவிடும். இதற்கு முன் சொன்ன மத்தியதர வர்க்கமே முதற்காரணம். அதோடு இந்த மத்தியதர வர்க்கத்தின் நோக்கு நிலையிலிருந்து வளர்ந்த யாழ்ப்பாணமைய பார்வையும் மற்றொரு காரணம்.

ஆனால் கிழக்கிலோ நிலைமை வேறு.

வடக்கில் ஒரு கிரிஷாந்தி விவகாரம் விஸ்வரூபம் எடுத்து செம்மணிப்புதைகுழிகள் வரை வந்து நின்றது. கிரிஷாந்தி யாழ்ப்பாணத்து மேல் மத்தியதர வர்க்கத்து பாடசாலையான சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவியாக இருந்ததும், அவருடைய குடும்பப்பின்னணி தமிழ்க் கொங்கிரஸ்க்கட்சியின் செல்வாக்கு வலயத்துக்குள் இருந்ததுமாகிய பல காரணங்களால் கிரிஷாந்தி ஒரு கட்டத்தில், யாழ்ப்பாணத்தில் காணாமல்போன எல்லாருக்குமான ஒரு குறியீடாக மாறினார்.

ஆனால் அம்பாறையில் இந்து சமயப்பாடப்புத்தகத்தில் தான் தோன்றீஸ்வரம் என்று தான் அறியப்பட்டது. ஆனால் பின்னர் அது அரசியல் வரலாற்றில் தமிழர்கள் இரு தடவை சுட்டுப்பொசுக்கப்பட்ட ஒரு தலம் என்பதாகவே பதிவாகியுள்ளது.

கொக்கட்டிச்சோலை தொடர்பாக ஒரு அமெரிக்கப்பெண் எழுதிய கவிதைகள் இங்கே இந்த இடத்தில் நினைவு கூரத்தக்கவை. **மெர்லீன் கிறைஸில** எனப்படும் அந்தப் பெண்மணி ஒரு சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதியாக அந்தப் பிரதேசத்தில் வேலை செய்துவந்த காலத்தில்தான் மேற்படி படுகொலை நிகழ்ந்தது. ஒரு வெளிநாட்டுச் சாட்சியாக அந்தப்படுகொலைகள் மீதான தனது மனஅதிர்வுகளை அவர் கவிதைகளாக வடித்தார். அவை **கொக்கட்டிச் சோலைக்கான கோவைகள்** (suite for Kokadi chcholai) என்ற தலைப்பில் புகழ் பெற்ற **கென்னியன் ரீவியூ** என்ற சஞ்சிகையில் பிரசுரமாகின. இது மிக அரிதான ஒரு நிகழ்ச்சி. மற்றும்படி கிழக்கில் குறிப்பாக அம்பாறையில் சிறப்பு அதிரடிப் படை(S.T.F) செய்த அக்கிரமங்கள் பல உடனடியாக சர்வதேச மீடியாக்களின் கவனத்தை ஈர்த்தது ஒப்பீட்டளவில் மிகக்குறைவே.



கல்விப்பாரம்பரியமும், ஒரு குறுகிய நிலப்பரப்பினுள் பெருமளவு சனங்கள் அடர்த்தியாக செறிந்து வாழ்ந்தமையும் போன்ற காரணங்களால் யாழ்ப்பாணம் எப்பொழுதும் வெளியுலகின் கவனத்தைத்தன்னை நோக்கி ஈர்த்து வைத்திருந்தது.

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதன் நவீன காலம் கிறிஸ்தவ மிஷன்களின் வருகையோடு தொடங்குகிறது. கிறிஸ்தவ மிஷன்களின் கல்விச்செயற்பாடுகளும் அவற்றுக்குப்போட்டியாக நாவலரும் 'இந்து போர்ட்'டும் மேற்கொண்ட கல்விச் செயற்பாடுகளும் சேர்ந்துவிடவும் ஒப்பீட்டளவில் அசாதாரணமாக உயர வைத்தன. இதுதான் யாழ்ப்பாணத்தின் கவர்ச்சி. இது காரணமாகவே யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் எவரும் அதைத்தமது ஷோக்கேஸ் ஆகமாற்ற முயல்கிறார்கள்.

ஆனால், கிழக்கின் நகரங்களில் கிறிஸ்த்தவ மிஷன்கள் ஓரளவிற்கு காலூன்றி இருந்தாலும் கூட பலமான குரலையுடைய ஒரு மத்தியதரவர்க்கத்தை உருவாக்கக் கூடியதாக நிலைமைகள் முழு அளவில் வளர்ந்திருக்கவில்லை. மட்டக்களப்பு காரைதீவைச்சேர்ந்த சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பை விட யாழ்ப்பாணத்தில் பலமாகக் காணப்பட்ட புலமைச்சூழலால் கவரப்

கோணேஸ்வரி சிதைக்கப்பட்ட பின் அவருடைய பிறப்புறுப்பில் கிரணைட் வெடிக்க வைத்துகொல்லப்பட்டது கிரிஷாந்தி அளவுக்கு உலகின் கவனத்தை ஈர்க்கவில்லை. கிழக்கின் கிரிஷாந்திகள் பலர் மீடியாக்களின் கவனத்தை ஈர்க்காது வரலாற்றின் குரூர இருளில் காணாமலே போய் விட்டார்கள்.

கோணேஸ்வரிக்கு சில கொழும்புத் தமிழ்ப்பத்திரிகைகள் அதிகரித்த முக்கியத்துவத்தை கொடுத்திருந்தாலும் கூட அந்த விவகாரம் கிரிஷாந்தி அளவிற்கு உலகின் மனச்சாட்சியை உலுப்பும் விதத்தில் வெளிக்கொண்டு வரப்படவில்லை.

> **இதுதான் கிழக்கின் துயரம். சிதறடிக்கப்பட்ட குடும்பங்கள், சிதைக்கப்பட்ட பெண்கள், கைவிடப்பட்டுக்காடுமண்டிய கிராமங்கள்..... இதுதான் கடந்த சில தசாப்தங்களாக கிழக்கின் கதியாக இருந்து வருகின்றது. முறிக்கப்பட்ட எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும் முதற்பலியாவது அனேகமாக கிழக்கே.**

இதில், கிழக்கிலுள்ள ஒரு பெண்ணிய செயற்பாட்டுக்குழு சிதைக்கப்பட்ட பெண்களின் ஆடைகளைச்சேகரித்து ஒரு கொடியில் தொங்கவிட்டு மிகவும் வித்தியாசமான, மிகவும் அதிர்ச்சியூட்டுகின்ற ஒரு ஆடைக்காட்சியை வைத்ததை இங்கே குறிப்பிடவேண்டும்.

இது தவிர; கொக்கட்டிச்சோலை படுகொலைகள் மீதான கவனத்தை ஈர்க்கும் விதத்தில் வெளிவந்த வெற்றி பெற்ற ஆவணங்கள் மற்றும் கலைப்படைப்புக்களின் தொகையும் ஒப்பீட்டளவில் குறைவே.

கொக்கட்டிச்சோலை முன்பு உரிய முறைப்படி ஆவணமாக்கப் பட்டதும் குறைவே.

**நிலாந்தன்**

அதிரடிப்படையுடனான அனுபவம் அனேகமாக வடக்கிற்கு இல்லை. பெரும்பாலும் படித்த சிங்களவர்கள் இதற்கென்று தெரிவு செய்யப்பட்டார்கள். ஜெயவர்த்தனவின் காலத்தில் அவரது மகன் ரவி தலைமையில் இது கட்டியெழுப்பப்பட்டது. போராளிகளிடம் இருந்து பொது சனங்களைப் பிரிப்பதென்றால் அதற்கு எப்படி யெப்படி சனங்களை திகிலுறச்செய்ய வேண்டும் பீதிக்குள்ளாக்க வேண்டும் என்பதற்குரிய விசேச பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

இது உணர்ச்சி வசப்பட்டு அக்கிரமங்களைச்செய்யும் ஒரு படையல்ல. மாறாக, புத்தி பூர்வமாக நன்கு திட்டமிட்டு உரிய துறைசார் நிபுணத்துவத்துடன் கொடுமைகள் செய்வதற்கென்று பயிற்றப்பட்டது இது.

கொலையை, வல்லுறவை, சித்திரவதையை ஒரு கலையாக செய்பவர்கள் இவர்கள். இவற்றை எவ்வளவு பயங்கரமானதாக செய்ய முடியுமோ அவ்வளவு பயங்கரமானதாகச்செய்வதற்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டது.

அம்பாறையில் ஒரு அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி அயலில் இருந்த ஒரு தமிழ்ப்பெண்ணை கவர்ந்து சென்று நிரந்தரமாக தனது இச்சைகளைத்தீர்த்துக்கொள்வதற்கு பயன்படுத்தினாராம். இவர் மாற்றலாகிப்போன போது அந்தப் பெண்ணை புதிய பொறுப்பதிகாரியிடம் கையளித்தாராம். அப்புதிய அதிகாரியும் தனது இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அந்தப் பெண்ணைத்தொடர்ச்சியாக பயன்படுத்தினாராம்.

ஆனால் இப்படியொரு நடைமுறை வடக்கில் பரிசோதிக்கப் படவில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியோடு சுமார் 600க்கும் குறையாத தமிழர்கள் அங்கே காணாமல்போனார்கள். கைதடியில் கிரிஷாந்தி, கோண்டாவிலில் ராஜினி போன்ற சிலசம்பவங்கள் வெளித் தெரியவந்தன. ஆனால் படித்த ஆங்கிலம் தெரிந்த யாழ்ப்பாணத்துக் கல்வீட்டு மத்தியதர வர்க்கத்தை கையாள்வதில் சந்திரிகா மிகவும் நிதானமாவும் முன்யோசனைகளோடும் நடந்து கொண்டார்.

அவருடைய சமாதானத்திற்கான யுத்த வியூகத்தில் யாழ்ப்பாணம் ஒரு உயிருள்ள ஷோக்கேஸாக மாறியது. எனவே அதற்கென்று தனிவிசேச கவனிப்பிருந்தது.

ஆனால், கிழக்கைப் பொறுத்தவரை சந்திரிகாவும் சரி பிறேமதாசவும் சரி ஜெயவர்த்தனவும் சரி அதைஒரு கொலைக்களமாகத்தான் வைத்திருந்தார்கள். என்றைக்குமே கிழக்கு ஒரு ஷோக்கேஸாக இருந்ததில்லை.

யுத்த காலங்களில் அது ஒருகொலைக்களம். சமாதான காலங்களில் அது எப்பொழுதும் எரிபற்று நிலையிலிருக்கும் ஒரு உணர்ச்சிஸ்த்தானம். இப்பொழுதும் சமாதானத்தைக் குழப்புவோர் வடக்கில் தமக்கு வேலை குறைவு என்று கருதுகிறார்கள். கிழக்கில் தான் எளிதில் தூண்டப்படக்கூடிய உணர்ச்சிப் புள்ளிகள் உண்டு. குரங்குபாஞ்சான், வடக்கு- கிழக்கு பிரிப்பு, தமிழ் முஸ்லிம் பதட்டத்தை கூட்டுவது என்றெல்லாம் சமாதானத்தைக்குழப்புவோர் அதிகம் விறுவிறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பது கிழக்கில் தான். நிலவும் சமாதான காலத்தில் காஞ்சிரம் குடாவில் நிகழ்ந்தவை போன்று சூட்டுச்சம்பவங்கள் எதுவும் வடக்கில் நிகழவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இத்தகைய ஒரு பின் புலத்திலேயே கிழக்கின் மீது முழு தமிழ்ச் சமூகத்தின் கவனத்தையும் குவிக்கும் விதத்திலும் முழு உலகினதும் மனச்சாட்சியை உலுப்பும் விதத்திலும், சர்வதேச மீடியாக்களின் கவனத்தை கோரும் விதத்திலும் இன்று **தமிழின உயிர்க்கொலைநாள** அனுஷ்டிக்கப்படுகின்றது.

கிழக்கின் தமிழர்கள் மட்டுமல்ல, வடக்கிலும், புலம்பெயர்ந்து பிறநாடுகளிலும் வாழும் எல்லாத் தமிழர்களும் இந்த நாளை ஒரு துக்க நாளாக அனுஷ்டித்து கிழக்கின் துயரை எல்லாரும் பகிர முன்வர வேண்டும்.

அதோடு, வடக்கிலும் கிழக்கிலும் கொல்லப்பட்ட எல்லாருக்குமாக ஒரு பொது நாள் அறிவிக்கப் பட வேண்டும்.

ஒருஆய்வாளர் கூறுவது போல வடக்குக்கும் கிழக்குக்கும் என்று ஒரு பொதுவான வழிபாட்டுத் தலம் அல்லது ஒருபொதுவான பண்டிகைக்கால, திருவிழாக்கால கூடுமிடம் இல்லை என்பதை இங்கே கவனிக்க வேண்டும்.

குறிப்பாக விசுவமடுவிலும் ஏனைய இடங்களிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் ஓரளவுக்கு அத்தகைய ஒரு பொதுவான சங்கமத்தலங்களாக காணப்படுகின்றன.

மாவீரர் நாள் இப்பொழுது வடக்குக்கும், கிழக்குக்கும், களத்துக்கும், புலத்துக்கும் ஒரு பொதுவான நினைவு நாளாக மாறியுள்ளது.

இந்நிலையில், போரில் கொல்லப்பட்ட மற்றும் காணாமலப் போன எல்லாத்தமிழர்களுக்குமாக ஒரு பொது நாள் அறிவிக்கப்பட வேண்டும்.

அதுவே மெய்யான அர்த்தத்தில் ஒரு தேசிய துக்க தினமாகமாறும். ●

வருவாயை மிஞ்சி, ஒருபோதும், வாரி வழங்கக்கூடாது. —லிஸரோ

# நறுக்கென...

## 'கடிர்காம'ப்பெருமாளின் 'கோயபல்ஸ்'தனம்



இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் போர்க்கால பிரச்சார நடவடிக்கைகளுக்குப்பொறுப்பாக இருந்தவர் கோயபல்ஸ்.

ஹிட்லரே பிரமித்து தலைசுற்றும் வகையில் பொய்ப்பிரச்சாரங்களை அவிழ்த்து விடுவதில் அவருக்கு நிகர் அவரே. அவர் ஒரு வரலாற்றுப்பொய்யர்.

ஆனால் கோயல்ஸே மயங்கிவிழும் அளவுக்கு பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொள்வதில் பல வல்லுநர்களை சிறிலங்காவின் பேரினவாத அரசுகள் காலத்திற்கு காலம் உருவாக்கியபெருமையும் உடையது.

லலித்அத்துலத்முதலி, ரஞ்சன்விஜரத்னா, சரத்முனசிங்க எனத்தொடரும் சிறிலங்கா கோயல்ஸ்களின் பட்டியலில் தற்போது வெற்றிகரமாக தனது இடத்தை தக்கவைத்திருக்கும் பெருமையை உடையவராக கடிர்காமர் விளங்குகிறார்.

சந்திரிகாவுக்குக்கிடைத்த, விசுவாசமான, நன்றியுணர்வு மிக்க, கருங்காலியாக செயற்படத்தயங்காத, பொய்யுரைக்க பின்நிற்காத வெளியுறவு ஆலோசகர் அவர்.

சிறிமாவுக்கு ஒரு குமாரசூரியர் என்றால் சந்திரிகாவுக்கு ஒரு கடிர்காமர் என வரலாற்றுப்புகழ்(?) மிக்க பாரம்பரியத்தின் வாரிசாக அவர், காக்கை வன்னியன் வழிவந்த மரபொழுக்கங்களைக் கச்சிதமாக கடைப்பிடித்து வருகின்றார்.

சந்திரிகாவின் ஆலோசகராக மட்டுமல்லாது இந்தியாவின் இலங்கை விவகாரங்களுக்கான ஆலோசகராகவும் இவர் அண்மைக்காலங்களில் தன்னைத்தானே நியமித்துக்கொண்டு செயற்படுகின்றார் போலும்.

அவரது பேச்சுக்களும் செயற்பாடுகளும், அறிக்கைகளும் அதனை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

அன்னாரின் அண்மைக்கால இந்தியப்பயணம் இந்தியாவை ஈழத்தமிழ்மக்களுக்கு எதிராக சினங்கொள்ளவைக்கும் - இந்தியாவை மீண்டும் சிக்கலுக்குள் மாட்டவைக்கும் மூலோபாயத்தை இலக்கு வைத்ததாகவே உள்ளது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

* "சிறிலங்காவில் வெளிநாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது"
* "இந்த வெளிநாட்டு ஊடுருவலுக்கு அரசும் (ரணிலின் அரசு) ஆதரவளித்து வருகிறது"
* "சிறிலங்காவின் விவகாரங்களில் முடிவெடுக்கும் நாடுகளாக நோர்வே,ஜப்பான் போன்ற நாடுகள் செயற்பட்டுவருகின்றன."
* "திருமலையில் இந்தியப்பராமரிப்பில் உள்ள எண்ணைக்குதங்களுக்கு விடுதலைப்புலிகளால்பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது"
* "மீண்டும் போர் ஏற்பட்டால் விடுதலைப்புலிகளை எவராலும் வெல்லமுடியாது"

இவையனைத்தும் அவர் இந்தியாவில் வைத்து இந்திய அரசுக்கு 'கேந்தியை உண்டு பண்ண' கூறிய கோயபல்ஸ்பாணி வார்த்தைகளாகும்.

ஐயா, கடிர்காமர்ப் பெருமாளே....மேற்குறிப்பிட்ட தங்களின் கருத்துக்கள் யாவும் தாங்கள் வெளியுறவு அமைச்சராக இருந்தகாலத்தில் சந்திரிகா அரசுமேற்கொண்ட நடவடிக்கைகளாலும் போரினாலும் ஏற்பட்ட விளைவுகள்தான் என தாங்கள் இந்தியாவுக்கு சொல்ல மறந்ததும் ஏனோ?

அம்மணி தொட்டுத் தொடங்கியதை ஐயா(ரணில்) தொடர்கிறார் அவ்வளவு தான்.

இது இந்தியாவுக்கு தெரியாத விடயமென்று நீங்கள் நினைத்தால் அது உங்களின் அரசியல் அறிவீனத்தின் வெளிப்பாடேயாகும்....

இந்தியாவில் உங்களைவிடவும் 'அப்பனான' சுப்பிரமணியசுவாமி போன்றவர் இப்படியெல்லாம் கோயபல்ஸையே விழுங்கி ஏப்பமிடும் ஆசாமிகளாக இருப்பதை உங்களுக்கு கூறிவைக்கவிரும்புகிறேன்.

என்ன புரிகிறதா?

அது சரி இதையெல்லாம் இந்தியாவுக்குக்கூற ஏற்கனவே வரதராஜப்பெருமாள் நிரந்தரக் குடிமகனாக அங்கேயே இருக்கிறாரே அவரின் பதவியை நீங்கள் அபகரிக்க முயலலாமா கடிர்காமப்பெருமாளே....?

## குரங்குப்பாஞ்சான் விவகாரத்தை விகாரமாக்க முயலும் சந்திரிகா



சர்ச்சைக்குரியதாயுள்ள குரங்குப்பாஞ்சான் முகாமைய கற்ற அரசாங்கம் சகல அதிகாரங்களையும் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு இறுதி உத்தரவை சனாதிபதி சந்திரிகா பிறப்பித் திருக்கிறார்.

அரசாங்கத்தின் அதிகார எல்லையும், அரசின் தற்போதைய சமாதானம் தொடர்பான தவிர்க்கவே முடியாத நிலைப்பாட்டையும் அம்மணி அறியாமலில்லை.

இராணுவரீதியிலான - ஏன் முப்படையினர் தொடர்பான - எந்த நடவடிக்கையையும் சனாதிபதியின் அங்கீகாரம் இன்றி செய்ய முடியாத அதிகாரமற்ற அரசாகவே ரணிலின் அரசு இயங்கிவருகிறது.

பெரும்பாலான முக்கியமான ஆட்சியதிகாரங்கள் மட்டுமல்ல எந்த விடயத்திலும் தீர்வினை எடுக்கும் அதிசக்தி வாய்ந்த நிறைவேற்று அதிகாரமும் சந்திரிகாவிடம் உள்ளது.

இந்த நிலையில் குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக எந்த நடவடிக்கைக்கும் ஆணையிட சந்திரிகாவின் அதிகாரம் வலுக்கொண்டதாகவே உள்ளது.

ஆனால் அதிகாரவளம் குன்றிய அரசிடம் சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி அந்த முகாமை அகற்றுமாறு அவர் கூறுகின்றார்.

இது ஒரு மூலோபாயத்தின் அடிப்படையில் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் கூறப்பட்ட உத்தரவே யாகும்.

தானே முப்படையினருக்கும் இதற்கான உத்தரவை வழங்கமுடியும். விடுதலைப் புலிகளின் எரிபொருள் கப்பலை சர்வதேசக்கடற்பரப்பில் வைத்து தாக்கியழிக்க உத்தரவிட்ட சந்திரிகாவால் இது முடியாதா?

ஆனால் அவரின் நோக்கம்

ரணிலை சிக்கலுக்குள் மாட்டி குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரத்தை இராணுவ நடவடிக்கைக்குரிய ஒன்றாக அவரை எண்ண வலியுறுத்துவதன் மூலம் மீண்டும் யுத்த நெருக்கடி ஒன்றை உருவாக்கி சமாதான நகர்வுகளுக்கு குந்தகம் விளைவிப்பதேயாகும்.

தானே அதற்கான உத்தரவை முப்படைத்தளபதி என்ற வகையில் படையினருக்கு இடமுடியும். ஆனால் தன்னை யாரும் சமாதானம் குழப்பியாக கருதிவிடக்கூடாது. இதுவே சந்திரிகாவின் நிலை.

இந்த முகாம் தொடர்பான விவகாரத்தை உரியமுறையில் தீர்க்க அரசுநடவடிக்கை எதுவும் எடுக்காது காலம் கடத்துவது தனக்கு ஏமாற்றத்தை அழிப்பதாகவும் - இது தொடர்பாக உரிய அதிகாரங்களைப்பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு வாரகாலத்தில் தனக்கு அது குறித்து அறிக்கை தருமாறும் அம்மணி கோரியுள்ளார்.

ரணிலின் ஆட்சியை இரண்டொரு மாதத்திற்குள் அகற்றி புதிய ஆட்சியொன்றை நிறுவ திரைமறைவு நடவடிக்கைகளை கடந்த சில மாதங்களாக திட்டமிட்டு வரும் சந்திரிகாவால், குரங்குப்பாஞ்சான் முகாமை தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி அகற்ற முடியாதா?

அவர் செய்யமாட்டார். அதனால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை அவர் அறிவார். அது அவரின் அரசியலுக்கு உகந்ததல்ல என்பதும் அவருக்குத்தெரியும்.

எனவே ரணிலை இந்த விவகாரப்பொறிக்குள் சிக்கவைப்பதே அவரின் நோக்கம்.

சமாதானத்தை ஏற்படுத்தியவரே போரையும் ஆரம்பிக்கவேண்டும் என்று சந்திரிகா கருதவும் கூடும். அப்போது 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற சந்திரிகா தத்துவம் மீண்டும் உயிர்ப்படையும் ... 'எரிகிற வீட்டில்' அரசியல் லாபம்பெற்று பதவிச்சொகுசை அனுபவிக்கலாம் என்றே சந்திரிகாவின் ராஜதந்திரம் திட்டமிடுகின்றது போலும்!

குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில் தான் குரங்குச்சேட்டை விடாது தப்பித்துக்கொண்டு 'ரணிலை' அதைச்செய்யத்தூண்டுகிறார் அவ்வளவுதான்.

## ல.ச.ச கட்சி தலைவரின் காலங்கடந்த ஞானோதயம்



**கண்கெட்ட பின்னர்** சூரிய வணக்கம் செய்ய முயற்சித்தல் அல்லது காலங்கடந்த ஞானோதயம் என்ற உவமானங்கள் இலங்கையின் இடதுசாரிகளுக்கு - சிறப்பாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக்கட்சியினருக்கு வெகுவாகப்பொருந்தும்.

இலட்சியங்களை அலட்சியப்படுத்தி சந்தர்ப்பவாதிகளாகி மூன்றாந்தர அரசியல்வாதிகளாக தம்மை இனங்காட்டி விட்ட பின்னர் - மக்களால் நிராகரிக்கப்பட்டு, கூட்டுக்கட்சியால் ஒதுக்கப்பட்ட நிலையில் மீண்டும் சித்தம் தெளிந்துஒரு இடைக்கால சித்தாந்தம் பேசுவதென்பது இவர்களுக்கு கைவந்த கலை. ஏன் சிங்கள இடதுசாரி தலைமைகளின் ஒரு பாரம்பரியமாகவும் இது உள்ளது.

பேரினவாத அரசியல் சக்திகளின் அச்சுறுத்தல் களுக்குப்பணிந்தோ அல்லது அபிலாசைகளுக்கு ஆதரவளித்தோ தமது சமாதானக்கோட்பாட்டை - தத்துவத்தை அவ்வப்போது காற்றில் பறக்கவிட்டு, சிறுபான்மை மக்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என வர்ணித்தபடி அவர்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறையை தீவிரப்படுத்தும் 'சந்திரிகா இனத்'தை தாளம் போட்டு ஆதரித்தவர்கள் இவர்கள் தான்.

இந்த வகையில் சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக தமிழ்மக்களுக்கு பெரும் நம்பிக்கைத்துரோகத்தை செய்த பெருமைக்குரியவர்கள் லங்கா சமசமாஜக்கட்சியினர் தான்.

சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் புதிய குடியரசுக்கான அரசியல் யாப்பு உருவாக்கத்தின்போது, இவர்கள் பேரினவாத, பௌத்தமதவாத சிந்தனையாளராக தம்மை வரித்துக்கொண்டு ஆற்றியபங்கு மறக்கவோ மன்னிக்கவோ முடியாத சமதர்ம சிந்தனையாளர்களுக்கும் தத்துவாசிரியர்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் செய்த பச்சைத் துரோகமாகும்.

அதுமட்டுமல்ல உண்மையில் இடதுசாரிச்சமதர்ம சித்தாந்தங்களில் ஆழ்ந்த பிடிப்புக்கொண்ட சொற்ப மார்க்ஸீயவாதிகளையும், தேசிய உணர்வு கொண்டவர்களையும் சிங்களப்பேரினவாதிகளுக்கும், பௌத்த சிந்தனையாளர்களுக்கும் எதிரிகளாகவும் துரோகிகளாகவும் இனங்காட்டமுற்பட்டவர்களும் இவர்களேதான்...

இந்த வரலாற்றுத் துரோகத்தை குடியரசு அரசியல்யாப்பை முதலில் உருவாக்கி ஆரம்பித்துவைத்தவர் "ஒரு மொழியெனில் இருநாடு, இருமொழியெனில் ஒரு நாடு" என்று தத்துவம் பேசி, சிறுபான்மையினரின் நம்பிக்கைக்குரிய ஒருவராக விளங்கி, பின் அவர்களை படுமோசமாக ஏமாற்றிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவேதான்.

சிறிமாவுடன் இணைந்து தமிழ்மக்களை ல.ச.ச.கட்சியினர் பேய்க்காட்டினார்கள். ஒதுக்கினார்கள். இப்போது சந்திரிகா ஜே.வி.பி யுடன் பேசுவதன் மூலம் ல.ச.ச. கட்சியினரை புறந்தள்ளியுள்ளார். இப்போது வெட்கங்கெட்டு அவமானப்பட்ட நிலையில் எதிர்வரவுள்ள மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தனித்துப்போட்டியிடப்போவதாக இப்போதைய அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தன்னம்பிக்கையுடன் சுயமான தனித்துவக்கொள்ளைகளை முன்வைத்து போட்டியிட முடியாது அக்கொள்ளைகளுக்கு நேர்விரோதமான சில சுதந்திரக்கட்சியுடன் ஒட்டிக்கொண்டு பதவிச்சுகம் அனுபவித்தவர்கள் மீண்டும் தனித்துவம் பேச முற்படுவது கோமாளித்தனமாகும்...

பட்டிவீரக்கோன் அவர்களே கூட்டுச்சேர சிகலஉறுமய போன்ற கட்சிகள் இன்னமும் இருக்கின்றனவே...

முயற்சித்தால் என்ன?

மூன்றாந்தர அரசியல்வாதிகளான பின், முக்காடு எதற்கு?

**செங்குட்டுவன்**

## மதவடி மயிலர்



**செய்தி :-** *ஈராக்கை சீரமைக்கச்சென்றவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு ஐ.நா. பலத்த கண்டனம்!*

**மயிலர்:-** மெத்தச்சரிதான்... ஆனால் ஈராக்கைச் சீர்குலைக்கச் சென்றவர்கள் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு அநீதிகளுக்கும் ஐ.நா பலத்த கண்டனத்தை தெரிவித்திருந்தால் பாராட்டலாம்...அப்படி நடக்கேல்லையே...! அவர்கள் ஐ.நாவின் கண்டனத்தை கண்டுகொள்பவர்களாகவும் இல்லைத்தானே.... வெட்டுறவனைக் கண்டிக்கப் பயம். ஆனா குட்டுறவனைக் கண்டிக்க தீவிரம்.... இதுதான் அரசியல் பாருங்கோ...

**செய்தி:-** *இலங்கைக்கு மீண்டும் இந்தியா படைகளை அனுப்பமாட்டாது என்கிறார் இலங்கைக்கான இந்தியத்தூதர்.*

**மயிலர்:-** சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது எண்டது உண்மைதான் பாருங்கோ... ஆனாலும் ருசிகண்ட பூனைக்கு அடிவிழுந்தாலும் கூட அப்பப்ப ஆசை வாயூறவைக்கத்தான் செய்யும் வீட்டுக்காறன் தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்...

**செய்தி:-** *சமாதான நடவடிக்கைகள் குறித்து வெளிநாடுகளில் நம்பிக்கையை ஏற்படுத்த அரசுமுயற்சி.*

**மயிலர்:-** உள்ளூரிலை விலைபோகாதமாட்டை வெளியூரிலை ஏமாற்றி விற்கிற வேலை தான் இது பாருங்கோ... முதல்ல சிங்கள பேரினவாதிகளுக்கும் பௌத்த பீடங்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தாமல்...? உதுசரிப்படாது பாருங்கோ...!

**செய்தி:-** *கூட்டு ஏற்படுத்துவதில் காலதாமதம் சுதந்திரக்கட்சி மீது ஜே.வி.பி. அதிருப்தி.*

**மயிலர்:-** ஆளை ஆள்மாட்ட நினைக்கும் சுயநலத்துடன் கூட்டு வைக்கப்போனால் இதுதான் நிலை பாருங்கோ. அதிருப்தியாளர்களுக்கிடையேயான உடன்பாடுகள் திருப்தியாக இருக்கமுடியுமே? 'ஓட்டு'க்காக ஏற்படுத்தப்படும் 'ஒட்டு'க்கள் சுட்டமண்ணும் பச்சைமண்ணும் மாதிரித்தான் இருக்கும்.

இன்பம் பொருள்களில் அல்ல. நம்மிடம் உள்ளது. - ரிச்சர்ட் வேக்னர்

# அந்தப் பேரவலமும் தன் நீட்சியும்









**கடந்த** மாதம் அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் அடுத்தடுத்து சில மணி நேரம் நீடித்த மின்வெட்டுப் பற்றிய பரபரப்பான செய்திகள் ஊடகங்களின் தலைப்பை பிடித்திருந்தன. அந்தச் செய்திகளைப் படித்த போதுதான் ஞாபகத்தில் வந்தது, நாளை செப்ரெம்பர் பிறக்கப்போகிறது என்பது.

இப்போது இதைப்படிக்கும் போது உங்களுக்கு எது ஞாபகத்தில் வருகின்றது? சந்தேகமில்லை, 2001 இன் செப்ரெம்பர்,11 காட்சிகள் உங்கள் மனத்திரையில் உதித்திருக்கும். அமெரிக்கா என்றதும் எல்லோர் கண்களுக்குள்ளும் ஓடோடிவரும் அந்த இரட்டைக் கோபுரங்கள், தீப்பிளம்பாகி ஆயிரக்கணக்கான மனித உயிர்களுடன் அவலமாகப் பாறிவீழ்ந்த அன்றைய நாளில் இப்போது நீங்கள் இருப்பீர்கள்

அது உலகின் மிகவும் கோரமானதொரு நாள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அது வெறும் அமெரிக்கர்களின் அவலமாகத்தான் எல்லோராலும் நோக்கப்பட்டது. ஆனால் அது மனிதர்களின் அவலம். ஜப்பானின் நகரங்களில் அணுகுண்டுகள் வீசப்பட்டது போல மனுக்குலத்தின் கறைபடிந்ததொரு அத்தியாயம் அது. ஒரு திகில்நிறைந்த திரைப்படத்தைப் போல அன்று உலகின் மூலைமுடுக்குகளில் இருந்த மக்களெல்லாம் கண்ணுற்ற அந்தக் காட்சிகளின் நீட்சியாய் எத்தனையோ விடயங்கள் நடந்தேறிவருகின்றன. மானுட வரலாற்றின் அசைவில் ஒரு பெரிய மாற்றத்தை அந்த நாள் ஏற்படுத்தி விட்டது.

இரட்டைக் கோபுரங்களில் அவலக்குரலெழுப்பி மடிந்த பல்லாயிரம் உயிர்களின் மீதிருந்து ஒரு பீனிக்ஸ் பறவையைப்போல மீண்டெழுந்தது, பிணம் தின்னும் கழுகு. அது பிரச்சினையின் மூலவேர் தானே என்பதை நிராகரித்து, அதன் பெயரால் உலகளாவிய யுத்தத்தைப் பிரகடனம் செய்தது. அவலத்தில் இருந்து அமைதியைத் தேடுவதற்குப்பதிலாக பேரவலத்தை நோக்கி அது உலகை இட்டுச்சென்றது.

இரட்டைக்கோபுரங்கள் ஒரு சில நிமிடங்களில் பாறிவீழ்ந்தது போல சரிவுற்ற தனது பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தி, உலகில் தனது ஏகபோகத்தை வியாபிப்பதற்கான வாய்ப்பாக அமெரிக்கா "செப்ரெம்பர், 11" ஐ மாற்றிக்கொண்டது. ஆப்கானிஸ்தானில் வெற்றிகரமாகவே எல்லாம் தொடக்கி வைக்கப்பட்டன. அவலத்தின் கருவியான ஒசாமா பின்லாடனின் குகைநோக்கியதென்பதால் அமெரிக்காவின் உணர்வுகள் அப்போது பொறுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் உலகில் எங்கெங்கெல்லாம் தனது மூக்கை நுழைக்க அமெரிக்காவுக்கு சங்கடமாக இருந்ததோ அங்கங்கெல்லாம் சுலபமாக புகுந்து கொள்வதற்கான கதவுகளை அது திறக்கத் தொடங்கியது. அடுத்து ஈராக்கிலும் யுத்தம் பிரகடனம் ஆயிற்று.

அமெரிக்காவிற்கு ஆரம்பத்தில் எல்லாம் மகிழ்ச்சிகரமாகவே இருந்தன. சதாமின் சிலைகளை இடித்துப்பிரட்டி அதன் தோழ்களில் அமர்ந்து ஆகாய வீதியில் சவாரிபுரிந்த தமது வீரர்களின் சாகசக் காட்சிகளைக் கண்டு புல்லரித்து நின்றார்கள் அமெரிக்கர்கள். அப்போதெல்லாம் அமெரிக்க இராஜ தந்திரிகள் "செப்ரெம்பர்,11" ஐ எண்ணி உள்ளூர மகிழ்ந்தவர்களாகவும், பின்லேடனுக்கு நன்றி கூறுபவர்கள் போன றும் காணப்பட்டார்கள்.

2003 மே 01- இல் ஈராக்கை ஆக் கிரமித்து கலிபோர்னிய கரையில் தரித்து நின்ற தனது நாட்டின் விமானம் தாங்கிக் கப்பலில் நின்று 5,000 படையினர் புடைசூழ "ஈராக்கில் முக்கியமான போர்நடவடிக்கைகள் ஓய்ந்துவிட்டன. ஈராக் போரில் அமெரிக்காவும் எமது கூட்டுப்படையினரும் வெற்றிப்பெற்றுவிட்டனர்." என்று பிரகடனம் செய்த அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் அதன் பின்னான நாட்களை இத்தனை தூரம் சவால் நிறைந்ததாக எதிர்பார்த்திருக்கவில்லை.



வெற்றிக்களிப்புடன் வளைகுடா நாடுகளுக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ராம்ஸ் பெல்ட் தன்னை செவ்விகண்ட ஊடகவியலாளரின் ஒளிப்பதிவுக்கருவி யூடாக உலகை நோக்கி பிரகடனம் செய்தார் "பாரியஅழிவு ஆயுதங்களை வைத்திருப்பது அல்லது பயங்கரவாதப் பட்டியலில் இருப்பது அல்லது பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புகளை வைத்திருப்பது போன்றவற்றை தமது நாடுகளுக்கு நல்லதொரு விடையமென எண்ணியிருக்கும் நாடுகளுக்கு அவ்வாறு எண்ணிப்பார்க்கக் கூடாது என்பதை அவர்களுக்கு வலியுறுத்துவதற்கான பிரச்சார நடவடிக்கைதான் ஈராக் மீதான போர்" என்று.

ஆனால் இப்போது நடப்பவையோ எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டன. அமெரிக்க சனாதிபதி பிரகடனம் செய்த வெற்றியை கேலிசெய்வது போலவும், பாதுகாப்பு அமைச்சர் கூறியதற்கு மாறாக அமெரிக்காவைநோக்கியே அது வேறு விதமாக பிரச்சாரம்செய்வது போலவும் இப்போதைய நிலைமைகள் அமைந்துவிட்டன.

நாளுக்கு நாள் அமெரிக்க, பிரிட்டிஸ் துருப்புக்கள் ஈராக் வீதிகளில்செத்துமடியும் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஈராக் மக்களின் அவலக்குரல்களுக்கு நிகராக அமெரிக்கத் துருப்புகளினதும் அவர்களது உறவுகளினதும் கதறல்களும் கேட்கின்றன. அங்கொன்று இங்கொன்றாகத் தொடங்கிய தாக்குதல்கள் இப்போது எங்கும் வியாபித்துவிட்டன. ஒன்று இரண்டாக உயிர்களைப் பலிகொண்ட தாக்குதல்கள் ஒரேதடவையில் பல டசின் கணக்கில் பலி கொள்வனவாக வீச்சுப் பெற்றுவிட்டன. சாமானியர்களில் தொடங்கி மிக முக்கிய புள்ளிகள் கூட இப்போது அங்கு மடிந்து வீழ்கிறார்கள்.

ஈராக்கில் அமெரிக்காவிற்கு மன நிம்மதியை அளிப்பதாகவும், மார்தட்டக் கூடிய வெற்றியாகவும் சதாமின் புதல்வர்கள் இருவரும் ஒரே சமயத்தில் கொல்லப்பட்ட தாக்குதல் அமைந்தது. தனக்கான அச்சுறுத்தலின் பெரும்பகுதி தீர்க்கப்பட்டுவிடும் என அமெரிக்கா எதிர்பார்த்தது. "சதாம் இனிமேலும் ஒரு கெட்ட செய்தியாக இருக்கமாட்டார் அவர் அகற்றப்படுவதற்காகக் காத்திருக்கும் குப்பையின் ஒரு பகுதியே" என 'ரொய்டருக்கு' மார்தட்டிக் கூறிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவலின் வார்த்தைகளில் அமெரிக்கர்களால் திருப்தி காண முடியாதபடி முன்னரிலும் தீவிரமாக இப்போது தாக்குதல்கள் தொடர்கின்றன. "சதாம் பற்றிய தகவல்களை வழங்குவத்ன் மூலம் கோடீஸ்வரராகுங்கள்" என பெருமெடுப்பில் பிரச்சாரம் செய்து, ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிறிமர் எடுக்கும் நடவடிக்கைகளில் ஒரு வேளை வெற்றி கிட்டினாலும் கூட அமெரிக்காவால் சகதியிலிருந்து மீளமுடியும் போல் தெரியவில்லை.

அத்தகையதொரு உணர்வு நிலையையே ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தரைப்படைத் தளபதி லெப்.ஜெனரல் ரிக்காடோ சன்ஷெஸ் கடந்த மாதம் முற்பகுதியில் சீ.என்.என் இற்கு வழங்கிய செவ்வியில் வெளிப்படுத்தியிருந்தார். அவர் கூறுகிறார் "எமக்கு இங்கு பல்வேறு வகைப்பட்ட மோதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இங்கு பயங்கரவாதிகளது செயற்பாடுகள் உள்ளன. சதாம் குசையினின் தலைமையின் கீழான தாக்குதல்கள் மற்றும் குற்றவாளிகளது செயற்பாடுகள் என்பன உள்ளன. இதைவிட நாள்தோறும் எமது படைகளுக்கு எதிராக தாக்குதலை நடத்தும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கொலையாளிகளும் உள்ளனர்.அமெரிக்கர்களை இலக்குவைக்கும் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளுக்கு, அமெரிக்கப்படைகள் நிலைகொண்டுள்ள ஈராக், அவர்களை ஈர்க்கும் காந்தமாக மாறிவருகிறது."

இவ்வாறுதான் "செப்ரெம்பர்,11" இப்போது நீட்சி பெற்றுச் செல்கிறது. அதன் விளைவுகள் இப்போதும் மனித உயிர்களை வீழ்த்தியபடியே இருக்கின்றன. பல தசாப்தங்களின் முன்னர் வியட்நாமில் அமெரிக்கர்கள் அனுபவித்தவற்றை மீட்டிப்பார்க்க வைக்கிறது. போரின் விளைவுகளால் தமது அரசியல் வாழ்வில் பாரிய நெருக்கடிகளை சந்தித்துநிற்கும் அமெரிக்க, பிரித்தானிய தலைவர்கள் அவர்களது பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டாலும் அவர்களது செயல்களால் விளைந்தவற்றிலிருந்து மக்கள் மீள்வதற்கான வாய்ப்புகள் அரிதாகத்தான் தெரிகின்றன. இவற்றுக்கெல்லாம் எப்போது முடிவு கிட்டுமெனில், இரண்டு வருடங்களின் முன் இரட்டைக் கோபுரங்களில் வானம் அதிரும்படி அவலக்குரலெடுத்துக் கதறிய ஆயிரம் ஆயிரம் மனிதர்களின் குரல்கள் தமக்கெதிரானவையே என வல்லரசர்கள் புரிந்து கொள்ளும் போது மட்டுமே.

**இளநிலவன்**

---

# சொல்லியே தீரவேண்டும்

கடந்த மாதம் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி டாக்காவில் தென்ஆசிய பெண்கள் மாநாடு நடைபெற்றது.

'அதையேன் இங்குசொல்லியே தீரவேண்டியிருக்கிறது. தினந்தோறும் எத்தனை மாநாடுகள் நடைபெறுகின்றன' என்று யாராவது கேட்கக்கூடும்.

மாநாட்டிற்கு ஒன்றும் இல்லைத்தான். அது நல்ல படியாக நடந்ததாகத்தான் கேள்வி. ஆனால் இலங்கைத்தமிழ்ப் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தி அந்த மாநாடு நடக்க வில்லை, வாய்ப்பளிக்கப்படவில்லை.

'வாய்ப்பளிக்கப்படாததற்கு என்னம்மா செய்ய முடியும்?' என்று நீங்கள் கேட்கக்கூடும் தான். ஆனால்... ஆனால் வடக்கு - கிழக்கிலும் அதற்கு அப்பாலும் இயங்குகின்ற அரச சார்பற்ற பெண்அமைப்புகளுக்கு, அதன் நிர்வாகிகளுக்கு, இந்த விடயம் தெரியுமா என்றுதான் கேட்க விரும்புகின்றேன்.

தெரிந்திருந்தால் சூடு சொறனை இருந்திருந்தால் அது வெளிப்பட்டிருக்க வேண்டுமே.

ஏன் இப்படி சொல்ல வேண்டியிருக்கிறது என்றால் இலங்கை சார்பாக சிங்கள இனத் தைச்சேர்ந்த பெண் அமைப்புகளின் மூன்று பெண்கள் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். சிங்களப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைத்திருக் கிறார்கள். அதன் பலன்களையும் அறுவடைசெய்வார்கள்.

இப்படியிருக்க 1993ஆம் ஆண்டு இம்மாநாடு முதன் முதலில் நடக்கத்தொடங்கியதிலிருந்து வருடந்தோறும் தொடர் ந்து இது நடந்து வருகிறது. தமிழ்ப்பெண்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை.

அப்படிப்பார்த்தால் கடந்த பத்துஆண்டுகளில் இன வன்முறையால் தென்னாசியப் பிராந்தியத்திலேயே அதிகம் பாதிக் கப்பட்டவர்கள் வடக்கு கிழக்கு தமிழ்ப் பெண்கள்தான். தென் னாசியாவில் இந்தப் பத்தாண்டுகளில் மிகமோசமாகவும் தொடர்ச் சியாகவும் யுத்தம் நடந்த பூமியும் வடக்குகிழக்கு தான்.

இந்தப் பத்தாண்டில் இப்பிராந்தியத்தில் அதிக தடவை அதிக மக்கள் இடம் பெயர்ந்ததும் இங்குதான்.

நான் நினைக்கிறேன் தென்னாசியாவில் விகிதாசார அடிப்படையில் இளம் வயதில் விதவைகள் ஆக்கப்பட்ட பெண் களும் இங்குதான் அதிகம் என்று.

ஒரு சமூகம் தன் இயல்பான வாழ்விலிருந்து சிதைக் கப்படும் போது அந்தச்சிதைவில் முதல் பலியாகுபவர்கள் பெண் கள் தான்.

இப்படியெல்லாம் இருக்க தமிழ்ப்பெண்களுக்கு பிரதி நிதித்துவம் தரப்படவில்லை என்பது வேதனைக்குரியது. ஆனால் பெண்களுக்கு சமூகத்தில் சம அந்தஸ்த்து பெற்றுக்கொடுக்க உழைக்கும் அரசசார்பற்ற பெண்கள் அமைப்புகள் இம்மாநாட்டில் தமது பிரதிநிதித்துவ அந்தஸ்த்தை சமஅளவில் இல்லாவிட் டாலும் ஒன்றையேனும் ஏன் பெறமுடியாது போயின. பெண்களின் சமூக பொருளாதார அரசியல் மீட்சிக்காக போராடுவதாக, பாடு படுவதாக கூறிக்கொள்ளும் இவர்கள் தமது பிரதிநிதித்துவத்திற் காக ஏன் இன்றுவரை போராடவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்குள் நுழைந்து எமது பெண் களின் அவலத்தை விற்று தமக்கான அந்தஸ்த்தை மட்டும் பெற்று பகட்டாக பெண்ணியச்சிந்தனையாளர், சேவகி என்று உலாவரும் இவர்கள் வெளியரங்கில் எமது பெண்களின் பிரச்சினையை வெளிக்கொண்டுவர முனையவில்லை.

திராணியற்ற இவர்கள் எமது தமிழ்ப் பெண்களின் முகமாக (Rubber Stamp) இருப்பதை எண்ணி அழுவதைத்தவிர வேறென்ன எங்களால் செய்ய இருக்கிறது.

சக்தி மிக்கவர்கள் இது விடயத்தில் முன் கை எடுத்தால் உண்டு இல்லையேல் இல்லை.

**கோஷி**

# பொற்பதி கிராமத்தை முற்றுகைக்குள்ளாக்க முயலும் படைகள்

**இன்று** வரையும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஒவ்வொரு முக்கிய நகரங்களும் இராணுவ பாதுகாப்பு வலயங்களாகவே உள்ளன. யாழ்ப்பாண நகரம், காங்கேசன்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்றன யாழ்ப்பாணத்தின் பிரதான நகர்களாக உள்ளன.

இந்த ஒவ்வொரு நகரிலும் சிறிலங்கா இராணுவத்தினரின் மிகப் பெரிய படைத்தளங்கள் உள்ளன. அவற்றுக்கு அண்மையில் சுற்றிவர இருக்கும் வீடுகள், பொதுக்கட்டடங்கள் என்பன படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இங்கெல்லாம் மக்கள் மீதான அவர்களின் கெடுபிடிகள் குறைந்தாக இல்லை.




புரிந்துணர்வு உடன்பாட்டிற்குப் பின்பு தளர்த்தப்பட்ட இராணுவக் கடும்பிடி, இப்போது மீண்டும் எல்லா இடங்களிலும் இறுகத்தொடங் கியிருக்கிறது. ஒப்பீட்டளவில் வடமராட்சி பகுதி மக்கள் மீது இக்கடும்பிடி அதிகமானதாக உள்ளது. சிறிலங்காப்படையினரால் குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டதில் இருந்து வடமராட்சியின் ஒவ்வொரு பகுதியும் அதிகம் கெடுபிடிகளுக்கு உள்ளாகி இருக்கிறது. அது இன்றைய சமாதானத்துக்கான காலத்திலும் குறிப்பிடும்படியாகத்தணியவில்லை என்றே சொல்லலாம்.

ஒருகுறிப்பிட்ட காலம் வரை புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப்பின் சற்றுத்தளர்வு இருந்ததாகவும், கடந்த ஏப்ரலில் பொங்கு தமிழுக்கான ஏற்பாடுகள் ஆரம்பித்ததும் அது பழையபடி இறுகத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது. அதேகாலப்பகுதியில்தான் சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் இரண்டாவது கப்பலையும் கடற்படையினர் மூழ்கடித்தனர்.

அத்தோடு அதிக பகுதிகள் இத்தகைய நிலைக்குள்ளாகின.

அப்போது முதல் முக்கிய இடங்களில் வீதிச்சோதனைகள் இடம் பெறுகின்றன. குறிப்பிட்ட சில கிராமங்களுக்குச் செல்லும் வாகனங்கள் சிறிலங்கா பொலிசாரால் பதிவுசெய்யப்படுகின்றன.

வடமராட்சியின் பருத்தித்துறையில் சிறிலங்காப்படையினரின் 524 வது படைப்பிரிவுத்தளம் அமைந்துள்ளது. இதனால், ஏற்கனவே அந்நகரின் இருபிரபல பாடசாலைகள் இராணுவ முற்றுகைக்குள் உள்ளன. உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறிக்கொள்ளும் அப்பகுதிக்குள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களைத் தவிர வேறெவரும் உள்நுழைய முடியாத நிலையே உள்ளது.

அவசியம் அங்கே செல்ல வேண்டும் எனில் மூன்று நாள்களுக்கு முன்பாகவே ஆதாரங்களோடு காரணங்களை விளக்கி முன் அனுமதி பெறவேண்டும் என 524வது படைப்பிரிவு ஒழுங்கு முறைகளை அறிவித்திருக்கிறது. இதைவிட பருத்தித்துறையில் நூற்றுக்கணக்கான வீடுகள், ஆலயங்கள் என்பன படையினரின் பிரசன்னத்திற்கு மட்டுமே உரியனவாக இருக்கின்றன.

இதே கதியில்தான் வல்வெட்டித்துறையும் உள்ளது. நகர மத்தியில் படைத்தளமும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகள் படைத்தளத்துள் சேர்க்கப்பட்டவையும் என இராணுவ முற்றுகையில் இருக்கிறது. இவைதவிர வடமராட்சியின் பல கிராமங்களும் சிறுசிறு படைநிலைகளோடு இருக்கின்றன.

இப்போது நகர்ப்பகுதியில் இருந்து ஒதுங்கியிருக்கும் கிராமப்புறங்களில் படையினர் தமது தளங்களை விஸ்தரித்துவருகின்றனர். அதில் பெருமெடுப்பில் புதிதாக இராணுவ முகாம் அமைக்கப்படத்தொடங்கிய இடமாக அண்மையில் குடத்தனை வடக்கு பொற்பதி கிராமம் பரபரப்பிற்குள்ளானது.



வடமராட்சியின் பிரபல்யமான நகர்ப்பகுதிகளில் இருந்து மிகத் தொலைவான பொற்பதி கரையோரப் பிரதேசமாகும். ஏறத்தாழ இருநூறு வரையான மீனவக்குடும்பங்களை மட்டுமே கொண்ட பொற்பதி சராசரி வசதியான வீதிப் போக்குவரத்தைக் கூட வடமராட்சியின் ஏனைய நகரங்களோடு கொண்டிருக்கவில்லை.

இக்கிராமத்தின் கடற்கரை பகுதியில் மட்டுமே படையினர் குடாநாட்டை ஆக்கிரமித்த காலம் முதல் முகாமிட்டிருந்தனர். நடுத்தர அளவிலான அந்த முகாமுக்காக அதனருகே இருந்த வசதியான கல்வீடுகளையும் படையினர் எடுத்திருந்தார்கள். முகாமை அண்டியபகுதியில் ஒரு வாசல் மட்டும் விடப்பட்டு கடற்தொழிலுக்கு அதனூடாக மீனவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த முகாமையே கடந்த மாதம் படையினர் விஸ்தரிக்க முயன்றார்கள். பொற்பதியில் உள்ள இருநூறு வீடுகளையும் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைத்து காவலரண்கள் அமைக்கப் படத்தொடங்கவே, மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள். இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை அப்பகுதி மக்களை முழுமையாக முற்றுகைக்குள் வைத்திருக்கும் நோக்கம் கொண்டதாகும்.



உடனடியாகவே மக்கள் அனைவரும் கையொப்பமிட்டு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு, போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு என்பவற்றுக்கு தமது ஆட்சேப மனுக்களை அனுப்பினார்கள். இவ்விரு அமைப்புக்களும் பொற்பதி கிராமத்துக்குச்சென்று நிலைமைகளை அவதானித்தன. பதிவுகளை மேற்கொண்டன.

ஆனால், சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு படைத்தரப்பின் பக்கம் சாய்வாக கருத்து தெரிவித்ததாக அப்பகுதி மக்கள் விசனப்படுகின்றனர்.

எவ்வாறாயினும் விஸ்தரிக்கப்பட்ட பொற்பதி படைமுகாம் பணிகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளன. ஆயினும் புதிதாக அமைக்கப்பட்ட சிறுசிறு குடிசை வடிவிலான நிலைகள் அவ்வவ்விடங்களில் காணப்படுகின்றன. தினமும் படையினர் அவற்றை வந்து பார்த்துச் செல்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய கிராம மக்களின் அன்றாட இயற்கைக்கடன்களுக்கு அதன் சுற்றுப்புற சிறு காடுகளே பயன்படுகின்றன. அவற்றிலே படையினர் காவல் நிலைகளை அமைப்பதோ தங்கியிருப்பதோ இயல்புக்கு முரணான நெருக்கடிகளையே உண்டு பண்ணும்.

ஆனால், படையினரோ தொடர்ந்து தளத்தை விரிவாக்கும் நோக்குடனே இருக்கிறார்கள். இதற்காக மக்கள் அமைதியாக எதிர்ப்பின்றி அங்கிருக்க வேண்டும் என்கிறார்கள். முகாம் விரிவாக்கத்தை எதிர்த்து மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றுக்கு கொடுத்த மகஜர்களை மீளப்பெறுமாறு கூறுகின்றனர்.

கடற்தொழில் சமாசப் பிரதிநிதிகள், மற்றும் சில பொதுமக்களை படையினர் இதற்காக அச்சுறுத்தி வருகிறார்கள். ஆனால், பொற்பதி கிராமமக்களோ அது விடயத்தில் உறுதியாகத் தெரிவிக்கிறார்கள் படையினர் அங்கு இருப்பதையோ தளங்களை விஸ்தரிப்பதையோ தாம் விரும்பவில்லை என்று.

**ஞாபகன்**

---

## நேர்நோக்கு

# பொங்கு தமிழுக்கு இடையூறு...

வவுனியாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வுக்கு இடையூறுகளை விளைவிக்க சிறிலங்கா இராணுவம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. முதலில் பொங்கு தமிழ் ஏற்பாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட அரசாங்க ஊழியர்களை மிரட்டும் வகையில் அவர்களிடம் விளக்கம் கோரிய இராணுவத் தரப்பு பின்னர் அரசாங்க ஊழியர்களும் மாணவர்களும் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளக் கூடாது என உத்தரவு பிறப்பித்தது.

இது தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளையும் தனி மனித உரிமைகளையும் அப்பட்டமாக மீறும் செயலாகும். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட முன்னர் தமிழ் மக்களால் தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்த முடிந்த ஒரேயொரு அரங்காக "பொங்கு தமிழே" இருந்தது. இராணுவக்கட்டுப்பாட்டில் ஆயுதம் தாங்கிய பெருமளவான படையினர் மத்தியில் நெருக்குவாரம் பட்ட தமிழ் மக்கள் நிராயுதபாணிகளாக நின்று முதலாவது பொங்கு தமிழை நடத்தினர். தமது உள்ளத்து உணர்வுகளை உலகிற்கு வெளிப்படுத்தினர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட ஒவ்வொரு பிரதேசத்திலும் புலம் பெயர் தமிழ்மக்கள் வாழும் நாடுகளிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை வெளிப்படுத்தும் நிகழ்வாக "பொங்கு தமிழ்" இடம் பெற்றது.

இந்தவகையில் கடந்த வருடம்நடந்த பொங்கு தமிழ் நிகழ்வுகள் சிலவற்றில் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டு நிகழ்வுகளைப்பார்வையிட்டும் இருகின்றனர்.பின்னர் இனவாதிகள் இந்த நிகழ்வுகள் புலிகளின் பிரச்சாரக்கூட்டங்கள் என்று வலியுறுத்த ஆரம்பித்ததும் மறைமுகமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடத் தொடங்கினர்.

பொங்கு தமிழ் நிகழ்வு முற்று முழுதாக மக்களால் ஒழுங்கு படுத்தப்பட்டு தமது தேவைகள் அபிலாசைகள் குறித்து சனநாயக ரீதியில் வெளிப்படுத்தும் நிகழ்வு என நடுநிலையான பார்வையாளர்கள் பலர் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

ஆனால் இதில் வைக்கப்படும் கோசங்கள் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை ஒத்ததாக இருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை. ஏனெனில் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை வென்றெடுக்க முயலும் - அதற்குத்தலைமை தாங்கும் அமைப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் இருப்பதே காரணமாகும்.

அவ்வாறு புலிகள் அரசியல் நிகழ்வுகளை அல்லது கலாச்சார நிகழ்வுகளை நடத்தினாலும் அதனைப்படையினர் தடுப்பது எவ்வகையில் நியாயமானதாக இருக்கும்? புலிகளை ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு சனநாயக வழிக்குத்திரும்புமாறு கோரும் போது அவர்கள் மென்முறை ரீதியாக தமது அரசியல் குறிக்கோளை அடையபோராடக்கூடாது என எவரும் தடுக்கமுடியாது.

இந்நிலையில் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த நடாத்தும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு முட்டுக்கட்டை போட இராணுவத்துக்கு எந்தவித உரிமையும் கிடையாது.

தென்னிலங்கையில் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக ஜே.வி.பியும், ஏனைய இனவாத அமைப்புகளும் பாதயாத்திரைகளும் கிராமத் தரிசிப்புகளும் நடத்திவருகின்றன. இதற்கு பாதுகாப்பு வழங்கும் படையினர் தமிழ் மக்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும், அதற்கு வலுச்சேர்க்கும் விதத்திலும் நடத்தும் பொங்கு தமிழுக்கு இடையூறு விளைவிப்பதேன்?

சமாதானத்துக்கு எதிராக சனநாயக வழியில் செயற்படும் அமைப்புகள் தென்னிலங்கையில் போராட்டங்களை நடத்த முடியுமானால் சமாதானத்துக்கு ஆதரவாக தமிழ் மக்கள் ஏன் போராட்டங்களை நடத்தக்கூடாது? சமாதானத்துக்காக கோஷமிடும் பொங்கு தமிழை அனுமதிக்க மறுப்பவர்கள் சமாதானத்திற்கு எதிராக யுத்தத்தை வலியுறுத்தும் தென்னிலங்கை கோஷங்களை அனுமதிப்பதேன்?

இந்நிலையில் படையினரின் இந் நடவடிக்கையானது தமிழ் மக்கள் மத்தியில் சிறிலங்கா படையினர் சமாதானத்தை விரும்பவில்லையா? தமிழ்மக்கள் உரிமையுடன் வாழ்வதை விரும்பவில்லையா? தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களாக ஆயுத முனையில் வைத்திருப்பதையா சிறிலங்கா இராணுவம் விரும்புகிறது? போன்ற பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

சனநாயக வழியில் - அமைதி வழியில் போராடும் மக்களை அடக்க நினைப்பது அவர்களை எங்கு கொண்டு செல்லும் என்பதற்கு உதாரணத்தை எங்கும் தேடத்தேவையில்லை. இங்கேயே அது உள்ளது.

**வேலவன்**

சாவில்கொண்டுள்ள அச்சத்தில், சிலபேர் வாழவே தொடங்குவதில்லை. -ஹென்றிவேன்டைக்.

# குரங்குப்பாஞ்சானில்

# கண்காணிப்புக்குழு ஆப்பிழுத்ததா?



குரங்குப்பாஞ்சான் புலிகள் முகாம் அகற்றப்பட வேண்டும் என சனாதிபதி பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில் குரங்குப்பாஞ்சான் புலிகள் முகாமை அகற்றுவதற்கு தான் உறுதியான முயற்சிகளை எடுத்து வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

புலிகளோ ஏற்கனவே தமது முடிவு ஒரு நெகிழ்வுக்குட்படுத்த முடியாதது என்ற தொனியில் பதில் கொடுத்திருந்தனர்.

இப்பொழுது கண்காணிப்புக் குழு புலிகளிடம் புதிய ஆலோசனை ஒன்றை முன்வைத்திருக்கின்றது. அது மூன்றாம் தரப்பிடம் அல்லது கண்காணிப்புக் குழுவிடம் அப்பிரதேசத்தைக்கையளிப்பது பற்றியதே என்று அறியப்படுகின்றது.

பிரான்சில் வைத்து அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனை விசேட தூதுவர் ளிக்சூல்கெய்ம் சந்தித்த போது இது பற்றி மீண்டும் கதைத்திருக்கிறார்.

இவ்வாரம் வெளியாகிய விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு '2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இப்பகுதியிலுள்ள தங்கள் முகாமை தாக்க வந்த படையினரை எதிர்தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்தியதாகவும் அதில் வீரச்சாவடைந்த தமது இரு போராளிகளுடைய வித்துடல் அந்த முகாமிலேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் அதன் பின் அம்முகாமை மேலும் பலப்படுத்தி சமாதான காலம் வரை தாம் இருந்தமை படைத்தரப்பிற்கே தெரியும் என்றும் கூறுகின்றது.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் அப்பகுதி புலிகள் வசமே இருந்ததென்று பாராளுமன்றத்தில் இரு வாரங்களின் முன் உரையாற்றியிருந்தார்.

கண்காணிப்புக்குழு தனது தீர்மானத்திற்கு முன் நேர்மையான முறையில் அப்பகுதி மக்களிடம் கூட ஒரு பரந்த விசாரணையை நடத்தியிருக்கமுடியும் என்கிறார் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு.திலக்.

யுத்த நிறுத்தம் அமுலாகிய போது இந்த முகாமிலிருந்து எட்டுக்கிலோமீற்றருக்கு அப்பாலேயே இராணுவத்தின் முன்னணிக் காவலரண் இருந்தது; இருக்கிறது.

இது பற்றிய நிலைமைகள் இப்படியிருக்க இராணுவம் ஏன் குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்ற வேண்டும் என வற்புறுத்துகிறது என்பதை விளங்க வேண்டும்.

என்றும் இல்லாதளவு புலிகள் கிழக்கில் கவனம் செலுத்துவதாக இராணுவம் நம்புகிறது. அதனால் அஞ்சுகிறது.

திருகோணமலைத்துறைமுகமும் நகரமும் இப்பொழுதுள்ள புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பரப்பை வைத்துப் பார்த்தால் சுற்றிவளைக்கவல்ல ஒரு வியூகத்திற்குள் இருப்பது போலத் தெரியும்.

புலிகளின் அந்த கேந்திர இடங்கள் புறப்படு தளமாக அமையக் கூடியனவாகவும், கடல் தாக்குதலில் ஈடுபட வல்ல முக்கிய அமைவிடங்களாகவும், மட்டக்களப்பு வாகரை நிலப்பரப்பினூடு ஒரு விநியோக மார்க்கத்தை பேணக்கூடியதாகவும் இருக்கின்றன என்றே இராணுவம் அஞ்சுகிறது.

யுத்த நிறுத்தத்திற்கு முந்திய காலத்திலும் புலிகள் - இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு நிலப்பரப்புக்கள் இவ்வாறே தான் இருந்தன. ஆனால் அது அப்போது இராணுவத்தினரின் பாதுகாப்புக்கு பலவீனமானதாக இருக்கவில்லை. துறைமுகத்திற்கோ, நகரிற்கோ அச்சுறுத்தலாக இருக்கவில்லை என்றே இராணுவம் உணர்ந்திருந்தது.

அப்பொழுது புலிகளின் படைச்சக்தி வன்னிப்போர் முனையில் மையம் கொண்டிருந்தது. புலிகளும் - இராணுவத்தினரும் வன்னிப்போர் முனையில் தமது படை வலுக்களை ஒருமுகப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் இருந்தன. எனவே கிழக்கிலோ அதில் திருகோணமலையிலோ புலிகள் ஒரு சமரை நடத்தக்கூடியவாறு அல்லது பிரதேசத்தைக் கைப்பற்றக் கூடியவாறு நிலைமை இருக்கவில்லை. இராணுவத்தின் நிலைமையும் இதுதான். எனவே படைத்தரப்பு அத்தகைய ஒரு களச்சூழலில் தேவையான பாதுகாப்பிற்கு ஏற்ப தனது முன்னணிக் காலரண்களை அமைத்துக் கொண்டது.

இப்பொழுது நிலமை அதுவல்ல. புலிகளின் படைச்சக்தி கிழக்கில் பலமாக நிறுத்தப்பட்டுள்ளது. அது மேலும் பலம் பெற்று வருகிறது. ஓயாத அலைகள் மூன்றின் பின் வன்னியில் தமது பலத்தை ஒருமுகப்படுத்தி வைத்திருக்க வேண்டிய தேவை புலிகளுக்கு முன்னரைப்போல் இருக்கவில்லை. இப்பொழுது அறவே தேவையில்லை.

ஒரு சமரை நடத்தக்கூடிய படைச்சக்தியை புலிகள் கிழக்கில் இப்பொழுது பெற்றிருக்கும்போதுதான் புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பரப்பை, முகாம்களை மூலோபாய அர்த்தத்தில் பார்க்க வேண்டிய கட்டாயம் இராணுவத்தரப்பிற்கு எழுந்திருக்கிறது.

இந்தப்பின்னணியிலிருந்து தான் இராணுவத்திற்கு குரங்குப்பாஞ்சான் அகற்றப்பட வேண்டிய புலிகள் முகாமாகியிருக்கிறது. அந்த முகாமின் அமைவிடமும் குளம், அணைக்கட்டு என்ற இயற்கையான பாதுகாப்பு அமைப்பும் மேலும் அச்சுறுத்தலுக்குரிய ஒன்றாகிவிட்டது.

இந்நிலையில் தான் கண்காணிப்புக்குழு குரங்குப்பாஞ்சானை மூன்றாந்தரப்பிடம் கையளிக்க ஆலோசனை வழங்கியிருக்கிறது.

இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்காக இராணுவம் படிப்படியாக மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பை விட்டு அகலவேண்டும் என்பது யுத்த நிறுத்த உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்ட விடயம்.

ஆனால் அந்நிலப்பரப்புக்கள் உயர் பாதுகாப்பு வலயங்கள் என வரையறை செய்யப்பட்டு மக்கள் தமது நிலங்களில் மீளக்குடியேறுவது மனிதாபிமானமற்ற முறையில் தடுக்கப்பட்டது. இதற்கு கண்காணிப்புக்குழு ஒருவகையில் ஆதரவளித்ததென்றும் சொல்லலாம். ஏனெனில் முன்னாள் கண்காணிப்புக் குழுத்தலைவர் உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவம் அகல்வது இராணுவ வலுச்சமநிலையைப் பாதிக்கும் என்று வியாக்கியானம் அளித்தார்.

சமாதானத்தின் உயிரூட்டமான மீள் குடியேற்றம் ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருந்தும் கூட அது மனிதாபிமானக் கண்கொண்டு நோக்கப்படாமல் இராணுவ வலுச்சமநிலை யோடு நோக்கிய கண்காணிப்புக்குழு மனிதாபிமான பிரச்சினையேதுமற்ற குரங்குப்பாஞ்சானை அதன் மெய்யான அர்த்தத்தில் இராணுவவலுச் சமநிலையில் வைத்து ஏன் விளங்கத் தவறியது.

குரங்குப்பாஞ்சானை கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கும் ஆலோசனையை ஏன் உயர்பாதுகாப்பு வலய விடயத்தில் முன் வைக்கத்தவறினர். கண்காணிப்புக்குழுவே அந்த மனிதாபிமானப் பிரச்சினையை பொறுப்பேற்று செய்திருக்கலாம் இல்லையா.

கண்காணிப்புக்குழு உரிய முறையில் பிச்சினையை அணுகாது தாம் விடுத்த அறிவிப்பை பின்வாங்காது புலிகளை அதற்கு இட்டுச்செல்ல முனைவது பேச்சில்புலிகளின் ஸ்தானத்தைப் பலவீனப்படுத்தும். முன்னர் நடந்த சில கடல் சம்பவங்களுக்கு கண்காணிப்புக்குழுவின் அறிவுறுத்தற்படி இராணுவத்தரப்பு இயங்காதபோது அதுஒரு விவகாரமாக்கப்பட்டிராத போது இதனைப்புலிகள் ஏற்பது அதன் இராணுவரீதியான கேந்திரத்திற்கும் அப்பால் புலிகளின் ஸ்தானத்தைப் பலவீனப் படுத்துவதாகவே அமையும்.

கண்காணிப்புக்குழு தனது அறிவிப்பை பின்வாங்குவது சிங்கள மக்கள் மத்தியில் தனது ஸ்தானத்தை பேண வழிவகுக்காது என எண்ணுவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இது சிங்களமக்களை தமது நிலைப்பாட்டில் உற்சாகமடையத் தூண்டுமே தவிர சமாதானத்தின் தர்க்க பூர்வமான யதார்த்தத்திற்கு அவர்களை இட்டு வருவதற்கல்ல.

மறுவளத்தில் உயர் பாதுகாப்பு வலயம் இராணுவ வலுச் சமநிலையில் நியாயப்ப டுத்தப்பட்ட போது தமிழ் மக்கள் கண்காணிப்புக் குழுவில் கவனம் கொள்ளத் தொடங்கினர். அப்போது தமது மீள் வாழ்விற்கு முன் வைக்காத தெரிவை (மூன்றாம் தரப்பிடம் கையளிக்கும் ஆலோசனை) இப்போது குரங்குப் பாஞ்சானுக்காக முன்வைக்கும் போது அது தமிழ் மக்கள் கண்காணிப்புக் குழுவில் சந்தேகம் கொள்ள வழி வகுத்து விடுகிறது.

சமாதானத்தில் மூன்றாந் தரப்பின் பாத்திரம் ஒடுக்குபவனின் இராணுவ பலத்தை பாதுகாப்பதில் அடங்கியிருக்கவில்லை. ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாப்பான வாழ்விற்கு உத்தரவாதம் அளிப்பதில் தான் அடங்கியிருக்கின்றது.

இவை எல்லா வற்றையும் ஒதுக்கி விட்டு கண்காணிப்புக்குழுவின் ஆலோச னையைப் பார்த்தாலும் இராணுவ வலுச்சமநிலையைப் பாதிக்கும் கேந்திர இடம் ஒன்றை கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் கையளிப்பது பொருந்தி வரக்கூடியதல்ல.

ஏனெனில் யுத்த நிறுத்தத்தின் அடுத்த கட்டம் இரண்டு நிகழ்தகவுகளைக் கொண்டது. ஒன்று நிரந்தரத்தீர்வு மற்றது மீண்டும் யுத்தம்.

சரியளவோ அதன் மேலோ யுத்தத்திற்கான வாய்ப்பும் இருக்கும் போது குரங்குப்பாஞ்சானை கண்காணிப்புக்குழுவிடம் கையளித்தால் யுத்தம் வரும் போது அப்பிரதேசத்தை கண்காணிப்புக்குழு யாரிடம் கையளிக்கும். அல்லது அதற்கென்று ஒரு வாய்ப்பிருக்குமா. அல்லது அதன் நிலை என்னவாகும். நிச்சயம் அது புலிகளுக்கு சாதகமாக இருக்கமாட்டா.

தவிரவும் விடுதலைப் புலிகளிடம் இது குறித்த முன்அனுபவம் ஒன்றுண்டு. யாழ். குடாநாட்டில் 'சேந்தாங்குளம் பகுதியை தொண்ணூறுகளின் முற்பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் நடு நிலைமையோடு ஒரு யுத்த சூனியப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி இருதரப்பும் கைச்சாத்திட்டிருந்தது. (இதன் படி இராணுவ முஸ்தீபுகளும் இதில் இருக்கக்கூடாது) துறைமுகத்தில் இருந்து உணவுப்பொருள் தொடரணி வருவதற்காகவே இது ஏற்பாடாகியது.

ஆனால், 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் இந்த யுத்த சூனியப் பிரதேசத்தை பயன்படுத்தி 'புயல் காற்று' நடவடிக்கையை இராணுவம் செய்ததுடன் வெற்றிகரமாக பல பகுதிகளையும் அது விழுங்கிக் கொண்டது.

விடுதலைப்புலிகள் இந்த ஒப்பந்தமீறல் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்த போது அது இலங்கையின் இறைமைக்குட்பட்ட விடயம், எம்மால் பிழையென்று தெரிவிக்கலாமே தவிர தீர்மானம் எடுப்பதற்கு எம்மிடம் அதிகாரமில்லை என்று பதிலளிக்கப்பட்டது.

இந்த பதிலில் பொய்யில்லை. ஆனால் கண்காணிப்புக்குழு ஆலோசனைக்கு புலிகள் உட்படவேண்டும் என யாரும் நினைத்தால் வரலாற்றில் தமிழருக்கு மீளவும் அதே போன்றதொரு பதில் கிடைக்கும் என்பதும் பொய்யில்லை.

**ஜீ.கே**

## ஒகோ! அப்படியா!



நூர்தீன் மசூர் பேட்டியில்

"நாம் பிரிந்து நின்றால் எமது சமூகம் ஏமாற்றப்பட்டுவிடும். இதனால் எமக்குத்தான் பாதிப்பு. இதனால் மு.கா.வில் மீண்டும் இணைத்தேன்"



ஜே.வி.பி.யின் ஊர்வலத்தில்

நாட்டை விற்கும் துரோகிகளைத் துரத்துவோம்'



சிவசேனத்தலைவர் பால்தக்கரே. பேட்டியில்.

"பாதிஸ்தான் தீவிரவாதிகளை ஒடுக்க இந்தியா புலிகளைப் பயன் படுத்தலாம்"



அத்வாணி செய்தியாளர்களிடம்

"அயோத்தியில் இராமர் ஆலயம் அமைப்பதற்காக ஆட்சியை இழக்க முடியாது."



ரவூப்ஹக்கீம் சம்மாந்தர பொதுக் கூட்டத்தில்.

"புலிகளைப்பார்க்கும் அதே பார்வையில் ஜே.வி.பியையும் பார்க்கிறோம்."



சந்திரிகா. பௌத்தர்களின் சின்னங்களை பாதுகாத்தல் என்ற பொருளில் உரையாற்றியபோது.

"வடக்கு கிழக்கு பகுதிகளில் புராதன காலத்தில் . இருந்து சிங்கள மக்கள் குடியிருந்தார்கள். தற்போது அப்பகுதியைத் தமிழர்கள் ஆக்கிரமித்துள்ளனர்."



சு.க. பொது செயலர் மைந்திரிபால சிறிசேன செயதியாளர்களுக்கு

"எங்கள் கட்சியில் கருத்து வேறுபாடுகள் இல்லை."



# கூத்துக்கலைஞர் 'சரவணபவன்' அவருடனான நேர்காணல்

நேர்கண்டவர்
கருணைரவி

# "நகரமயமாக்கலால் அண்ணாவி மரபு அற்றுக் கொண்டு போவது கவலை தருகிறது"

முன்பு எனது குடும்பம் சரியான கஸ்டம். படித்துப்படித்தே அரிவுவெட்டுக்குப்போறனான். அப்ப எங்கட சிறுபராயத்துக் காலத்திலை பரத்தை வெட்டு என்று சொல்லுவார்கள். 50, 60 பேர் களத்தில இறங்குவார்கள். அதுவொரு சந்தோசம். களைப்புத் தெரியாது. அலுப்பிருக்காது. ஆட்டமும் பாட்டுமென்றாலும் கை சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும்.

நாங்கள் எல்லாரும் சேர்ந்து வெட்ட ஒருவர் மத்தளத்தை பின்புறமாக நின்று அடித்துக்கொண்டிருப்பார். முதலில வணக்கப்பாட்டுதான் பாடுகிறனாங்கள். பெருந்தெய்வங்களையும் சிறு தெய்வங்களையும் என அம்மன் சிந்து, ஐயனார் சிந்து, முருகையன் சிந்து, வீரபத்திரர் சிந்துவென பள்ளு, பன்றிப் பள்ளுவென இருக்கும்- "இந்தப் பன்றிப்பள்ளு'' பாடேக்கை எங்களுக்கு சரியான பயம். - பன்றி வந்துவிடுமென்று.அதே போலதான் ''மழையிரங்கல் பாட்டுப்பாட மழையும் வருமென்ற நம்பிக்கை.

"பந்துபோல உருண்டே -
தனிப்பன்றியுமோடி
வந்ததுவே''

இப்படியான பாடல்களைக்கேட்கும் போது எனக்கு அதன் மேலே சரியான விருப்பம்.இந்த வாய்மொழி மரபுப் பாடல்களின் சிறப்புகள் என்னவென்றால் வன்னியில் உள்ள ஊர், பேர், கோயில்கள் எல்லாம் வரும். ஆனால் இந்தப்பாடல்களின் சொந்தக்காரர் யாரென்பது தான் இது வரைக்கும் தெரியாது.

அரிவுவெட்டுக்காலம் முடிந்தவுடனும் தான் ஊர்வழிய கோயில் வழிய கழிப்பாட்டங்கள் தொடங்கும். கூத்துகள், கரகங்கள்,காவடிகள் என ஒரே கொண்டாட்டங்கள். எனக்கு இந்த எதுகை மோனைகளில் சரியான பிடிப்பு. 15,16 வயதுகளிலேயே வந்து விட்டன.

எனது 12ஆவது வயதில் "மந்திரி குமாரி" எனும் புராண நாடகத்தில் நடித்தேன். புதுக்குடியிருப்பு சீ.சீ.த.க. பாடசாலையில் தான் அரங்கேற்றப்பட்டது. என்ன பாத்திரத்தில் நடித்தேன் என்பது ஞாபகத்திலில்லை.

நான் பத்தாம் வகுப்பு பாஸ்பண்ணி விட்டு தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் உயர் தரம் படித்தேன். அப்ப நான் நாடகங்கள் எதிலும் நடிக்கவில்லை. காரணம் கஸ்ரத்தின் மத்தியில் கவனமெல்லாம் படிப்பிலேயே இருந்தது.

உயர்தரம் பாஸ்பண்ணி விட்டு பேராதனைப்பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது பேராசிரியர் 'சு.வித்தியானந்தன்'அவர்கள் "கர்ணன் போர்" எனும் நாட்டுக் கூத்தை மேடையேற்றினார். பேராசிரியர் "சண்முகதாஸ்" "பேராசிரியர் சி.மௌனகுரு'' ஆகியோரும் அதில் நடித்தார்கள். வடமோடிக்கூத்து மரபில், பாடல்களையும் வடமோடியாக ஆட்டங்களையும் தழுவியிருந்தது.

அடுத்து - "நொண்டி நாடகம்'' தென்மோடிப்பாங்கில் ஆடப்பட்டது. இவைகளைப் பார்த்தபோது எனக்கும் பங்குபற்ற வேணும் போலயிருந்தது. அந்த இரு மோடிகளும் "முல்லைமோடி" யோடு ஒத்திசைவாக அதன் எல்லாஅம்சங்களுமிருந்தது.

சு.வித்தியானந்தன் அவர்கள் "இராவணேசன்" எனும் வடமோடிக்கூத்தை அரங்கேற்றுவதற்காக பாத்திரத்தேர்வு நடத்தினார். தாளக்கட்டுக்கு நான் ஆடுறதைப்பார்த்து உடனே என்னை ஆடுமென தீர்மானித்து "கும்பகர்ணனாக" நடிக்க வைத்தார். இராவணனாக "பேராசிரியர் சி. மௌனகுரு" அவர்கள் நடித்தார். குறுகிய காலத்துக்குள் பழகி 25 மேடைகளுக்கு மேல் இலங்கையெங்கும் மேடையேற்றப்பட்டது.

இக்கூத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் இக்கூத்தானது கிராமப்புறங்களில் விடிய விடிய ஆடப்படுகின்றது. ஆனால் இதைச்சுருக்கி ஒன்றரை மணித்தியாலங்களுக்கு கொண்டு வந்து நகர மக்களையும்பார்த்து ரசிக்கக்கூடியதாக மாற்றியமைத்தது மட்டுமன்றி "வட்டக்களரி"யில் ஆடக்கூடிய கூத்தை அரங்குக்கு கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் பெண் பாத்திரங்களை பெண்களாகவே நடிக்கவைத்ததுமாகும்.

அதுமட்டுமல்ல அடிப்படை மரபை மீறாமல் சில நவீன இசைக்கருவிகளும் உபயோகிக்கப் பட்டது. மத்தளம் பாவிக்கப்படும். அதோடு முரசு, சல்லாரி, தேரோட்டத்திற்கு பொருத்தமானதாக சிரட்டைகளும் பாவிக்கப்பட்டது. ''லைற்'', ''மேக்கப்''எனவும் பிற்பாட்டுக்காரர்களையும் மேடையின் இரு கரைகளிலும் தோன்ற வைக்கப்பட்டது. "பேராசிரியர் சண்முகதாஸ்" அவர்களும் கலாச் சாரப்பணிப்பாளராகப் பணிபுரிந்த "எதிர்மன்னசிங்கம்'' அவர்களும் தலைப்பாகை கட்டிக்கொண்டு பக்கப்பாட்டுக்கு நின்றார்கள்.

மட்டக்களப்புக்குச் சொந்தமான "வடமோடி" ஆட்ட முறைகளில் நன்கு பரிச்சயமானவர்களோடு நானும் "மலை" நாட்டைச் சேர்ந்த "செல்வநாயகம்" அவர்களும் தான் வடமோடியில் பரிச்சயம் இல்லாதவர்கள். இருந்தும் முல்லைமோடியில் பழக்கப்பட்ட எனக்கும் பழக்கப்படாத செல்வநாயகத்துக்கும் அந்த மோடி சுலபமாக இருந்தது. - ஏனென்றால் "முல்லைமோடிக்கு" ஒத்திசைவாகத்தான் வடமோடியும் இருந்தது.

நான் நடித்த "இராவணேசன்'' நாடகத்தை புதுக்குடியிருப்பில் நான் நெறியாள்கை செய்து மேடையேற்றினேன். - நடித்தவர்கள் அனைவரும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழைய மாணவர்கள் - அதிபர் செ.ரவீந்திரராசா இராமனாகவும் அதிபர் செல்வநாயகம் இராவணனாகவும், அதிபர் விக்னேஸ்வரன் அங்கதனாகவும், ஆசிரியை பிலோமினா மண்டோதரியாகவும் நடித்தார்கள். இந்த நாடகத்தை 2002ஆம் ஆண்டு "புலிகளின் குரல்'' மாதாந்த 'முத்தமிழ்க் கலையரங்கம்' நிகழ்வில் புதுக்குடியிருப்பு C.Cயில் மேடையேற்றப்பட்டது. இதில் இராமனாக நடித்தவருக்கு சிறந்த நடிகர் என்ற விருதும் கிடைத்தது.

நவீனத்துவம் என்ற பதத்தில் மோடிகளிலேயே சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், எங்கள் பிரதேசத்து "முல்லை மோடியில்'' எந்த மாற்றங்களுமில்லை. "வட்டக்களரியில்" தான் மாற்றம் செய்யப் பட்டிருக்கிறது.



'கூத்துக்கலை அற்றுப் போகிறதே.... இங்கொரு அண்ணாவி மரபு கட்டிக்காக்கப்பட வேணுமெனவும் எமது பாரம்பரிய கலைவடிவங்கள் பாதுகாக்கப்பட வேணும் என ஆதங்கப்படுமிவர், வன்னிக்கலைகள்.... வளங்கள் என்பனவற்றில் அதிக அக்கறை கொண்டு 1975ஆம் ஆண்டு "வன்னி வளக்கலை விழா" வை நடாத்தி பல அண்ணாவிமாரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்து பலரின் கவனத்தைப்பெற்றவர். "பிரதிக்கல்விப்பணிப்பாளராக தற்போது பணிபுரிகிறார் - வன்னிப்பெரும் நிலப்பரப்பில் நீண்ட காலமாக நாட்டார் வழக்கியல் கற்பித்தல் தொடர்பாக ஆய்வுகளில் ஈடுபடுமிவருடன் சிலமணி நேரங்கள் பகிர்ந்தனவற்றிலிருந்து....

பெரும்பாலும் கூத்துக்கள் என்றால் முன்பு சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் தான் ஆடப்படுகிறது. ஏனென்றால் அப்ப விவசாயிகள் ஓய்வாக இருப்பார்கள். ஆனால் இப்ப எல்லா நேரங்களிலும் ஆடப்படுகின்றது.

காத்தவராயன்சிந்து எங்கடமரபல்ல. இந்தப்பிரதேசத்துக்குரியதும் அல்ல: எங்கிருந்தோ யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ்ப்பாணத்தால் வன்னிக்கு வந்தது. தொடக்கத்தில் இருந்த ஆட்டமும் பாட்டும் இப்ப இல்லை. ஏனென்றால் சினிமாத்தன்மைகள் விரவி விட்டன. ஆட்டங்களில் மட்டுமல்ல நகைச்சுவை என்று கேலி..... ஆபாசமாயும் போய் விட்டது...

அது மட்டும்மல்ல காலத்துக்கு:காலம் கற்பனைப்பாத்திரங்களும் காத்தவராயனில் புகுத்தப் படுகின்றது. எடுத்துக்காட்டாக குண்டோதரன் எனும் பாத்திரத்தைக்கூறலாம்.



இங்கே மரபு மீறப்படுகின்றது. வாத்தியமாக "உடுக்கு" தான் முன்பு பாவிக்கப்பட்டது. இப்போது மத்தளம் அதைவிட ''ஓகன்'' கருவியும் பயன் படுத்துகிறார்கள். இதனால் தனித்துவம் இழக்கப்படுகின்றது. ஆட்டங்களிலும், "தொங்கல்கள்" கூடி "விறுவிறுப்புகள்" அதிகமாக கையாளப்படுகின்றன.

பாசையூர் ''பூந்தான் ஜோசப்'' அவர்களால் உருவாக் கப்பட்ட கத்தோலிக்க நாடகங்கள் பல இங்கே எமது பிரதேசத்தில் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. "எஸ் தாக்கியர்" ''ஞான சௌந்தரி'', "ஆட்டு வணிகன்"போன்றவற்றோடு "வள்ளி திருமணம்'' "கர்ணன் போர்'' போன்றனவும் ஆடப்பட்டாலும் நடிகமணி ''வைரமுத்து''வின் ''அரிச்சந்திரா'' (விலாசம்)இங்கு செல்வாக்குச் செலுத்தியதும் மேற் கூறப்பட்ட நாடகங்கள் கைவிடப்பட்டன.

இப்போ எமது பிரதேசத்தில் ஆடப்பட்டு வரும் ''கோவலன் கூத்து" "காத்தவராயன்" போன்றவற்றில் சனங்களுக்கு நாட்டமில்லாமல் போய்விட்டது. ஏனென்றால், இந்த இடப் பெயர்வால் எமது கிராமம் நகரமயமாக்கப்பட்டு விட்டது. இந்த நகரமயமாக்கலால் அண்ணாவி மரபு அற்றுப் போய்க் கொண்டிருப்பதை நினைக்க கவலையாயுள்ளது. மரபு ரீதியான எமது கலைகள்பேணப்பட வேண்டும். கலைஞர்களை இனங்கண்டு, ஊக்குவிக்கும் முயற்சியில் செயற்பட்டால் ஓரளவு எமது மரபு ரீதியான கலைகளைப் பேணலாம்.

1975 ஆம் ஆண்டு எமது பாரம்பரிய கலைகளை பேணிப் பாதுகாத்து வந்த அண்ணாவிமாரை கௌரவிப்பதற்காக "வன்னி வள நாட்டுக் கலைவிழா"வை நடத்தினோம். என்னுடன் எனது ஆசிரியர் கலையருவி "சண்முகசுந்தரம்'' அவர்களும் முழுமூச்சாக செயற்பட்டார்.

அண்ணாவிக்கலைஞர்களான திரு.த.பொன்னம்பலம் அவர்கள் ''காத்தவராயன்'' "வள்ளிதிருமணம்'', "கர்ணன் போர்" என்பதற்காகவும், முல்லை மோடியை பிரபல்யப்படுத்தி வளர்த்தமைக்காகவே. "அப்பர்'' அண்ணாவியாருக்கும், கரகாட்டத்துக்காக இ.திருஞானசம்பந்தனுக்கும், நாட்டார் பாடலில் பெயர் போன ''க.தம்பிப்பிள்ளை'' அவர்களுக்கும் அருவி வெட்டுப் பாடலுக்கும், மங்களகரமான நிகழ்வுகளுக்கு குடம் ஊதல் போன்றவற்றுக்கும் "பொ.சந்திரசேகரம்''அவர்களுக்கும், கத்தோலிக்க நாடகங்களுக்காக ''மடத்தீன்'' அவர்களுக்கும் காத்தவராயனுக்காக "த.குலசேகரம்" அவர்களுக்கும் பேராசியர் கா.சிவத்தம்பி அவர்களைக் கொண்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டு "வன்னித்தமிழாராச்சி மாநாடு" ஒன்றை நடத்தினோம். இந்த விழாவில் சு.வித்தியானந்தனின் ஒத்துழைப்போடு நாட்டார் வழக்கியலும் நாட்டுக்கூத்துகளும் மேடையேற்றப்பட்டன. இந்த விழாவுக்கு சு.வித்தியானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் அ.சண்முகதாஸ், தினக்குரல் ஆசிரியர் சிவனேசச்செல்வன் ஆகியோரும் வருகை தந்தார்கள்.

இதுபோன்ற அண்ணாவிமாரைக் கௌரவிக்கின்ற நிகழ்வுகளை அண்ணாவிமாரை ஊக்குவிக்கவேண்டும் என்பதற்காகவும் பாரம்பரிய கலைகளை கட்டிக்காக்கவேணும் என்பதற்காகவும் இளைய தலைமுறையினர் கலைச்சிறப்புகளை அறியவேண்டுமென்பதற்காகவும் இதனை நடத்தினோம். இதுபோன்று தொடர்ந்துவரும் காலங்களிலும் கூத்துக்களை மேடையேற்றுவதும் அண்ணாவிமாரைக் கௌரவிப்பதும் இடம்பெறவேணும். ஏனெண்டால் தமிழினத்தின்ரை தனித்துவத்தையும் விழுமியங்களையும் கட்டிக்காத்து வெளிக் கொண்டு வருவதன் மூலம் தமிழினத்துக்குரிய அடையாளத்தை உறுதிப்படுத்தமுடியும்.

மற்றுமொண்டு, அண்ணாவிமாரை கௌரவிக்கப்படுவதினுடாக அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். அத்தோடு எமது இளஞ் சந்ததியினரும் எம்மினத்தின் கலைப்பாரம்பரியச்சிறப்புகளை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

இன்னும் முக்கியமான தொண்டு என்னவெனில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் படும் தமிழ்மொழிக்கான பாடவிதானங்களில் நாட்டார் இலக்கியங்கள் உள்ளடக்கவேணும். கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் பத்தாந்தரத்தமிழ்மொழிப்பாடத்தில் "நாட்டார் பாடல்கள் " என்ற தொகுப்பு நூல் கற்பிக்கப்பட்டதையும் குறிப்பிடலாம். ●

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

## பகுதி - 02

*கார்த்திகை மாதம்.*

மழை நன்றாய் பொய்து கொண்டிருந்தது. நிலமெல்லாம் வெள்ளம் அடித்துப்பாய்ந்தது. வாய்க்கால்கள் நிரம்பிக்கொண்டு ஓடின. ஒரு மாத நெற்பயிர்கள் பசுமையுடன் பரவியிருந்தது. மழைகாரணமாய் சிவத்தினால் தனது காணியை திருத்த முடியவில்லை. தை பிறந்த பின்னர் துப்பரவு வேலையைத்தொடங்கலாம் என்று நினைத்தான்.

ஒரு மாதப்பயிருக்கு பசளையைப் போட்டுவிட்டு ஊருக்குப்போனான். ஆனையிறவில் இப்போது சிறிய அளவில் தடைமுகாம் அமைத்திருந்தார்கள். கள்ளக்கடத்தலைத்தடுக்க சுங்கப்பகுதி அதிகாரிகள் தங்கியிருக்க அவர்களுக்கு பாதுகாப்பாக காற்சட்டை போட்ட பொலிசார் நின்றிருந்தார்கள். ஆனையிறவின் வீதியின் கிழக்கு மேற்கு இரு பக்கமும் உள்ள பெருவெளி நீர் நிறைந்து கடலாய் பரந்திருந்தது. நீரின் அலைகள் தெருக்கரையில் முட்டி மோதித் தழும்பிக்கொண்டிருந்தது.

சிவத்தின் வண்டிலையும் மறித்து மேலோட்டமாகப்பார்த்து விட்டு போகவிட்டார்கள். ஊருக்குப்போய் கிட்டத்தட்ட இரண்டு மாதமாகிவிட்டது. எப்போதாவது சில நேரங்களில் தரவை வெளியில் குடத்துடன் நடந்த பெண்ணின் சின்னமுகம் நினைவுக்கு வரும். இப்போது ஊருக்குப்போகும் போதே அவளைப்பார்க்கும் ஆவல் மெலிதாய் எட்டிப்பார்த்தது.

வீட்டுக்குப் போனதும் தனக்கு காணி கிடைத்த விபரத்தை முதலில் சொன்னான். அவர்களின் முகங்களிலும் சந்தோசம் தெரிந்தது. படுக்கையில் இருக்கும் அப்புவுடன் சிறிது நேரம் கதைத்துவிட்டு ஆச்சி தந்த தேனீரைக்குடித்துவிட்டு கணேசுவை தூக்கிக்கொஞ்சி விட்டு தரவை வெளிக்குப்போனான். தரவையில் பாதி இடம் தண்ணீராய் இருந்தது. மழை பெய்து ஓய்ந்திருந்தது. குளிர்காற்று சில்லென்று வீசியது. வெய்யில் சிறிதும் உறைக்கவில்லை. பார்வதி அக்காளுடன் சில பெண்கள் தண்ணீருக்குப் போனார்கள். அவர்களுக்குள் அந்தப் பெண்ணைக்காணவில்லை. சிறிது ஏமாற்றமாக இருந்தது. குடத்துடன் போய்க்கொண்டிருந்த பார்வதி அக்காள் நின்று திரும்பிக்கேட்டாள். "என்ன சிவத்தான். அப்புவும் படுக்கையில கிடக்கிறார். பார்க்க வந்தனியே"

"ஓமக்காள் மத்தியானம் வந்தனான்."

முன்பு கூடவே வந்தவள் பற்றி கேட்கலாமா என்று நினைத்த மனதை அடக்கிக்கொண்டான். அவர்கள் போன பிறகு சிறிது நேரம் நின்று பார்த்தான். இன்றைக்கென்னவோ நடராசுவையும் காணவில்லை. அவன் புளிவெட்டைக்கு போனான். விளையாட்டில் இறங்க மனம் வரவில்லை.

"நீங்கள் விளையாடுங்கோடா" என்று சொல்லிவிட்டு ஒரு மரக்குற்றியில் அமர்ந்துகொண்டான். கிணற்றடிப்பக்கமும் அந்தப்பெண்ணைக் காணவில்லை. அன்னமும் வந்து தண்ணீர் அள்ளிக்கொண்டு போவதைப் பார்த்தான்.

ஏதோ எல்லாமே வெறுமையாய் போனது போல இருந்தது. வந்து நின்றவள் திரும்பி தனது ஊருக்குப்போயிருப்பாளோ.....

யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. அன்னத்திடம் கேட்க பயமாய் இருந்தது. அன்று பெயர்கேட்டபோதே உனக்கென்னத்துக்கு அதெல்லாம் என்று திருப்பிக்கேட்டவள்.

என்ன செய்யலாம் என்ற யோசனையுடனேயே வீட்டுக்கு வந்தான். இரவு எல்லோரும் படுத்துக்கொண்ட பிறகு ஆச்சி குசினிவாசல்குந்திலிருந்து வெற்றிலை இடித்துக்கொண்டிருப்பதைப்பார்த்தான். பாக்குரலில் அவள் வெற்றிலை பாக்கு இடிக்கும் சத்தம் தாளம் தவறாமல் கேட்டது. சிவம் சட்டென்று ஆச்சியின் அருகே போய் அமர்ந்துகொண்டான்.

"என்னமோனை... நித்திரை வரேல்லையே"

இல்லையணை. இண்டைக்கு நல்ல தண்ணி அள்ள வந்த பார்வதி அக்காள் அப்புவைபற்றி விசாரிச்சவ"

ஆச்சிக்கு சந்தேகம் வராத விதமாக மெதுவாய் பேச்சை எடுத்தான்.

"பாருவதி கொப்புவுக்கு மருமோள் முறைதானே. அந்தப்பாசம் விட்டுப்போகுமே" ஆச்சி உரலுக்குள் இடித்ததை இரண்டு விரலால் சேர்த்து எடுத்து வாய்க்குள் போட்டுக்கொண்டாள்.

"பார்வதி அக்காளின்ர வீட்டில ஆருக்கும் வருத்தமே. ஆரோ சொந்தக் காரப்பிள்ளை உதவிக்கு வந்து நிக்குதாம்."

" அதுவோ அது அவள் பராசத்தி. பாருவதியின்ர மச்சாளின்ர பெடிச்சி. சிவன் கோயிலடியில இருக்கிறதுகள். மோள் விசம்



கலைச்சு கிடந்ததால உதவிக்கு கூட்டிவந்து ஒரு மாதம் வைச்சிருந்தவள் பிறகு தேப்பன் வந்து பராசத்தியை கூட்டிக்கொண்டு போட்டானாம்."

அட..... சிவன் கோயிலடி என்றால் இந்த ஊரின் மறுஎல்லை தான். ஒன்றரை மைல் தூரம் கூட வராது. ஆனால் இத்தனை நாட்கள் பார்வையிலேயே படவில்லையே. சிவன் கோவிலில் திருவிழாவுக்கும் தீ மிதிப்புக்கும் அவன் எத்தனை தடவை போயிக்கிறான்.

"பாவம் முட்டுப்பட்டதுகள். தேப்பன்ர உழைப்பு எந்த மூலைக்கு காணும். நாலைஞ்சு பிள்ளையள். பராசத்திதான் மூத்தது பன்னம் இழைச்சுக்குடுக்கிறவளாம். பாருவதி சொல்லிக்கவலைப்பட்டுது."

ஆச்சி தன்பாட்டில் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான்.

"சரி மோனை. நிலவு காலிச்சிட்டுது. பத்து மணி வரும். நீ போய்ப்படு"

சிவம் எழுந்து வந்து தலைவாசலில் படுத்துக்கொண்டான். ஏனோ திரும்பத்திரும்ப மூக்குத்தி போட்டிருந்த அந்த சின்னமுகம் தான் ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தது. எப்போது கண்ணயர்ந்தானோ தெரியவில்லை.

மறுநாள் காலை அவன் முகம் கழுவி விட்டு வந்தபோது அன்னம் மெல்லிய குரலில் கேட்டாள்.

"ராத்திரி நீ ஆச்சியிட்ட பராசத்தியைப்பற்றி என்னத்துக்கு விசாரிச்சனி"

அவனுக்கு 'திக்' கென்றது. பயத்தோடு அவளைப்பார்த்தான். அன்னத்தின் முகத்தில்மெல்லிய குறுகுறுப்பும் சிரிப்பும் இருந்தது. இவள் வீட்டுக்குள்ளிருந்து கேட்டிருக்கிறாள்.

அய்யோ என்று தன்னை நொந்து கொண்டான். என்ன சொல்வது என்று தெரியாமல் நின்றான்.

"சிவன் கோயிலடி கொஞ்சத்தூரம் தானே எண்டு நினைச்சு அங்க பார்க்கப் போயிடாத"

"போடி"

அவன் முகத்தை திருப்பிக்கொண்டு வந்து விட்டான்.

அதன் பிறகு வீட்டில் யாரிடமும் அந்தப்பேச்சையே அவன் எடுக்கவில்லை.

மறுநாள் புளிவெட்டையில் நின்ற போது தியாகன் சொன்னான்.

"வாற பொங்கலோட மருதனாமடத்திடலில சவாரி நடக்குமாம். நீ கட்டாயம் வா"

"ஓமடாப்பா வரலாம்தான். ஆனால் வயல்வேலைதான் இருக்கும். குடலைப்பருவ நேரம். விட்டிட்டு வர கரைச்சலாய் இருக்கும். ஆனாலும் பாப்பம் எப்ப எண்டு அறிவிச்சு விடுங்கோ"

சிவத்துக்கும் யோசனையாகத்தான் இருந்தத்.

தைபிறந்த பிறகு காணி திருத்திற வேலையும் இருக்கும். காட்டு மரங்களைத் தறித்து விழுத்தி வாற கோடைக்கு நன்றாக காயவிடவேணும். காணி துப்பரவாக்கி முடியவே ஒரு வருசம் போய்விடும். இப்போது ஒரு மாதப்பயிர் இனி புல்லு பிடுங்கவேணும். பசளை போடவேணும். வயல்வேலைகள் வரிசையாய் காத்திருக்கும். வயல் நினைவு வந்ததும்மற்றது அனைத்தும் மறந்து போயிட்டு. உடனே கிளிநொச்சிக்குப்புறப்பட ஆயத்தமானான்.

"மூத்தவனை பார்க்க வேணும் போல கிடக்கு ஒருக்கா வரச்சொல்லிவிடு மோனை" அப்பு சொன்னார்.

"இப்ப அண்ணை ரெண்டு மூண்டு இடங்களில வயல் செய்யிறார். வீட்டிலும் மில்லும் போடப்போறாராம். அதால வந்து போகநேரம் இருக்காது. எண்டாலும் சொல்லி விடுறன் ஒருக்கா வந்துபோகட்டன்."

இப்போது முகமது காக்காவிடம் வாங்கிய தோல் பையினுள் தன் உடுப்புக்களை வைத்துக்கொண்டுதான் பிரயாணம் செய்கிறான். புறப்படும் கடைசி நேரம்வரை பராசத்தி பற்றி அன்னம் ஏதாவது கதைப்பாள் என்று எதிர் பார்த்தான்.

அவள் எதுவுமே கதைக்கவில்லை. இப்போது போனால் இனி பொங்கலுக்குத்தான் வரமுடியும். அதுவரை பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

அதிகாலையில் அவன் புறப்பட்டான். அப்போதே எழுந்து விட்டிருந்த கணேசு அவனோடேயே ஒட்டிக்கொண்டிருந்தான்.

"நானும் மாமாவோட போப்போறன்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். கழுத்தைக்கட்டிக்கொண்டிருந்தவனை பிரித்து அன்னத்திடம் கொடுத்தான்.

"மாமா அடுத்த முறை தம்பியை கூட்டிப்போறன். என்ன"

அன்னம் தூக்கிக்கொள்ள அவன் வண்டிலில் மாடுகளை கட்டிப்புறப்பட்டான். மாடுகளை தட்டிக்கொடுக்க அவை வேகமாய் நடந்தன.

யக்கச்சிச்சந்தியில் நாலைந்து பொலிஸ்காரர்கள் ஒரு ஜீப்பின் அருகே நின்று கொண்டிருந்தார்கள். சிறிது தூரம் அவன் போக அந்த ஜீப் அவனது வண்டிலை கடந்து ஆனையிறவு பக்கமாக இரைந்துகொண்டு போனது. ஆனையிறவு கடந்து பரந்தனை நெருங்கிய போது நன்றாய் வெய்யில் தாழ்ந்து விட்டிருந்தது. பரந்தன் சந்தியை அடைந்த போது மயிலரின் கடைவாசலில் சிறுகூட்டமாய் ஆட்கள் நின்றிருந்தார்கள். பியோன் ஏரம்புவின் தலையும் தெரிந்தது. அவன் கடைக்கு சமீபமாக யோசனையுடன் வண்டிலை நிறுத்தினான்.

"சிவத்தான் விசயம் கேள்விப்பட்டியே. தேத்தண்ணி கடை மாணிக்கனை ஆனை அடிச்சுப்போட்டுதாம்"

"என்னணை எப்பவாம்" பதற்றத்துடன் கேட்டான்.

"முருகண்டிக்கு போற பாதையிலதான். ஏரம்பன் காலமை கடிதம் குடுக்கப்போன போது றோட்டுக்கரையில கண்டவனாம். கண்ணால பார்க்க ஏலாத கொடுமையாய் கிடக்காம். பாவம். பொழுது படுற நேரம் ஏன் அந்தப்பாதையில போனானோ தெரியேலை"

கடவுளே.... பாவம் மாணிக்கன்..... மனதுக்குள் கவலையும் இரக்கமும் ஒரு சேர எழுந்தது.

முதன்முதலில் இந்த மண்ணுக்கு வந்த அன்று அவன் தந்த தேனீரின் இனிமையும் இளஞ்சூடும் இன்னும் நினைவில் இருக்கிறது. சிவம் நேராக வேலாயுதம் வீட்டுக்குப்போனான். கனகம் மச்சாள் தான் குழந்தையுடன் இருந்தாள். அழுதுகொண்டிருந்த பாலச்சந்திரனை தூக்கிவைத்து சமாதானப்படுத்திக்கொண்டிருந்தாள். இரண்டாவது குழந்தை அடுத்தடுத்த மாதங்களில் பிறக்க இருந்தது. மூச்சு வாங்க நின்றாள.

## அத்தியாயம்-01

"அண்ணை எங்க மச்சாள்"

"அவர் வீட்டில எங்க நிக்கிறார் எந்த நேரமும் வயல் வயல் எண்டு போனபடிதானே. வயலில் புல்லு பிடுங்கினமாம். காலமை போனவர் மத்தியானம் சாப்பிடக்கூட வரேலை. சாப்பிடக்கூட வராமல் அப்பிடி என்ன உழைப்பு"

சலிப்பும் கவலையுமாய் சொன்னாள்.

சிவம் யோசனையோடு நின்றான்.

அண்ணனின் ஓயாத உழைப்பு பற்றி அவன் அறிந்ததுதான்.

மாணிக்கன் யானை அடித்து இறந்தது பற்றி கவலையோடு கதைத்துக்கொண்டிருந்தபோதே வேலாயுதமும் வந்துவிட்டான். சமீபத்தில் றலீ சைக்கிள் வாங்கியிருந்தான். சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே வந்தான்.

"என்னடா ஊரால வாறியே"

"ஓமண்ணை. அப்பு உன்னை பார்க்க வேணுமாம். ஒருக்கா வரட்டாம். போயிட்டு வாறியே"

அவன் கையால் முகத்தை தேய்த்து விட்டுக்கொண்டான்.

ஓமடாப்பா ஒருக்கா போகத்தான் வேணும்.நேற்று தாமோதரியிட்ட என்னை ஒருகா வரச்சொல்லி அன்னமும் சொல்லி விட்டிருக்கிறாள். ஏதே முக்கிய விசயமாம். ஒருக்கா போகத்தான் வேணும்."

சிவம் திகைத்துப்போய் நின்றான்.

தான் நேற்று ஊரில் நின்ற போதுதான் அன்னம் அண்ணனை வரச்சொல்லி தாமோதரியிடம் சொல்லி விட்டிருக்கிறாள். அதுவும் தனக்குத்தெரியாமல். எதற்காக என்று தீர்மானிக்க முடியவில்லை.

நெஞ்சுக்குள் லேசான பயமும் கலக்கமும் பரவியது.

போயிட்டுவாறன் என்று சொல்லிக்கொண்டு சோர்வோடு வீட்டுக்கு வந்தான். இந்த அன்னம் என்ன சொல்லி வைக்கப் போகிறாளோ என்று நெஞ்சு படக்படக்கென்று அடித்துக்கொண்டது. **(தொடரும்...)**




# பொட்டுக்காரி

முல்லைமணி



இருளில் தொலைந்து போன சூரியன் வேலிக்கிளுவைக கூடாகப்பூமியை எட்டிப்பார்க்க இன்னும் எவ்வளவோ நேரம் இருந்தது, அடுத்த வீட்டுப்பாறாத் தைக்கிழவியின் வெள்ளடியன் சேவல் செட்டையை அடித்துக் 'கொக்கரக்கோ' போடுவது அவளை எழுப்புவதற்குத்தான் போலும்.

வள்ளிக்கொடி எழுந்து விட்டாள். மூத்தவன் பதுமன் குறட்டை விட்டுக்கொண்டே விடியப் புற நித்திரையைச் சுகித்துக் கொண்டிருந்தான். மகள் இராணியும் இன்னும் எழும்பவில்லை.

வள்ளிக்கொடி அப்பச் சட்டியை அடுப்பில் ஏற்றிவிட்டாள். சீவல்காரக்கனகனின் கள்ளு மண்டியைக்கலக்கியதால் போலும் அப்பத்து மா அளவாகப்புளித்து பொங்கியிருந்தது. மாவை அப்பச் சட்டியில் இட்டுச்சிலாவி, சிமியானின் கிணற்றடித்தேங்காயின் கட்டிப்பாலை அளவாக இட்டு அவள் சுடும் அப்பத்தின் சுவை பற்றி ஊரே அறியும்.

சீத்தை மணியன் கடைக்கு நாப்பது; தாடிக்காரத்தாவீதரின் கபேக்கு முப்பது; வீட்டுக்கு வரும் வாடிக்கையாளருக்கு பதினைந்தோ இருபதோ. மிச்சம் மீசாடி வயிற்றுப்பாட்டிற்கு. பாவம் பிள்ளை யள் வாழுற வளருற வயசில தின்னத்தானே வேணும்.

ஒரு நாளா? இரண்டு நாளா? கடந்த பத்து மாதங்களாக அப்பத் துடன் அவளும் நெருப்பில் வேகிக் கொள்வதால்தான் ஓரளவாவது வயிற்றைக்கழுவ முடிந்தது.

வள்ளிக்கொடி முல்லைத் தீவிலே தங்கராசுவுக்கு வாழ்க்கைப் பட்டு இரண்டு குஞ்சுகளைப் பெற்றெடுத்தவள். அயல் வீடு அடுத்த வீடு என்று அறியாதவள். கணவனும் இரண்டு பிள்ளைகளும் தான் அவளின் உலகம். அவர்களின் பாடுபறப்பை பார்க்கவே அவளுக்கு நேரம் சரியாக இருக்கும். தங்கராசு குடும்பப்பொறுப்பை உணர்ந்த நேர்மையான உழைப்பாளி.

இடையிடையே கேட்கும் வெடிச்சத்தங்கள், ஷெல் வீச்சுக்கள் வீதிச்சண்டைகள் பயமுறுத்திய போதும் 'எங்கடை பெடியள் விடாங்கள்' என்ற அபார நம்பிக்கை யில் வாழ்ந்த மக்களின் அங்கமா கவே தங்கராசு குடும்பமும் வாழ்ந்தது.

திடீரென்று சாணியப்பிய எருமைக்கூட்டம் போல இராணுவத் தினர் திபுதிபு என்று நுழைந்து முல்லை மண்ணை உழக்கி உழுத போது உடுத்த துணியோடு ஊரோடு ஒத்தோடி வியர்த்து விறுவிறுத்து களைத்துப்போய் புதுக்குடியிருப்பிலே ஒதுங்கிய குடும்பங்களில் ஒன்று தான் தங்கராசு-வள்ளிக்கொடி குடும்பமும்.

புதுக்குடியிருப்பு அப்படி என்ன காப்புறுதி செய்யப்பட்ட இடமா? வந்து சேர்ந்த பத்தாம் நாளே சந்தையிலே சனம் நிரம்பி பிதுங்கிக்கொண்டு இருந்த போது அசுர வேகத்தில் சுழன்று வந்த கிபிர் ஐந்தாறு குண்டுகளை முக்கித்தள்ளி விட்டுப் போனது.

சந்தைச்சுவரிலே பீச்சி யடித்தன இரத்தமும் சதையும்; தலை வேறு,முண்டம் வேறு,கால் வேறு, கை வேறு சதையும், எலும்பும் வேறு என்று பத்தோ பதினைந் தோபேர் செத்துச்சிதறிப் போனார்கள்.

இரண்டு நிமிசம் பிந்திப் போனதால் தங்கராசு தப்பிப்பிழைத் தான் என்று தான் சொல்ல வேண்டும்.

என்னதான் சொந்தக்காரர் என்றாலும் அவர்களின் தாவாரத்தில் இடம் பிடித்து இடஞ்சல் கொடுக்க விரும்பாததால் வெட்டைக் காணி யொன்றில் கொட்டில் போட்டு விட்டான் தங்கராசு. கடல் தொழில் செய்யத்தோதுப்படாத நிலையில் வவுனியா வியாபாரச்சிந்தனை வலுவாக அவனை ஆக்கிரமித்தது. பெல்லைத்தவிர மற்றப்பாகங்கள் எல்லாம் சத்தம் போடும் உக்கிய மட்காட்டுடனான கெசலி சைக்கிள் அவன் எண்ணத்துக்கு உந்து விசையாக அமைந்தது. வள்ளிக் கொடியும் பச்சைக் கொடியைக் காட்டவே வியாபாரத்தில் முழுமூச் சாக ஈடுபட்டான்.

மூன்று நாள் மூசிமூசிச் சைக்கிள் உழக்கி தாண்டிக்குளத்தில் சேர்த்தவற்றைக்கொண்டு வந்தால் நானூறோ ஐந்நூறோ தேறும். ஒரு மாதிரி தட்டல் தடவலாக வாழ்க்கை வண்டி அவனது சைக்கிளைப் போலத்தான் ஓடிக்கொண்டிருந்தது.

காலைப்பூசைக்கு கந்தசாமி கோவில் மணி கேட்டதும் வள்ளிக் கொடியின் நினைவுக்கயிறு அறுபட்டது.

''என்ரை ராசாவெல்லே இந்த அப்பத்தை கடையளுக்கு குடுத்திட்டு வா குஞ்சு.''

''நெடுக நான் தான் போறதோ? என்னாலை ஏலாது.'' என்று முதலில் சிணுங்கி அடம் பிடித்த பதுமன் இறுதியில் தாயின் கெஞ்சலுக்கு மசிந்து அப்பப் பெட்டியைத்தூக்கினான்.

அநியாயம் சொல்லக் கூடாது; சீத்தைமணியன் நேர்மை யான பிறவி; கறாராய் அன்று பின்னேரமே பிசகு தீர்த்துவிடுவான். தாடிக்கார தாவீதரிடம் காசு வாங்கு வது கல்லில் நார் உரிப்பது போலத் தான். வாடிக்கையான உத்தியோகத் தரின் காசுக்கும் பிழையில்லை. மாத முடிவில் வந்து சேரும்.

மீண்டும் பழைய நினைவு கள் அவளின் இதயத்தை தூண்டில் போட்டுக்கொழுவி இழுத்தன.

வவுனியா வியாபாரத் துக்குச்சென்ற தங்கராசு ஒரு வாரமா கியும் திரும்பிவரவில்லை. 'இன்று வருவார் நாளை வருவார்' என்று காத்திருந்து பதினைந்து நாளாகியும் வரவில்லை.. தேடாத இடமில்லை. ஆமியின் கோரப்பிடியில் சிக் கினானா? அவனின் உயிரையே குடித்து ஏப்பம் விட்டு விட்டார்களா? எதுவுமே தெரியாத நிலையில் ஒரேயடியாக இடிந்து போனாள் அவள். எழுதிக்கொடுக்க வேண்டிய இடமெல்லாம் கொடுத்தாயிற்று. அப்படி எவரையும் கைது செய்ய வில்லை என இராணுவம் கையை விரித்து விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அவளுக்கு அறிவித்து விட்டது. அழுது அழுது முகம் உப்பியது தான் மிச்சம்.

பிள்ளைகள் பசியால் துடித்துக்கதறிய போதுதான் 'இனி அழுவதற்று நேரமில்லை' என உணர்ந்து கொண்டாள்.

பாறாத்தைக்கிழவியின் அற்ப சொற்ப உதவியில் காலத் தைக்கழிக்க முடியுமா? கிழவியின் ஆலோசனை தான் அப்பச்சட்டியை அடுப்பில் ஏற்ற வைத்தது. முரு கேசுவின் அடைவு கடையில் எஞ்சி யிருந்த இரண்டு பவுண்காப்பு இடம் பிடித்தது. அவளின் தொழிலுக்கு முதலீடு ஆகியது

என்னமாய்த்தளதள என்று இருந்த வள்ளிக்கொடி ஒரேயடியாய் உருக்குலைந்து போனாள். நாற்பது வயதைக்கூடத்தாண்டாத அவளைப் பார்ப்பவர்கள் பத்து வயது கூடத்தான் மதிப்பார்கள். முதுமையின் கோடுகள் அவள் அங்கமெங்கும் வரியிட்டிருந்தன.

“எடி பிள்ளை றெட்பா ணாவோ என்னமோ எண்டு சொல்லுற சங்கம் ஏழையளுக்கு உதவி செய்யுதாம்; நீயும் போய்ப்பதிஞ்சு விடன்'' பாறாத்தைக்கிழவி இன்னுமொரு ஆலோசனையை வீசினாள்.

“ஓமணை ஆச்சி முந்தியும் உப்பிடித்தான் ஆரோ சொல்லி பதிஞ்சன்; அங்கைவா இஞ்சைவா எண்டு பேய்க் காட்டினாங்கள் அலைஞ்சது தான் மிச்சம்”

ஏ.ஜி.ஏ கந்தோரிலை காவல் இருந்து பதியிற போம் ஒன்றைப்பெற்றுக்கொண்டாள் வள்ளி.

புது அம்மா உதவி செய்யிறதாகத்தான் சொன்னா “போமை நிரப்பி வைச்சிருங்கோ; உங்கடை நிலமையளை நேரே பாத்து உதவிக்கு ஏற்பாடு செய்யி றன்'' புதிய அதிகாரி வனிதா கூறிச்சென்று விட்டாள்.

சொல்லி வைச்சது போல மூன்றாம் நாளே வனிதா வள்ளிக்கொடியின் குடிசைக்கு வந்து விட்டாள்.பாதியாகக்கிழிந்து ஒரு முனையில் மட்டும் தொங்கும் புற்பாயை எடுத்து முனைகளைப் பொருத்தி விரித்து விட்டு “இப்பிடி இருங்கோ அம்மா; வீடு தேடி வந்த உங்களை இரு எண்டு சொல்ல ஒரு கதிரையோ ஆனபாயோ இல்லை,” மன்னிப்புக்கோரும் விதத்தில் இருந்தது வள்ளிகொடியின் பேச்சு.

“அதினாலென்ன? போரால் சீரழிந்து சின்னாபின்னமாகி விட்ட குடும்பங்களின் பட்டியலில் நீங்களும் ஒருத்தி. அன்பான உபசரிப்பே போதும்.

பார்வையைப்படரவிட்ட வனிதா வறுமையின் கோரப்பிடியில சிக்கித்தவிக்கும் அவளின் நிலை மையை உணர்ந்து கொண்டாள். இந்தக்கொட்டில் எப்பவே மேஞ் சிருக்க வேணும். முந்தநாள் பெய்த மழைக்கு ஒரே ஒழுக்கு; நானும் பிள்ளையளும் விடியவிடிய குந்திக்கொண்டிருந்தம். உங்க ளுக்குப்புண்ணியம் கிடைக்கும் கொஞ்சக்கிடுகெண்டாலும் தந்தால்....”

“வள்ளிக்கொடி எனக்கு எல்லாம் விளங்குது. என்ரை வேலையே ஆதரவற்ற ஏழையளுக்கு உதவி செய்யிறதுதான்; எங்கை போமை நிரப்பிப்போட்டியே?”

வரதன் கிளாக்கரைக் கொண்டு நிரப்பி வைத்திருந்த படிவத்தை நீட்டினாள் வள்ளி.

சிரிக்கச்சிரிக்கப் பேசி ஆறுதல் வார்த்தைகள் சொன்ன வனிதாவின் முகம் படிவத்தைப் பார்த்தவுடனே இருண்டு விடுகிறது.

''நீங்கள் விதவை இல்லையா?”

“இல்லையம்மா: அவர் வவுனியா யாவாரத்துக்குப்போனவர் காணாமல் போய்விட்டார்”

அப்பொழுது தான் வள்ளியின் நெற்றியில் பளிச்சிடும் பொட்டினை வனிதா அவதானித்தாள். புருவத்தைச்சுருக்கி ஏதோ சிந்தனை யில் ஆழ்வது போலிருந்தது வனி தாவின் முகம்.

நாதியற்ற நாப்பத்திரண்டு பெண்கள் படிவம் நிரப்பிக்கொடுத் திருந்தனர். முப்பது பேர் போரினால் நேரடியாகப்பாதிக்கப்பட்ட விதவை கள். கற்பகத்தின் கணவன் அவள் கண் முன்னாலேயே இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டான். செங்கமலம் ஷெல்லடியினால் கணவனை இழந்தாள். பொம்பருக்குப்பயந்து பங்கருக்குள் புகுந்த சின்னாச்சியின் கணவன் அவசரப் பட்டு எட்டிப்பார்த்ததால் குண்டடிபட்டு உயிர்நீத்தான். சுற்றிவளைத்து ஆடு மாடுகள் போல் சாய்த்து வாசிக சாலை கட்டடத்தில் இருக்கச் சொல்லி விட்டு கட்டடத்துக்கே குண்டு வைத்துத்தகர்த்ததில் சிதறிப்போன குடும்பத்தலைவர்களின் மனைவிமார்கள் - இப்படி முப்பது விதவைகள்.

போர்க்கால விதவைகள் உதவித்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு வனிதாவிடம் விடப்பட்டது. போர்க்கால விதவைகள் என்னும் தொடரை அர்த்தப்படுத்துவதில் தான் சிக்கல். ஆரம்பத்தில் குண்டுவீச்சு ஷெல்லடி, துப்பாக்கிச்சூடு என்பவற்றால் நேரடியாக உயிர்நீத்த வர்களின் மனைவிமார்தான் என்று கூறப்பட்டது.

இந்த விளக்கத்தை ஏற்காது வனிதா வாதாடினாள். உதாரணங்களை நிரைப்படுததினாள்.

நெருப்புக்காச்சலுக்குரிய மருந்துக்குளிசை ஆஸ்ப்பத்திரியில் இல்லாததால் தங்கம்மாவின் கணவன் தறுமன் சொத்துப்போனான். போர்க்கால மருந்துத்தடையே இதற்குக்காரணம்.

மாரடைப்பால் துடிதுடித்த இன்னொரு குடும்பத்தலைவனை ஆஸ்ப்பத்திரிக்கு எடுத்துச்செல்ல வாகனத்துக்கு எரிபொருள் இல்லை. சிகிச்சையின்மையால் அவன் இறந்து போனான்.

இடப்பெயர்வினால் உழைப்புப்பிழைப்பில்லை. மனைவி மக்களை காப்பாற்ற முடியாத நிலை; கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டை. விரக்தி அடைந்த கணவன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டான்.

இவர்கள் எல்லோருமே போர்க்கால நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்கள். எனவே போர்க் கால விதவைகள் என வாதிடவே மேலதிகாரி ஏற்றுக்கெண்டார். இதனால் பதினொரு விதவை களுக்கு உதவி செய்ய முடிந்தது.

வள்ளிக்கொடியின் பிரச்சினை வேறாக இருக்கிறதே. காணாமற் போனவன் செத்திருந்தால் வள்ளிக்கொடி விதவை தான். உயிரோடிருந்தால் விதவை என்று எப்படிச்சொல்வது?

மேலதிகாரியுடன் ஆலோ சித்து முடிவு சொல்வதாக வனிதா கூறிவிட்டு இடத்தை விட்டகன்றாள். இதற்கு மேலதிகாரி சம்மதிக்க மாட்டார் என்பது அவளுக்குத் தெரியும்.

“பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்” என்னும் திருக்குறள் நினைவுக்கு வந்தது. வறுமையின் பிடியில் சிக்கிச்சீரழியும் ஒரு பெண்ணுக்கு நன்மைபயக்கும் மென்றால் ஒரு பொய்யைச் சொன்னால் என்ன? வள்ளிக்கொடி அந்தப் பொய்யைச்சொல்ல வேண்டும்.

அடுத்த வாரம் வனிதா வள்ளிக்கொடியைச்சந்தித்தாள்.

''வள்ளிக்கொடி, நான் சொன்னபடி செய்தால் உதவி கிடைக்கும்”

“சொல்லுங்கோ அம்மா”

உன்ரை புருஷன் செத்துப் போனதாக ஜே.பியின் முன்னிலை யில் சத்தியக்கடதாசி முடிக்க வேணும். குங்குமப் பொட்டுப்போடு றதை நிறுத்தவேணும்”

அண்ட சராசரங்கள் எல்லாம் அசுரவேகத்தில் சுற்றுவது போல இருந்தது அவளுக்கு. “செத்துப்போனார் என்று சத்தியம் செய்வதா? திலகம் இடுவதை நிறுத்துவதா?”

“வேண்டாம் அம்மா; சத்தி யம்பண்ண என்னால் முடியாது. எந்த உதவியும் வேண்டாம் எப்பவோ ஒருக்கால் வருவார் என்ற நம்பிக்கை யில் தான் தவறாது பொட்டுப் போடுறன்” என்று சொல்லிவிட்டு விறுக்கென நடந்தாள் வள்ளிக்கொடி.

அவள் சென்ற திசையைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வனிதா.இப்படியும் ஒரு பெண்ணா? அவள் வாய் முணுமுணுக்கிறது.

இராணுவப்புகழ், இரத்த மழையில் உதிக்கும் கவர்ச்சிகரமான வானவில்.

–லாரோஷ்ஃபுக்கோ

# இலக்கியப்பகிர்வு

சிதம்பரன்



## சிறு பத்திரிகைகள்

சிறு பத்திரிகைகள என்றவுடன் நேற்றுப்பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்கள் என்ற மாதிரியான நினைப்பு பலருக்கு உண்டு. ஒளியைத்தேடி நெருப்பில் விழுந்து மடியும் விட்டில்பூச்சிகள் போல பிறப்பெடுத்து குறுகிய காலத்தில் அழிந்து/ஒழிந்து போகும் சில பத்திரிகைகளின் பட்டியலின் நீளம் மிக அதிகமானது.

தமிழ் நாட்டிலும், நமது நாட்டிலும் அவ்வாறு அமரத்துவமான சிறு பத்திரிகைகள் ஏராளம். புறநடையாகச்சில வெளிவந்துகொண்டு இருந்தன. இருக்கின்றன. அவற்றுக்கும் புறநடையான காரணங்கள் உண்டு.

சிறுபத்திரிகைகள் ஏன் தோற்றம் பெற்றன என்று பார்த்தால் அதற்குசில முக்கியமான ஒரு காரணத்தினை சொல்லுவார்கள். பெரும் பத்திரிகைகள் என்று சொல்லப்படுகின்ற சர்வ வல்லமை பொருந்திய பத்திரிகைகளில் சகல விதமான செயற்பாடுகளுக்கும் நேர்எதிரான மனோபாவத்தின் வெளிப்பாடே சிறு பத்திரிகைகள் ஆகும் என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

எல்லோருடைய எல்லாக் கருத்துகளையும் அப்படியே வெளியிட பெரும் பத்திரிகைகள் வழிசமைக்காத வரை அவ்வாறான கருத்துகளுக்குரிய உரிய இடத்தை கொடுக்காத போது அக் கருத்தை முன்வைப்பவர்கள் வேறு வழியின்றி சிறுபத்திரிகைகளை தொடங்குகின்றார்கள். அல்லது நகருகின்றார்கள்.



“அலை” சஞ்சிகையின் முதலாவது இதழின் அட்டை

“இன்றைய படைப்புக்களிலும், அவற்றைத் தாங்கி வருகின்ற பத்திரிகைகளிலும் தீவிர அதிருப்தியும் அதனால் கோபமும் உடைய பல இளம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், திறனாய்வாளர்களின் பொது மேடை தான் கசடதபற” என்று கசடதபற என்னும் இலக்கிய சிறுபத்திரிகை 1970 அக்டோபர் இதழில் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டது.

1976 இல் ஜனவரி மாதம் பிரக்ஞை என்ற இதழ் “பெரும் எதிரியாகச் செயற்படும் மந்தை இலக்கியம், மந்தை நாடகம், திரைப்படம் போன்றவற்றிற்கு எதிராக தம் ஆக்க சக்தி கொண்டு இயக்கி இலக்கியத்தின் எல்லை விஸ்தரிப்புகளை நிகழ்த்தி அதன் ஆகிருதியை உயர்த்த வேண்டியவர்கள்” என சிறுபத்திரிகை சார்ந்தவர்களை குறிப்பிடுகின்றது.

1959 - 1970 வரை வெளிவந்த சி.சு செல்லப்பா அவர்களின் “எழுத்து” பத்திரிகையே இன்றைய சிறுபத்திரிகை இயக்கத்துக்கு முன்னோடியும் மூல விசையுமாக அமைந்தது என்று சொல்லுவார்கள். பின்னர் 1971 இல் வானப்பாடி இதழும் தன் பணியை ஆற்றத் தொடங்கியது.

நவீன இலக்கிய வளர்ச்சியில் சிறுபத்திரிகைகளின் பங்கு மிகவும் கணிசமானது. நாவல் இலக்கியம் தவிர்ந்த ஏனைய இலக்கியவடிவங்களின் வளர்ச்சிக்கும், கலை கலாச்சார பரிவர்த்தனைகளுக்கும் சிறுபத்திரிகைகளே தளமாக உள்ளன என்றார் ராஜமாத்தாண்டன்.

சிறுபத்திரிகைகளில் மட்டுமே எழுத்தாளர்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும், இயங்க முடிகிறது. அத்துடன் சகலவிதமான பரிசோதனை முயற்சிகளுக்கும் அவையே பரிசோதனை களங்களாகவும் அமைகின்றன.

இலக்கியத்தை வாழ்க்கையின் அனுபவ. பகிர்தலாக முன்னோட்டமாகக் கருதுகின்றவர்கள் ஒன்று கூடி சிறுசிறு பத்திரிகைகளை துவக்க நேர்ந்தது. இந்தப் பத்திரிகைகளின் பின் நின்றவர்கள். சமூகபிரக்ஞையும், இலக்கியப் பிரக்ஞையும் உள்ள இளைஞர்களாகும் என்று சொல்லும் “மாலன்” அவர்கள் தம் சூழல் மீது கோபம் கொண்ட ஒரு சராசரிக்கு மேற்பட்ட இளைஞர்களில்ஒரு வயதின் மனநிலைகளின் வெளிப்பாடோ என்ற சந்தேகம் தோன்றுகின்றது என்றும் சொல்கின்றார்.

எமது மண்ணில் “அலை” என்று சிறுபத்திரிகை வெளியிட்டு அதன் 35 இதழ்களை வெளிக்கொணர்ந்த திரு.அ.யேசுராசா அவர்கள் தமது சிறுபத்திரிகை வெளியான சூழலை “மூன்றாவது மனிதன்” இதழுக்கு வழங்கியபேட்டியில் பின்வருமாறு கூறுகின்றார்.

“ஆனால்1970 ஆம் ஆண்டுக்குப்பின்னர் - இடது சாரிஜக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு ஒரு வலுவான அரசியல்தளம் கிடைக்கின்றபோது அவர்களுடைய ஆதிக்கம் கலாச்சாரத்தளத்தில் மிகத்தீவிரமாக வெளிப்பட்டது. அதில் பல தவறான போக்குகள் அரசியல் சார்ந்தும், கலாச்சாரம் சார்ந்தும் இருந்ததாக நாங்கள் உணர்ந்தோம். அந்த நேரத்தில்தினசரி பத்திரிகைகளின் வாரவெளியீடுகளில் வானொலியெல்லாம் எங்கள் கருத்துகளைச்சொல்லக் கூடியதாக இருக்கவில்லை. ஏனென்றால் அந்த ஊடகங்களிலும் கூட மதிப்பும் முன்னுரிமையும் பெற்றவர்கள்இந்த முற்போக்கு அணியைச்சேர்ந்த விமர்சகர்களும் படைப்பாளிகளுமே ஆவர்”

சிறுபத்திரிகையின் இயக்க உருவாக்கத்தில் தான் முதன் முதலாக இலக்கியம் என்ற கருத்தாக்கம் தோன்றியது. அதுவரை இலக்கியங்கள் இருந்தாலும் அவை இலக்கியம் என்று கூறும் அர்த்தத்தில் பாவிக்கப்படவில்லை என்கிறார் பேராசிரியர் தமிழவன்.

சிறுபத்திரிகைகளுக்கு சிறந்த பாரம்பரியம் உண்டு. ஆங்கிலேயருக் கும் சிம்ம சொப்பனமாக விளங்கிய மகாகவி பாரதியாரின் “இந்தியா” இதழ் ஒரு சிறுபத்திரிகைதான். மகாத்மாகாந்தி வெளியிட்ட “யஸ்இந்தியா” “ஹரிஜன்” லாலா லஜபதி ராயின் “பீப்பின்” திலகரின் கேசரி பிரேம்சந்திரனின் “ஹன்ன” என்பன எல்லாம் சிறுபத்திரிகைகள் தான் உறக்கத்தில் இருந்த இந்திய மக்களை தட்டியெழுப்பி சுதந்திரப்போர் வீரர்களாக மாற்றிய பெருமை இவைக்கு உண்டு.

சுதந்திரப்போராட்ட காலத்தில் தமிழில் வெளிவந்த தேச பக்தன் லோகோபகாரி, ஊழியன் குமரன், சுதந்திரச்சங்கு, சாந்தி, மணிக்கொடி, சக்தி இவை யணைத்தும் சிறுபத்திரிகைகள் தான். தமிழர் சிந்தனை வளம் சேர்த்ததற்கும், தமிழ் மறுமலர்ச் சிக்கும் இவை ஆற்றிய பணி முதன்மையானது என்று சரஸ்வதி ஆசிரியர் வ.விஜயபாஸ்கரன் அவர்கள் குறிப்பிடுவார்

கலாச்சாரத்தில் பிறதுறைகளான நவீன ஓவியம் சினிமா, நாட்டியம், சமூக கோட்பாடுகள், நாடகம் தத்துவம் கோட்பாடுகள், மொழி பெயர்ப்பு, சமூகவியல் தத்துவம், அரசியல், பொருளாதாரம், மானுடவியல், சரித்திரம், விஞ்ஞானம் என்று பல்வேறு துறைகளாக சமீபகாலம் வரை வியாபித்துள்ள சிறுபத்திரிகைகளின் எல்லை என்ன?

சிறுபத்திரிகைகள் தொடர்பாக சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை அடுத்த வாரம் பார்ப்போம். ●

# சூடும் தீயில்

பொட்டிழந்த
சர்வாதிகாரம் முழுவதையும் இறாஞ்சிய
மாங்காய்தீவின்
அரைவாசிக்கு மேல்
தன்னரச நிழல் பரத்திக்கிடக்கும்?
“இருசியின்” நிழலில் மறைந்து கொண்டு
அல்லது
அரவணைப்பில் நிமிர்ந்து நின்றபடி
கடலிலொரு கழுகு
தரையிலொரு வல்லூறு

சமாதானக்குஞ்சு பொரிக்குமா?
முட்டைக்குள்ளேயே அவிந்து போகுமா..?
கூழாக்கிச்சிதையுமா...?
போட்டுடைக்கப்படாதா...?
விடைதெரியா வினாக்களும்
ஐயங்களும்
எல்லோர் மனங்களிலும்
திரண்டு கனக்கிறது.

கழுகும்... வல்லூறும்
தருணம் பார்த்திருக்கிறது
கொத்தி நொருக்க.

பிரயத்தனப்பட்டும் முட்டையை உடைத்து
கந்தகநெடியில்
ஊறித்தோய்ந்து
அரசேறி ஆட்சியாளவும்
தெற்கின் இனவாத நாக்குகள்
உடுக்கடிக்கின்றன.
எப்பாடுபட்டாவது
முட்டை உடையாமல் பொத்திப்பாதுகாக்க
முனைப்பாயிருக்கிறது வடக்கு
அதற்காய் பதின்நான்கு
“வரி” மூச்சுகளும் அடங்கிப்போனது.

தெற்குத்தலைமையின் சூழ்ச்சியால்
சமாதான முட்டை உடையுமாயின்...?
கழுகினதும்....
வல்லூறினதும்...
இறக்கைக்குள் பதுங்கிக்கிடந்து
திமிறும் பரிவாரங்களை
இனியெழும் ஓயாத தீ
சூழ்ந்து பிடித்தெரிக்கும்.

ஆவரங்கால் சுதன்

# அமைதி

வெடிச்சத்தங்களில்லை
விமானங்களின் இரைச்சலில்லை
எகிறி வரும்
எறிகணைகளின் பூபாளமில்லை.
புண்களில்லை வலிகளில்லை
சாவுகளில்லை புலம்பல்களுமில்லை
ஆகவே.
அமைதி இங்கு நிலவுகிறதாம்
ஆனந்தப்படுகிறார்கள் சிலர்
‘இது அமைதியல்ல’ என்று நான்
மறுத்த.போது
‘எப்போது தான் நீ எவருடனாவது
ஒத்த கருத்தில் இருந்திருக்கின்றாய்?’
எரிந்து விழுகின்றனர் என் மீது
நாள் தோறும் வீட்டில் விருந்தினர்களின் ஆரவாரம்
வீதியில் நீந்திப்போகும்
விதம் விதமான வாகனங்களின் ஊதொலிகள்
அயல் வீட்டில் பெரிதாய் அலறும்
அந்நிய மொழிப்பாடல்கள்....
எதிர்வீட்டில் இரவுபகலாய்
இரையும் “எஞ்சின்”
கூடவே அஜய் விஜய் படங்கள்
அலுவலகம் தான் அமைதியென்றால்
அட இங்கே கூட இப்போ
அன்றாடம் சிறப்பு விருந்தினர்கள்
அமைதி தேடி ஆண்டவன் சந்நிதி போனால்
அங்கேயும் உல்லாசப்பயணிகள் படையெடுப்பு
வீடியோ புகைப்படபிடிப்புகளின் ஆக்கிரமிப்பு
தெருவோரம் தனித்து நின்ற ஆலமரத்தடி அமைதியென்றால்
அதன் கீழும் முச்சக்கர வண்டிகளின்
“ஹயரு”க்கான தவக்கோலம்!
எப்படி இப்போ அமைதிக்காலமென்று
நான் ஒப்புக்கொள்வது?

ஆதிலட்சுமி சிவகுமார்



# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்

# தேர்த் திருவிழாச் சிறப்பி




ஆற்றங்கரை வேலவனே!
ஆறுமுகத் திருவடிவே!
ஆறாத துயரங்கள் தீர்த்திடவே
தேரேறி வரும் நன் நாளில்
எம் தெய்வக்குமரனருள்

எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!

தலைவர், பணிப்பாளர்கள்
பணியாளர்கள்.

வலி - கிழக்கு வடபகுதி
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

அச்சுவேலி.

T.P:- 021-2225988, 0094-70212382 (சி-8377)

உரிமையாளர்,பணியாளர்கள்

செல்லமுத்தாஸ்
புடைவை மாளிகை

பிரதானசாலை, நெல்லியடி.

T.P:- 021-2263238 (சி-8378)

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்

உடுப்பிட்டி
T.P 021-2263342 (சி-8379)

உரிமையாளர், பணியாளர்கள்

நெல்லைக் குமரன் ரேடர்ஸ்

பிரதான சாலை, நெல்லியடி.

(சி-8380)


# எந்நிதியும் தருவான் செல்வச் சந்நி

இலங்கைத் திருநாட்டின் வட பகுதியிலே உள்ள தொண்டைமானாற்றங்கரையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது. இது மிகப் பெரும் வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வீரபாகுதேவர் சூரபத்மனிடம் தூது சென்ற போது தனது காலடியைக் கல்லோடை என்ற இடத்தில் பதித்துச் சென்றார். பின்பு திரும்பும் வேளை சந்திக்காலப் பூஜை செய்யவேண்டி இருந்ததால் வல்லி



ஆற்றங்கரையில் பூவரச மர நிழலில் வேல் ஒன்றை வைத்து சந்திக்காலப் பூசை செய்து வழிபாட்டினை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் சித்தர்களும், யோகிகளும், முனிவர்களும் தவம் செய்து முத்தியடைந்ததாகக் கருதப்படுகின்றது.

தேவலோக கந்தர்வனான ஐராவசு வியாழ பகவானுடைய சாபத்தால் யானையாகக் கதிர்காமக்காட்டில் மதம் கொண்டு அலைந்து திரிந்தான். கதிர்காமக் கந்தனை வேண்டித் தவம் செய்து கொண்டிருந்த சிகண்டி முனிவரை இவ் யானை தாக்க வந்த போது சிகண்டி முனிவர் தனது கையில் இருந்த வெற்றிலையின் நுனியைக் கிள்ளி கதிர்காமக் கந்தனை நினைத்து யானை மீது வீசினார். அவ் வெற்றிலை நுனி வேலாக மாறி யானையைத் தாக்க அந்த யானை துடிதுடித்து வீழ்ந்து கந்தர்வனாக உருவெடுத்து தனக்கு முத்தி தரவேண்டும் என வேண்டி நிற்க சிகண்டி முனிவரும் நீ வடபால் சென்று வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடைப்பகுதியில் தவம் செய்து முத்தியடைவாயாக எனப் பணித்தார்.

ஐராவசுவும் சிகண்டி முனிவர் கூறியவாறு வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடைப் பகுதியில் பூவரச மர நிழலில் தவம் செய்து சமாதியானார். இவ்விடத்தில் அமைக்கப்பட்ட, இக் கோவில் பல நூறு வருடங்களாகப் புகழ் பெற்ற வணக்கத் தலமாக இருந்து வருகின்றது.

16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இவ்வாலயம் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப்பட்டது. முருகப்பெருமான் ஆற்றங்கரையில் ஆடு மேய்க்கும் சிறுவனாகக் காட்சி கொடுத்து. "நான் அறுபத்து மூவருடன் இங்கு வந்து எழுந்தருள இருக்கிறேன். எனக் இவ்விடத்தில் ஆலயம் அமைத் 65ஆலம் இலைகளில் அமு படைத்து என்னை வழிபட வருபவர்களுக்கு அவ்வமுன வழங்குவீராக" எனக் கூறினா இதைக்கேட்டு ஆச்சரியமடைந் கதிர்காமர் "எனக்கு மந்திரமோ, பூ முறைகளோ தெரியாது. நான் எவ்வா தங்களுக்கு பூஜைசெய்வேன்?" என் கூற அவரைக் கணப்பொழுதில் க காமம் அழைத்துச் சென்று, அங் நடைபெறும் பூசை முறை ளைக்காட்டி, வாய்கட்டி பூசை செய மாறுகூறி வேல் ஒன்றையும் வழ கினார் என ஆலய புராணம் கூ கிறது.

செல்வச்சந்நிதி ஆலயத் தல விருட்சமாக பூவரசம அமைந்துள்ளது. இன்று இவ்வால அமைந்துள்ள இடத்தில் இருந்த பூவரசமர நிழலிலேயே வீரபா தேவர்வேல் ஒன்றை வைத்துச் ச காலப் பூசை செய்தார்.ஐராவசு எ முனிவரும் பூவரசமர நிழலிலே தவம் செய்து சமாதியானார். முரு பெருமானும் கதிர்காமருக்கு முதல் காட்சி கொடுத்தது ஒரு பூவரசமரத் கீழேயே எனக் கொள்ளப்ப டுகிறது.






அன்னதானக் கந்தனாகி அடியவரின் பசிபோக்கி
ஆற்றங்கரை வேலனாகி ஆறாத துயரம் தீர்க்கும்
சந்நிதிக் கந்தனருள் அனைவருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

*தலைவர்,பணிப்பாளர்கள்,*
*பணியாளர்கள்.*

பருத்தித்துறை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

எமது சேவைகள்:

- நுகர்ச்சி சேவை.
- கிராமிய வங்கிச்சேவை.
- வாகனச் சேவை.
- வாடகை கதிரைச் சேவை.
- எரிபொருள் விநியோகச் சேவை.

இன்னும் பல சேவைகளினூடாக
மக்களுடன் இணைந்துள்ளோம்.

☎ 021 226 3699

(சி-8381)

வேலுமாகி வேற்படையுமாகி -
உனை வேண்டும் அடியவரின்
வேதனையைப் போக்க
தேரிலேறி வாருமைய்யா.



தலைவர்,
பணிப்பாளர்கள்,பணியாளர்கள்.

கட்டைவேலி - நெல்லியடி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

T.P 021 226 3263

நாம்வழங்கும் சேவைகள்:-

- நுகர்ச்சிச் சேவை
- கிராமிய வங்கிச் சேவை
- கட்டடப்பகுதிச் சேவை
- ஒப்பந்தப் பகுதிச் சேவை
- வெதுப்பகம்
- நூல்நிலையம்
- கலாச்சார பெருமன்றம்
- புலமைப்பரிசில் வழங்கள்
- பாலர் பாடசாலை

*மேலும் பல சேவைகளினூடாக எமது மக்கள்*
*பயன் பெறும் வகையில் நாம் செயற்படக்காத்திருக்கின்றோம்.*

(சி-8382)

# சல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

# றப்பிதழ்- 09.09.2003





## வச் சந்நிதி முருகன்

இருக்கிறேன். எனக்கு
ஆலயம் அமைத்து
இலைகளில் அமுது
என்னை வழிபட்டு.
க்கு அவ்வமுதை
க''எனக் கூறினார்.
ஆச்சரியமடைந்த
னக்கு மந்திரமோ, பூசை
தெரியாது. நான் எவ்வாறு
பூஜைசெய்வேன்?'' என்று
கணப்பொழுதில் கதிர்
ழைத்துச் சென்று, அங்கு
பூசை முறைக
வாய்கட்டி பூசை செய்யு
ல் ஒன்றையும் வழங்
ஆலய புராணம் கூறு

வச்சந்நிதி ஆலயத்தின்
சமாக பூவரசமரம்
து. இன்று இவ்வாலயம்
இடத்தில் இருந்த ஒரு
நிழலிலேயே வீரபாகு
ன்றை வைத்துச் சந்தி
செய்தார்.ஐராவசு என்ற
பூவரசமர நிழலிலேயே
சமாதியானார். முருகப்
கதிர்காமருக்கு முதலில்
த்து ஒரு பூவரசமரத்தின்
கொள்ளப்ப டுகிறது.இத

னால் பூவரசமரமே செல்வச்சந்நிதியின் தல விருட்சமாக இருந்து வருகிறது.

அன்னதானக் கந்தன் என அன்பாக அழைக்கப்படும் முருகப் பெருமானுக்கு ஆவணி மாதத்தில் வரும் பூரணையில் தீர்த்தம் நடைபெறும். அதற்கு முன்வரும் அமாவாசை அற்றுப்போகும் தினத்தில் கோவில் கிணற்றுக்கு அருகே வள்ளிக்கொடி முளைப்பதோடு கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகிறது.

செல்வச்சந்நிதியில் முருகப் பெருமான் மூலஸ்தானத்தில் வேல் உருவிலேயே எழுந்தருளி இருக்கிறார். திருவிழாக்களின் போதும் வேலவன் வேல் உருவிலேயே வீதிவலம் வருகிறார். இவ்வேலில் சிகண்டி முனிவர் தன்னைத் தாக்கவந்த யானைக்கு வெற்றிலையை கிள்ளி வீசியபோது அது வேலாக மாறி யானையைத் தாக்கியதை எடுத்துக்காட்டும் முகமாக வெற்றிலையின்நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

செல்வச்சந்நிதி ஆலயம் கல்லோடை என்ற பகுதியில் அமைந்திருப்பதனால்கல்லோடைக்கந்தன் எனவும், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதால் காவடிக்கந்தன் எனவும், ஆற்றங் கரையில் எழுந்தருளி அருள்பாலிப்பதால் ஆற்றங்கரையோன்எனவும், வீரபாகு தேவர் சந்திக் காலப் பூசை செய்ததினால் சந்நிதியான் எனவும் பக்தர்களால் பல பெயர் கொண்டு சந்நிதி முருகன் அழை க்கப்படுகிறார்.

இவ்வருடமும் வழமைபோல வருடாந்த மகோற்சவம் 27.08.2003 அன்று இரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.எதிர்வரும் 09-09-2003 அன்று தேர்த்திருவிழாவும், பூரணை நாளாகிய மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. செல்வச் சந்நிதி முருகன் அருளால் - தமிழ் பேசும் மக்களின் இன்னல்கள் தீர்த்து - சகல சுபீட்சத்துடனும் சகல உரிமையும் பெற்று சமாதானமாக வாழ தெய்வீக அருளை வளர்க்க சந்நிதி முருகன் அருள்பாலிப்பாராக.



**சிறப்பிதழாக்கம் - காரையூரான்**



1986 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் எரித்து சாம்பலாக்கப்பட்ட சித்திரத் தேர்.

### வேலன் மணிக்குரல் வெல்லும்

செல்லச் சந்நிதி மாமணி ஓசை
சேர்க திசை எட்டும்!
கொல்லத் திரியும் கொடும்பகை வெறியர்
கொட்டம் அடங்கட்டும்!
வெல்லப் பிறந்தான் வேலன் மணிக்குரல்
வெற்றி படைக்கட்டும்!
இல்லைத் தளைகள்இல்லை என மணி
ஈழம் மலரட்டும்!

*-காசி ஆனந்தன்-*

### ஞானஒளி அருள்வாய்!

ஆற்றங்கரை மீதமர்ந்த வேலவா - தமிழர்
அவலம் தீர்க்க வேலுடனே எழுந்துவா; நாம்
நேற்றுவரை பட்ட அவலம் போதுமே - இனி
நிமிர்ந்து வாழ எமக்கு அருள்தாருமே; எங்கும்
காற்றுக் கூடச் சுதந்திரமாய் வீசுது - தமிழன்
கண்ணீர் வாழ்வைக் காலமின்று சொல்லுது; பக்தி
ஊற்றெடுக்கும் உன் பக்தர்களைக் காத்திடு - துயரம்
ஓடி ஒழிய ஞான ஒளி வீசிடு.

-பாண்டியன்-




வடகடலோரம் வாழ்வு கொண்டான்
எங்கள் வண்ணமயில் வேலன்!
நம் மக்கள் மனத்திடமோடு வாழ
தேரேறிவரும் குமரனருள்
கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்

உரிமையாளர், பணியாளர்கள்
**யோகாஸ் கிறீம் ஹவுஸ்**
கந்தமுருகேசனார் சிலையடி,
மந்திகை, பருத்தித்துறை.
(சி-8388)

உரிமையாளர், பணியாளர்கள்
**அருண் வீடியோமூவி**
பிரதானசாலை, நெல்லியடி.
(சி-8387)

உரிமையாளர், பணியாளர்கள்
**மமுனா ஸ்ரோர்ஸ்**
பிரதானசாலை, நெல்லியடி.
(சி-8386)

உரிமையாளர், பணியாளர்கள்
**ஹப்பி ரெக்ஸ்ரைல்**
இல: 110,பிரதானசாலை, நெல்லியடி.
(சி-8385)

உரிமையாளர், பணியாளர்கள்
**அருள்நாயகி கிறீம் ஹவுஸ்**
பிரதான சாலை, நெல்லியடி.
(சி-8384)



டி
ங்கம்
226 3263
ருமன்றம்
ல் வழங்கள்
லை
ன்றோம்.
(சி-8382)



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் தேரேறிவரும் செல்வச்சந்நிதி முருகனருள் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.



வடமராட்சி மண்ணில் புதிய உதயம்!

**சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்**
**SUVAI THENDRAL CREAM HOUSE**

நிறுவன முகவரி:-
சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்
சாரையடி,புலோலி தெற்கு,
புலோலி.
T.p:- 0777 - 564820

சுவையின் தரச்சிறப்பை நோக்கிய தென்றலின்
புதிய பயணம். அதுவே சுவைத்தென்றலின்
இனிய பயணம் இணைந்திடுவீர்எம்முடன் -
வாங்கி மகிழ்ந்திடுவீர்!

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான
வைபவங்களுக்கு பரிமாறிக்கொள்ளத் தேவையான
சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளை
ஓடர் கொடுத்து பெற்றுக்கொள்ள
**சுவைத்தென்றல் கிறீம் ஹவுஸ்**
கே.வி. சூரியகுமாரன்
நிறுவன உரிமையாளர்.

(சி-8383)

# வெற்றி! பெற்றுக்கொண்டிருக்கும்; ஜப்பான்–தமிழீழ முகாமைத்துவங்கள்

எந்தக்காரியத்துக்கும் 5 நிமிடங்களுக்கு முன்னராகவே ஆஜராகி விடவேண்டும் என்று எனக்கு 5 வயதிலிருந்தே ப்யிற்சி தந்து பழக்கப்படுத்தி விட்டவர் என் தந்தை.

பதறாமல் சிதறாமல் எதையும் திட்டமிட்டு நிதானமாய் செய்யும் திறன் அவருடன் கூடப்பிறந்த மாதிரிக்கூட்டு.

எடுத்த பொருட்களை எடுத்த இடத்தில் வைத்து பழக்கப்படுத்தி விட்டால் எந்தக்காரியமும் பாழாய்ப்போகாது என்பதனை படித்துப்படித்து சொல்லி செயுற்படுத்தியும் விட்டவர்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' பொருத்தமான தொடர் தான் அழைப்போ, நுழைப்போ நிர்வாக அம்மணியின் கட்டளையில், 2.00 மணி வகுப்பிற்கு 1.55 க்கு நான் ஆஜர்.

அங்கிருந்து வகுப்பு நடக்க இருந்த இடத்திற்கு 2.20ற்கே அழைப்புக்கிடைத்தது. 'நேர முகாமைத்துவம்' எனக்குள்ளேயே அழுத்தமாய் சொல்லிக் கொண்டு அமர்கிறேன். சில விதிவிலக்காய் தவிர்க்க முடியாதவை தான்.

2.30 அறிமுகம். பேராசிரியர் '.............'நேரமுகாமைத்துவமும்



நிர்வாகத்தடங்கல்களும் என்ற தலைப்பில்விரிவுரை நிகழ்த்துவார், 'கற்சா' ஒருவர் அறிமுகம் செய்கிறார்.

விரிவுரை விரிகிறது.....

'வினைதிறன்', 'பயனுறு தித்தன்மை', 'சரியானவற்றை சரியான வழியில் செய்தல்'ஒவ்வொரு தொடராய் விளக்கம் தொடர தொகுத்து வகுத்துக்கொள்கிறேன்.

முகாமைத்துவம் என்பது 'சரியானவற்றை சரியான வழியில் இணைத்துப்பெறும் பயனுறுதி' அதாவது 'வினைதிறனால் வெளிப்படும் உச்சப்பயன்பாடு.

பேராசிரியர் வினவுகிறார்:

முகாமைத்துவம் என்றால்:

'உச்ச பயன்பாடு சேர்'

"தம்பி சொல்லுறது கரட்" பதில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அப்ப நேரமுகாமைத்துவம் என்பது!

அவர் விவரிக்க முதலே விடை தெளிவாய்;

சரியான நேரப்பயன்பாட்டு இணைப்பை, சிறப்பாய் விரித்துரைக்கப்போகிறார் என நான் எண்ணிக்கொள்கிறேன்.

விரிவுரை விரிந்து ஜப்பான் முகாமைத்துவத்துக்குள் நுழைகிறது.

ஜப்பான் முகாமைத்துவம் முன்னேறி நிற்பது உலகறிந்த விசயம்.

எங்கே நுழையவில்லை ஜப்பான்.

போர் ஓய்வில் எம் தேசத்திலும் தேட்டமாகிவிட்டார்களே!

எண்ணங்கள் எட்டப்போகையில் பேராசிரியரின் உதாரணம் ஈர்க்கிறது.

அவர் தன் ஜப்பானிய நண்பரின் மனைவியை விரிக்கிறார்.

பேராசிரியர், அண்மையில் அவர் நண்பரின் வீட்டில் அளவளாவிக்கொண்டிருந்தாராம். வெளியில்கழற்றி வைத்துவிட்டு வந்திருந்த தனது சப்பாத்துக்களை துடைத்துத்தூய்மைப்படுத்தி அவர் நண்பரின் மனைவி வைத்து விட்டுப்போனாராம்.

எங்களூர்க்காரியாக இருந்தால் 'நான் என்ன உதுக்கோ இருக்கிறன்' எண்டிருப்பாராம்.

அவர் சொல்வது உண்மையாக இருக்கலாம்.

ஜப்பானியர்களின் முகாமைத்துவத்தினை நான் முன்னரே பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் 'ஆசிரியர்தின' நிகழ்வில் உரையாற்றிய உரையிலிருந்து அறிந்தது தான்.

எந்த நிர்வாகமானாலும் சரி, அது அதிகாரியாக இருக்கலாம் பணியாளராக இருக்கலாம், அதிபர், ஆசிரியராக இருக்கலாம், மாணவனாய் இருக்கலாம் வேலை நேரம் முடிந்ததும் அவையவை தங்கட தங்கட வேலைத்தளங்களையே, தாங்களேதான் சுத்தப்படுத்தி விட்டுச் செல்வார்களாம்.

அடுத்த நாள் அதிகாலைப் பொழுதை அனுபவித்துக்கொண்டு வேலையை தியானத்தோடு ஆரம்பிப்பார்களாம்.

எங்கட மாணவர்கள் வகுப்புக்க நுழைய முதலே செம்மண்புழுதியால் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பதைக்கண்டு விபரம் சொன்னார் பேராசிரியர்.

இந்தப்பணி இழிவானது: இந்தப்பணியை இவர் தான் செய்யவேண்டம் என்ற வரம்புகள், வரையறைகள், அற்ற எல்லையற்ற 'கண்ணியமே' 'கவனம் குவித்த கடின உழைப்பே' அவர்களது 'நிமிர்வு'

அவர்களுக்கு 'வானமே எல்லை.'

'பேதங்களற்ற பிணைப்பால் திரண்ட' உச்சப்பயன்பாடு அவர்களிடம்.

அதனால் தான் அவர்களால் உலகமெல்லாம் உலாவந்து உறுதியான இடத்தை உளமாரப்பிடிக்கவும் உயரவும் முடிந்தது, முடிகிறது.

'எண்ணங்கள் உச்சம் பெறுகையில் வண்ணங்கள், வாண்மைகள், வாய்மைகள் உயரும். உணர்ந்தவர்களுக்குப்புரியும் உணராதவர்களுக்கு புரிய அனுபவம் சேர வேணும்.

'உணர்ந்தவற்றையெல்லாம் உணர்த்தி விட முடிவதுமில்லை. உணர்த்துபவற்றை யெல்லாம் உணர்ந்துகொள்ள முடிவதுமில்லை.' அவனவன் உணர்தல்கள் உரைப்புகள் அவனுக்கு உச்சாடனம்.

உயர் தரம் படித்துக்கொண்டிருந்த போது ஜப்பானியர்களின் உயரமறிந்து உச்சாடனம் பண்ணியிருக்கின்றேன். பண்ணை மனனம் பண்ணுவதுபோல்.

படித்தவை யாவும் தியரியில்தான் எங்கள் தேசத்தில் என்று கருதியிருக்கின்றேன் இவர்களுடன் இணைய முன்னர்.

இணைந்ததன் பின்னர் தான் இவர்களது விசாலிப்பும் விண் முட்டலும் கூட அதே ஜப்பானிய முகாமைத்தவ செயற்திறனிலேயே என்பதைக்கண்டு கொண்டேன்.

பணியாளராய் இணைந்து 10 ஆண்டுகள் கடந்து விட்ட போதும் பணி மாற்றத்தை ஒரு போதுமே வேண்டத்தோன்றவில்லை.

பட்டம் பட்டமாய் பெற்ற பட்டதாரிகள் பரிந்துரையிலும் நிர்மானிக்காத நிர்மானங்களை 'படாததாரி'களான இவர்கள் 'பட்டறிவுப்' பட்டம் கொண்டு பரிணமிப்பதன் நிமிர்வு 'இலட்சியப்பற்றுதியின் இணைப்பின் பிணைப்பில் பின்னப்பட்ட வலையில்' அடக்கமானது.

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேணும்! எதிர்க்கடையாய் பிரகாசிக்கும் ஒரு போது! என்று எனக்கு அடிக்கடி 'டாலடிக்கும்' இந்த இள வட்டஇளவல்களின் செயற்திற நுட்பங்களைப்பார்க்கையில்.

என்எதிர்வு கூறல் நீளுகையில் விரிவுரை விரிகிறது.

"ஜப்பான் பெண்கள் வாயால் கதைத்துக்கொண்டே கையால் பொம்மை செய்பவர்கள் நம் பெண்கள்....

வகுப்பு கலகலக்கிறது.

ஆண்கள் பலரதும்பார்வை எங்கள் மீது பதிகிறது.

அவர்கள் பார்வை அல்ல என் பொருட்படுத்தல் அவரது வாசகங்களே வட்டமிட்டுக்கொண்டிருக்கையில் பொறிதட்டல்.

"பேராசிரியர் ஒரு நிமிசம்! வினைதிறன் எங்கள் பெண்களிடம் தான் அதிகம். பயனுறுதியும் எங்களிடம் தான். ஏனென்றால் அவர்களின் உயிரற்ற பொம்மைகளையே நீங்கள் இவ்வளவு தூரம் விளம்பரப் படுத்துகிறீர்கள் என்றால் எங்கள் பெண்கள் உயிருள்ள பொம்மைகளை அல்லவா உருவாக்கம் செய்கிறார்கள். உருவாக்கத்தின் உத்தரவாதம் எங்கள் ஆண்களையே சாரும். அவர்களின் வினைதிறன் வீரியத்திற்காய் கேடயம் வழங்கினும் தகும். ஜப்பானிய ஆண்களுக்கு இவர்களது நுட்பத்தை கற்றுக்கொடுக்க இவர்களையே விரிவுரையாற்ற அனுப்பி வைத்தாலும் தகும்.' என்று ஜோக்காய்ச்சொல்ல எத்தணிக்கையில் அதனுள் ஆழப்புதைந்திருக்கும் உண்மை உறைக்க வாய்வரை வந்து விட்ட வார்த்தைகளை விழுங்கிக் கொள்கிறேன்.

ஆழப்புதைந்திருந்த வேர் துல்லியமாய் வியாபிக்கிறது. கணிப்புக்கருத்தில் கொள்ளப்படுமானால் நிர்ப்பந்திப்பில் நிறமிழந்த பெண்களுக்கு, ஆனை தன் தலையில் தானே மண்ணை வாரிக்கொட்டுவது போல் தாமே வாரிக்கொட்டி நிறமிழந்த பெண்களுக்கு இது சமர்ப்பணம்.

இராஜம் கிருஷ்ணத்தின் 'காலம் தோறும் பெண்' பார்த்தவர் களுக்குப்புரியும். தாய் வழிச்சமுதாயமாய் தடம் பதித்திருந்த பெண்ணினம் தந்தை வழிச் சமுதாயத்தினால் தடம் மாற்றப்பட்ட வரலாறு. தாமே 'ஆனை' கதையாய் தடம் மாறிய வரலாறு.

தந்தை வழிச்சமுதாயம் தலையெடுக எப்ப வழி கோலினரோ அன்றே பெண்ணின் முகாமைத்துவம் வேரோடே கவ்வி எறியப்பட்டு விட்டது.

ஜப்பானியப்பெண்களினது உச்ச பயன்பாட்டு முகாமைத்துவம் 2ஆம் உலகமாகயுத்தத்திற் குப்பின்னரான அண்மையது.

அணுகுண்டால் அடக்கப்பட்ட, அழிக்கப்பட்ட ஜப்பான் முழுமூச்சாய் எழும்பவேண்டிய ஆண் , பெண் கடந்த ஜப்பான்வாசிகள் அத்தனை பேரினதும் முனைப்பு மூச்சது.

கலைந்துபோன பெண் முகாமைத்துவம் காலத்தேவையில் அத்துப்படியாகி ஆண் முகாமைத்துவமும் இசைந்து அனுசரித்து இணைந்து பெற்ற உச்சம் இன்றைய உயர்வுச்சம்.

தேவையின் உச்ச விழிப்பில் திறந்ததே, ஜப்பானிய ஆண்களின் இடைச்செருகல் தளர்ந்த பெண் முகாமைத்துவக்கண்கள்.

இங்கு இன்றும் தந்தை வழித்தலையெடுப்பு கடினமாய்த்தான் இருக்கிறது. விடுதலை வேண்டிநிற்கும் விடுதலைத் தலைமையைத் தவிர.

நம் தேசமும் உச்சம் பெறும். முதற் போதனையாய் அமைய வேண்டியது 'பெண் முகாமைத்துவமே!'

ஆதாரம் தமிழீழத்தேசியத் தலைவர்

'உலகம் பெண்மையின் காலடியில் சுழல்வதால் தான் நான் பெண்மையைப்போற்றுகிறேன். இங்கென் தங்கைகள் படைக்கும் சாதனைகளில் தலை நிமிர்ந்து கொள்கின்றேன்.' என்ற சிந்தனையின் சிருஷ்டி வடிவம் 'பெண்கள் படையணிகள்' 'பெண்கள் நிர்வாக அணிகள்' அவர்கள் படைத்து நிற்கும் 'சாதனைகள்'

பேராசிரியர்,'போதனையே தம் பணி; சாதனையல்ல' என்றே வகுப்பை ஆரம்பித்திருந்தார்.

போதனைகள் மட்டுமல்ல சாதனையின் சரக்குகளும் அவர்களிடமே இருப்பதாய் என் உணர்தல்.

பேராசிரியர்கள் பல கலைப்பீடங்களில் பல கலைகளையும் போதனை செய்பவர்கள். இன்ன அச்சில் இன்ன வரவேண்டும் என்று வார்க்கப்படுமானால் வார்ப்புக்கள் அச்சை அசலாய்கொண்டு தானே அமைய முடியும்.

ஆசிரியர்கள் சமூகத்தின் அற்புத ஊடகங்கள்.

உயர்கல்வி நிறுவனங்களுக்கான உற்பத்தி மூலப்பொருட்கள் முளைவிடுவது அவர்களிடம் தானே.

'பெண் முகாமைத்துவத்தினை' சரியான போது சரியான வழியில் இணைப்புச்செய்து இளைய தலைமுறைக்கு போதனை செய்வார்களேயானால் ஜப்பான் மட்டுமல்ல தமிழீழமும் வலை பின்னும். இணையத்தளத்தில் இமயம் தொடும்.

மேட் இன் ஜப்பான் (Made in Japan) போல மேட் இன் தமிழீழம் (Made in TamilEelam) ( J.T)

விடைபெறுகிற போது பேராசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான எழுத்துருவாக்கம் என்கையில் ரெடியாய்.

"கற்பித்தல் நிறைவோ..." என்கிறார் பேராசிரியர்

"கையில் இருக்கும் கணிப்பு செயலாக்கம் பெறுமானால் காலம் பதில் சொல்லும்' என் எண்ணங்கள் இணையத்தளம் போல் வலை பின்னிக்கொள்கிறது.

**ஆதித்தநிலா**




## சில 'ஸென்' ஹைக்கூ கவிதைகள் -

* குயிலின் கூவல்
அதைவிட சிறப்பாக
செய்வதற்கேதுமில்லை...
அந்த காட்டுச்செடிக்கும் தான்...

**இஸ்ஸா.**

* கத்தரி வெருளிப்பொம்மை
நெல்வயலில்
எத்தனை விழிப்புணர்வற்று!
எத்தனை உபயோகமாய்!

**டோஜென்**

* வண்ணத்துப்பூச்சிகள் அன்போடு
தொடர்கின்றன
மலர்வளையம்
சாத்தப்பட்டுள்ளது சவப்பெட்டி மேல்

## சில 'சிரீத்திரன்' விளக்கங்கள் —

**மகான்:** சஞ்சிகைகளின் இடை வெளிகளை நிரப்பபொன் மொழிகளை உதிர்க்கும் ஆத்மா.

**நித்திரை:** மனிதன் பாவம் செய்யாத நேரம்.

**தேன்கூடு :** ஊழலில்லா கூட்டுறவுச் சங்கம்.

**உழவன்:** அன்னதானம் வழங்கும் ஏழை.

## சிலபழமொழிகள் —

* ஆசைகள் குதிரைகளானால் பிச்சைக்காரர்கள் கூட சவாரி செய்வார்கள்.

* சுளையை சுவைப்பது பிள்ளைகள், தோலில் வழுக்கி விழுவது பெற்றோர்கள்....

* தடியடி ராமனுக்கு தயிரும் சோறும், விசுவாசக்காரனுக்கு நீருஞ் சோறும்.

## சில 'பேருந்து' (பஸ்) மொழிகள்

* சாரதிக்கு சவாரி ஓட்டம் சனங்களுக்கு சீவன் போகிறது.

* ஏறப்பொறுத்த சாரதியார் இடந்தேடி இருக்கப் பொறுக்காராம்......

* குடுகுடு கிழவிக்கு இடம் கொடார், கியூட்டெக்ஸ் நங்கைக்கு இடம் கொடுப்பார்....

* இருக்கிறதுக்கு இடம் கொடுத்தால் படிக்கிறதுக்கு பேப்பரையுமெல்லே கேட்கிறார்

**சித்திரவேலாயுதன்**

## சில சுவையான தகவல்கள்

* நத்தை வேகம், ஆமை வேகம் என்று கிண்டல் செய்கிறோம் அல்லவா.... சரி அவற்றின் வேகம் தான் என்ன?

நத்தை 17 1/2 அடி
ஆமை 227 அடி - ஒரு மணித்தியாலத்தில் நகரும் தூரம்தான் இவை.

* லட்சதீவு என்ற இடம் வெறும் 27 தீவுகளை மட்டுமே கொண்டதாகும்.

* மனிதன் என்ற சொல்லின் பொருள் நினைப்பவன் என்பதாகும் - நினைக்கும் கருவி மனம். மனத்தையுடையவன் மனிதன்.

* ஒரு தலைமுறையென்பது 33 வருடங்களைக்குறிக்கும்.

## சில சிந்தனை மொழிகள்

* சொல்லைப்புதையுங்கள், செயலை விதையுங்கள்.

* மனம் கோழையானால் வீரம் விலைபேசப்படும்.

* காதலியை மனைவியாக்க துணிவு தேவை.
மனைவியை காதலியாக்க கனிவு தேவை.

* கண்கள் தங்களை நம்புகின்றன ஆனால் காதுகளோ பிறரையே நம்புகின்றன.

**யார்யாரோ....**

—— **பொறுக்கி**




## பரிதல்

மரம் பூக்களைக்கொட்டிற்று
நானும் அவளும் சிரித்தோம்
மரம்
காய்களைக்கொட்டிற்று
நானும் அவளும் சிரித்தோம்
மரம்
பழங்களை கொட்டிற்று
நானும் அவளும்
சிரித்தோம்
மரம்
இலைகளைக்கொட்டிற்று
நான் சிரித்தேன்
அவள் அழுதாள்.
அவளுக்கு
மரத்தைத்தெரியாது என்பதை
நான் புரிந்தேன் அப்போது
மரம் விழுந்தது
நான் அழுதேன்
அவள் சிரித்தாள்
என்னை அவளுக்கு தெரியாது
என்பதிலும் தெளிந்தேன்.

பொன். காந்தன்.

## அன்று அப்படி இன்று இப்படி

உன் முன்னுரைகள் எல்லாம்
எனக்கு முரணுரைகள் தான்
உன் தத்துவங்கள் எல்லாம்
என் முன் தமாசுகள் தான்
உன் ஞான உதயங்கள் எல்லாம்
எனக்கு நகைச்சுவைகள் தான்
உன் போதனைகள் எல்லாம்
எனக்கு போலிகள் தான்
உன் ஆன்மவீழிப்பெல்லாம்
எனக்கு அலட்டல்கள் தான்
அன்று அப்படித்தான் இருந்தது,
இன்று என்பேதரி
உன் உரைகளை
உரை பெயர்ப்பு செய்தபின்பே
உன் உயிரோட்டமான
உன்னத கருத்துக்களை
உள்வாங்கிக் கொண்டேன் – இனி
உயரப்பறப்பேன் – உன்போல்
உச்சத்தை அடைவேன்.

உமா

## சகோதரனே உனக்காக..

சகோதரனே!
சினிமா நடிகருக்காகவும்
அரசியல் அதிகாரிக்காகவும்
தீக்குளித்து விணே தீயில் எரிவது
ஏன்?

அதை தியாகம் என்கிறாய்
சகோதரனே!
ஒரு நல்ல குறிக்கோளுக்காக...
கொள்கைக்காக...
உன்னை அர்ப்பணி!

அதை சிலர் தியாகம்
என்றாவிடினும் பலர் முன்
நீ தியாகி என்றாகி விடுவாய்!

எஸ்.விமல்
மன்னார்

ஓ...
வெளிநாட்டு நண்பா
ஓடிக்களைத்து
நீ வந்தபோது
எங்கள் தாயகம்
உன்னை வரவேற்கிறது
ஆனாலும்
அழாதே...
உன் மாமாவும்
சித்தப்பாவும்
ஏன்
உன் காதலியும் தான்
உன் வரவு சுகமாக இருப்பதற்காக
உதிரத்தால் உயில் எழுதி
உயிரை தியாகம்
செய்தனர்.
மெள்ளப் பாதத்தை
பதித்துவா
உன் ஒவ்வொரு
சுவடுகளுக்கடியிலும்
எங்கள் மரகதப் பூ க்களின்
வியர்வை முத்துக்கள்
புதைந்துள்ளன
பொறுக்கி எடுக்க முடியாத
முத்துக்களை சிந்திய
சிற்பிகளால் உருப்பெற்றதே
இந்த
சமாதான சித்திரத்தேர்.

ரி.றமேஸ்
வட்டக்கச்சி

## வாய்க்குள் தெரியும் ஒளி

நேற்றைய வடுக்கள்
இன்னும் நோகிறதெம்நெஞ்சில்
என்னையும் அவளையும் எல்லோரையும் ~ நீ
(அன்று)
கண்களைக்கட்டி இருட்டாக்கி விட்டு
இன்னும் பகலை மென்றபடியிருக்கிறாய் நீ
ஒரு மின்மினியின் ஒளியில்
உன் அதர்மங்களை விழுங்குகையில்
என்னைப்போலவே எல்லோர்
கண்களிலும் நீரள்ளி இறைக்கின்றாய் நாளும்
சூரியன் பற்றி அதன் வருகை பற்றி
ஆசைகள் ஊட்டி புன்னகைக்க செய்கிறாய்
அகலத்திறந்த உன் வாய்க்குள் தெரியும்
முத்துப்பற்களை விடிவெனக்காட்டும் உன்
சைகையில் லேசாய்ப்பனிக்கிறது உள்ளம் ~
இருந்தும்
மெல்லத்திறக்கும் கதவு அறையினுள்
கிடக்கும் சர்ப்பங்கள் பற்றி.....
எடை போட்டு உந்துகின்றது என்மனம் நாளும்.

ம.அருள்யோசன்
விசுவமடு

## இளையவர்களே!

இவ்வளவு காலமும் வெள்ளிநாதம் வழங்கிவந்த இளைய நாதத்தை இப்பொழுது இளையவர்களுக்காகவே இசைக்க விட்டுள்ளோம்.

இளையவர்களே உங்களுக்காகவே குறுக்கெழுத்துப்போட்டி, கவிதைகள், உங்கள் உள்ளக் கருத்துக்கள் இன்னமுமாக எழுகின்றது இளையநாதம். எழுதுங்கள்.

இளையநாதம்.
வெள்ளிநாதம்.
கிளிநொச்சி.

## குறுக்கெழுத்துப் போட்டி .இல-36

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | 03 | | | | 07 |
| 08 | | | | | | |
| 15 | | | | | 20 | |
| 22 | 23 | | | | | |
| | | | 32 | 33 | | |
| | | | 39 | | 41 | |
| | | | | | | |

### இடமிருந்து வலம்

01. திருக்குறளின் பிரிவுகளில் ஒன்று.
08.'மதி' குழம்பி உள்ளது.
15. கணவன்,மனைவி குழம்பி உள்ளது.
20. வீடு.
22. சூரியன் குழம்பி உள்ளது.
32. வயலும் வயல் சார்ந்த இடமும்
39. தாய்.

### மேலிருந்து கீழ்

01. இரகசியம்.
03. உண்மை குழம்பி உள்ளது.
07. 'புல்மோட்டையில் அதிகம் காணப்படும்' குழம்பி உள்ளது.
23. திருடன்.
33. இளையசகோதரன்.
39. கடலில் தோன்றுவது.
41. மாதங்களில் ஒன்று.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.34 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பஞ்சாயத்து.
08. ஆபரணம்.
14. கண்.
17. ஆதி
21. கலசம்.

**மேலிருந்து கீழ்**

01. படைத்தல்.
08. ஆண்டவன்.
09. பகலவன்.
12. சத்தியம்.
17. ஆம்பல்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.34 இன் பரிசுக்குரியவர்**
அ.தேவப்பிரியன்,
புற்றளை வளவு,
பருத்தித்துறை.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.34 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

எஸ்.ஜீவன்,
இல.723, சிவிக் சென்றர்,
வட்டக்கச்சி.

ந. வதனி,
43/9 1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்.

கா. தனுஷான், தரம் -4',
இராமநாதபுரம் மேற்கு,
அ. வித்தியாலயம்.

பி. குணவரன்,தரம் -3',
புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம், யாழ்

பா.அஜிர்தன்,
வெள்ளாங்குளம்,
மன்னார்.

**இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.36
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## ஊக்கமாத்திரை




**எப்பொழுதும்** இளம் உள்ளங்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதை விட அதிகமான செயல்கள் நிறைவேறும். அதே போலத்தான் உங்கள் மனமும், உங்களுடைய சிறுசாதனை களைப்பாராட்டுவதன் மூலம் நீங்கள் வெகு தூரம் போகலாம். சிறு சாதனைகளில் உங்களிற்கு ஏற்படும் வெற்றி இலட்சிய தீபமாய் உங்களுக்கு வழிகாட்டும்.

வாழ்க்கையில் நீங்கள் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டால், ஒவ்வொரு நாள் உதயத்தையும் நீங்கள் மகிழ்ச்சியுடன் எதிர் நோக்குவீர்கள். இன்பமாக வரவேற்பீர்கள். ஒவ்வொரு பொழுதும் உங்களுக்கு நல்ல பொழுதாகவே விடியும். வெற்றி வாழ்க்கையை ஒரு போதும் கைவிடாது. வாழ்க்கையை நேசிக்கக்கற்றுக்கொண்டு விட்டால், முயற்சிகள் தானாகவே தொடரும். துணிந்து நம்பிக்கையுடன் செயற்படுவது தான் வெற்றியை நோக்கி அழைத்துச்செல்லும் பாதையாகும். வெற்றியை விரும்பும் நீங்கள் வசதிகளையெல்லாம் எதிர்பார்க்கக்கூடாது. அனாவசியமாக, இது அப்படியில்லை; அது இப்படி யில்லை என்று சொல்லி வெற் றியை கோட்டை விட்டுவிடாதீர்கள்.

இந்தக்காலத்தில் நன்றாகப் படியுங்கள். புதிய புதிய கண்டுபிடிப்புகளைக்கண்டு பிடியுங்கள். உங்களுக்கு நல்ல ஆசான்கள் வழிகாட்டியாக இருக்கின்றார்கள். நீங்கள் நன்றாக செயற்பட்டு சாதனைகளைப் படையுங்கள். மனிதன் பிறந்தான் வளர்ந்தான் இறந்தான் என்பதில் அர்த்தமில்லை. அவன் வாழ்ந்த காலத்தில் என்ன செய்தான் என்பது தான் பெருமை. நீங்கள் நல்ல காரியம் செய்து விட்டதாக நின்மதியடையலாமல்லவா! அந்தத் தன்நம்பிக்கையே தொடர்ந்தும் உங்கள் வாழ்க்கை முழுவதும் இட்டுச்செல்லும் செயல்கள் மட்டுமே வாழ்க்கைக்குப்பலம் அளிக்கின்றன என்பதை அப்பொழுது நீங்கள் உணர்வீர்கள். செயலின் முக்கியத்துவத்தை உணருவீர களல்லவா! செய்ய வேண்டிய காரியம் சிறிதானாலும், பெரிதானாலும் தாமதப்படுத்தாது செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் தோல்விகளை தவிர்த்துக்கொள்ளலாம். இந்த விடயத்தில் இளையவர்களாகிய நீங்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

நீங்கள் எந்தக் காரியத்தைச்செய்யப்புகுந்தாலும் அதில் முழுக்கவனம் செலுத்தி செய்கின்ற ஆற்றலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெற்ற நாயகர்கள் எல்லாம் இவ்வாறே இருந்தவர்கள். எந்தவொரு காரியத்தைச் செய்தாலும் உங்கள் சிந்தனையைச்சிதறவிடாமல் அந்த ஒரு காரியத்திலே நாட்டமுடன் ஈடுபடுத்த வேண்டும். இப்படிச்செய்வது நீங்கள் செய்கின்ற காரியத்தை செம்மையாக முடிப்பதற்குத்துணைபுரியும்.

உங்கள் எண்ணம் உறுதி பெறும் போது மனதில் நம்பிக்கை வேர் விடுகிறது. நம்பிக்கைதான் நோய்களைக்குணப்படுத்துகின்றது. அதே போலதான் உங்களது இலட்சியங்கள் நம்பிக்கையாய் மாறும்போது, சாதனைகளாக அதிசயங்கள் நிகழும்.

'முயன்றால் முடியாதது இல்லை" என்பதை நீங்கள் எப்பொழுதும் மனதில் கொண்டிருக்க வேண்டும். இந்த நம்பிக்கையுடன் செயற்படக்கற்றுக்கொண்டால், ஆற்றல் பெறுவதை நீங்கள் உணர முடியும்.

நண்பர்களே நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயம் "எனக்கு என்ன, வயதாகி விட்டது'' என்று எண்ணி உங்களைச்சிறுமைப்படுத்திக் கொள்ளாதீர்கள். தளர்ந்து போகாதீர்கள்! இலட்சியங்களை எந்த வயதிலும் கொள்ளலாம். இதற்கு வயது வரம்பு ஒன்றும் கிடையாது.

உங்கள் ஆற்றலை வளர்க்க உங்கள் உழைப்பு ஒன்றே வழி. உழைப்புப்பெருகினால் ஆற்றலும் மிகுதியாகுமல்லவா! ஆற்றலின் வளர்ச்சியில் நீங்கள் சாதனையின் குவியலைக் காண்பீர்கள். இவ்வாறு உங்கள் சாதனை பெருகும் போது உங்கள் நம்பிக்கை உறுதி பெறும். இதனால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? சோர்வின்றி உழைக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே உங்கள் வாழ்க்கை வெற்றிக்கு உறுதுணையாக அமையும். இவ்வாறு செயற்பட்டால் நம்பிக்கையே வழி காட்டும்.

*த.செந்தமிழ்*

செயலுக்கு உந்தாத சொற்கள், இலட்சிய உணர்வின் கொலையாளிகள். –ஹெர்பெர்ட்ஹூவர்




## சிறுவர்கதை

# ஏமாற்ற நினைப்பவர்கள் ஏமாற்றப்படுவார்கள்

சின்னத்தம்பி செட்டியாரின் குடும்பம், என்றால் அக்கிராம மக்களுக்கு நல்ல பிரியம். சின்னத்தம்பி செட்டியார் என்று யாரும் உச்சரித்தால், அவருக்கென்ன? பதற்றத்துடன் கேட்பார்கள்.

அந்தக்கிராமத்திலே பணக்கார குடும்பம் என்றாலும் கூட செட்டியாரின் குடும்பம் தான்.

செட்டியார் ஏழைகளுக்கு உதவி செய்வதில், இரக்கங்காட்டுவதில் கொடை வள்ளல். தன்னிடம் உதவி கேட்டு வருபவர் களுக்கு அவர்கள்மனம் மகிழ பணத்தையோ, தானியங்களையோ அள்ளிக்கொடுப்பார்.

செட்டியாரின் மனைவி அவருக்கு சொல்லிச்சொல்லி வாய் அலுத்துப்போய்விட்டது. செட்டியார் அதைக்கேட்பதாய் இல்லை. "கொடுத்தார்க்கு குறைவில்லை." இதைத்தவிர அவரின் வாயால், வேறு எந்த வார்த்தையும் வருவதில்லை.

ஒரு நாள் இளைஞன் ஒருவன் செட்டியாரிடம்,

''செட்டியார் நான் அயல்கிராமத்தில் பலசரக்குக்கடை யொன்று போடப்போகிறேன். அதற்கு இன்னும் 50,000/- ரூபா வேண்டும்...'' என்று இழுத்தான். செட்டியார் ஏதும் கூறாமல் அவன் கேட்ட காசைக்கொடுத்தார். அவன் பணத்தைக்கையில் வாங்கியதும் நன்றி சொல வதைக்கூடமறந்து வேகமாய் நடந்தான்.

காலப்போக்கில் செட்டியாரின் செல்வங்களெல்லாம் அழிந்தேபோய்விட்டது. அவரின் மனைவி, ஒரு நாள், கூலி வேலைக்குப்போகாவிட்டால் அன்று அடுப்பு புகையாநிலை.

ஒரு நாள் செட்டியார் மனைவியுடன் அயல்கிராமத்திற்குச் சென்றார்.அருகில் இருந்த பலசரக்குக்கடைக்கு தண்ணீர் குடிப் பதற்கு சென்றார். அந்தக்கடைக்காரப்பெடியனை அவருக்கு எங் கேயோ கண்ட ஞாபகம். கண்ணா டியை கழற்றிக்கையில் எடுத்து விட்டு,

"தம்பி..... நீங்கள்.... தானே என்ர வீட்ட வந்து கடைகட்ட வென்று காசு கொஞ்சம் வேண்டினியள்" ஆதங்கத்தோடு கேட்டார் செட்டியார்.

அவன் அவரைப்பார்த்து, வேடிக்கையாய் சிரித்தான்.தன் நண்பர்களிடம் "என்ன மச்சான்யார் இந் தக்கிழவன், தெரியுமே"என்றான் அந்த இளைஞன். அவன் வார்த்தைகள் செட்டியாருக்கு ஈட்டியால் தாக்கியதுபோல் வேதனை அளித்தது.

அள்ளி அள்ளிக்கொடுத்தான் கரங்களை ஒன்றோடொன்று உரசியபடி, "நான் போட்டு வாறன் தம்பி" என்று விடைபெற்றார். அவன் அவரின் வார்த்தையை பொருட்படுத்தாது தன் நண்பர் களுடன் பம்பலடிப் பதிலேயே இருந்தான்.

மறு நாள் காலை அந்த இளைஞனின் கடையில் 3கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் களவுபோய்விட்டதாய், செட்டியார் அறிந்தார்.

"பாவம் கடைவியாபாரம் செய்து அனுபவமில்லாத பெடியன் போல, யாரோ ஏமாற்றிப்போட்டாங்கள்." செட்டியார் வேதனைப் பட்டார்.

ஏமாற்ற நினைப்பவர்கள் ஏமாற்றப்படுவார்கள் என்பதை அவன் அப்போதேனும் உணர்ந்திருப்பானோ, என்னவோ.

**பா.இசைவிழி**

# வாரம் ஒரு குறள்



இளையவர்கள் நாம் காணும் சூழலில் பலரைக் காண்கிறோம். பலருடைய வாய் மொழிகளைக் கேட்கிறோம். இவற்றில் நாம் பேசத்தகுந்த வார்த்தைகள் அனேகமிருக்கின்றன. இனியனவான அவைகளை தவிர்த்து பேசத்தகாத வற்றை பேசிப் பழகுதலும் மற்றயவர் மனதை புண்படுத்துவதும் நாம் செய்யும் மாபெறும் தவறாகும் ஒரு மரத்திலேயே கனிகளாய் நாவுக்கு இனியவையாய் பலதிருக்க காய்பறித்து உண்பதற்கு ஒப்பு என உவமிக்கிறார் இச்செயலை வள்ளுவர்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய் கவர்ந்தற்று"**

# சொற்சிலம்பம் - 01

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச் | ரெ | சீ | மா | ழ | ஜெ | டி |
| ப | ட | கோ | லீ | க் | சோ | ண் |
| வ | ல் | தீ | நு | ம | ஆ | பு |
| ள | லை | ம | டி | ன | தி | மூ |
| ரு | வெ | லி | ம் | ட் | பு | ண |
| க | பீ | கொ | ரு | யா | யி | க |
| பு | ரு | டீ | ள | ரா | ப் | ணி |

மேலுள்ள கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடையளியுங்கள்.

இலங்கையில் உள்ள ஐந்து மாவட்டங்கள்?

01) ..............................
02) ..............................
03) ..............................
04) ..............................
05) ..............................

பெயர்
முகவரி :-..............................
..............................

சொற்சிலம்பம் -01
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

# நகைச்சுவை

**மகன்:-** அப்பா ஏன் பிள்ளையாருக்கு எலியையும் முருகனுக்கு மயிலையும் வாகனமாக கொடுத்து இருக்கின்றார்கள்.

**அப்பா:-** அந்தக்காலத்தில் கார், வான் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லையே அதனாலதான்.

**சி.நளாயினி,**
**திருகோணமலை.**

# பாட்டு

வண்ண வண்ணபூக்களாம்
வாசம் உள்ள பூக்களாம்
வண்டு மொய்க்கும்
பூக்களாம்
வடிவான பூக்களாம்
காலைமலரும் பூக்களாம்
கோயில் செல்லும் பூக்களாம்
கோபுரம் ஏறும் பூக்களாம்

**வா.தேனுஜா**
**யோகபுரம்**

# ஏமது அன்னை

அன்னை எனது ஆருயிர்
அன்பை ஊட்டும் என் உயிர்
பண்பாய் என்னை வளர்த்துமே
பாரில் என்னை உயர்த்தினார்

மண்ணில் பெரியது தாயன்பு
அதைமகிழ்வுடன்ஏற்பதுஎன்பண்பு
கண்ணைப்போல காத்தவரை
கடைசி வரையில் மறவேன்.

**மு.ஷோபிகன்,**
**C.C.T.M.S**

# நல்ல வியாபாரம்



# போருடன் ஒரு வாழ்வு

தமிழ்க்கவி

> தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், தமிழ் மக்கள் செய்த அர்ப்பணிப்புக்களை, அவர்களின் தியாகங்களை கூறும் உண்மைச் சம்பவங்களின் பதிவு இது. பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.



***அன்று*** காலைப்பொழுது மிக வேகமாக விடிந்து விட்டது போல தெரிந்தது. பூமணி தன் பாயைச்சுருட்டி எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டாள். அவள் மனம்... கொஞ்சக்காலமாக வீட்டில் படுக்க முடிவதில்லை. அவர்களுடைய வீடு இராணுவப் பகுதிக்கு மிக அண்மையில் இருந்தது என்பதுதான் காரணம். பொழுது பட்டால் செல்லடிக்கத் துவங்கிருவாங்கள். பூமணியும் ரெண்டு பிள்ளையளுமாத்தனிய என்ன செய்யிறது. சிறியதாய் ராசம்மாவுக்கு மூன்றாவது பிரசவம். என்னவோ பிள்ளை குறுக்கிட்டுக்கிடக்குதாம் எண்டு நேரத்தோட கொண்டு வந்து விட்டிடவேணும் எண்டு ஆசுப்பத்திரியில சொன்னவையாம். சித்தப்பா போனகிழமை சைக்கில்ல ஏத்தித்தான் வவுனியாவுக்கு கொண்டு போனவர். அவளும் இன்னும் திரும்பி வரயில்லை.

வவுனியா சாத்திரி கூழாங்குளத்துக்கு பின்னால் உள்ள ஒரு குக்கிராமம் அது. சித்தப்பா போகும் போதே சொல்லிட்டுப் போனவர். 'தனியக் கிடவாதையுங்கோ செல்லர் வளவுக்க போய் கிடவுங்கோ. பகலில இஞ்ச நிண்டாத்தான் பயறுக்கு உழுந்துக்கு குரங்கு வரும் கவனமாய் பாத்துக் கொள்ளுங்கோ' என்று.

அந்தக்காணி இன்னும் புதுமை மங்கவில்லை. பயறு உழுந்து இரண்டுமே நிறைகாய். இன்னும் ஒரு வாரத்தில் கறுக்க ஆரம்பித்துவிடும். இரவில் பன்றி வராமல் இருக்க பெருங்கட்டைகளைப் போட்டுத் தீமூட்டம் போடுவதே வழக்கம். அல்லது அங்கங்கு மண்ணெண்ணெய் போத்தலில் பந்தம் கொளுத்தி வைக்கலாம்.

இப்ப மண்ணெண்ணெய்யக் கண்ணில கண்டு எத்தினநாள். கூப்பன் கடையில மண்ணெண்ணெய் குடுக்கினமாம் எண்டுபோன அரைக்காப்போத்தல்தான் தந்தவங்கள். அதை விளக்குக் கொளுத்திப்போ ட்டு எனனேயிறது. காடு கரம்பைவழிய இருக்கிறம். ஒரு பாம்பூச்சி வீட்டுக்க வந்திட்டா... அப்பதான் விளக்குக் கொளுத்தவேணும். இஞ்சயென்ன ரோச்லைட்டேஇருக்கு அதுக்கும் பற்றி இல்லையே.

சரி அப்ப தீமூட்டம் போடுறதுதான் உள்ளவழி. ஆனா அதையும் வெட்டையில போட்டமோ போற வாற ஹெலிக்காறனெல்லாம் சுட்டுப்பார்ப்பான். ஏன் பிரச்சனைய. ஏதோ கடவுள் விட்ட வழி என்று கந்தசாமி எதுவும் செய்யவில்லை.

சரசுவுக்கு இப்பபார்த்து இந்தப்பிள்ளை தங்கீற்றுது. அவனும் எவ்வளவோ கட்டுப்பாடாகத்தான் இருந்தான். தங்கச்சிலைபோல மனைவியை வைத்துக்கொண்டு அவளைப் பார்த்துப்பசியாறுவது இருபத்தெட்டு வயதில் சாத்தியப்படவில்லை. போன மாசியில் ஒருநாள். புலவு நெல்லுக்கொண்டு வந்து முற்றத்தில் போட்டிருந்தான். சரசு காலைச் சமையலை முடித்துக் கொண்டு மத்தியானச்சோற்றுக்கு நெல்குத்துவதற்காக உரலை நிறுத்தினாள். கந்தசாமி பார்த்துக் கொண்டிருப்பது சரியில்ல என்று நினைத்து இன்னுமொரு உலக்கையைக் கையிலெடுத்துக் கொண்டு, உதவிக்கு நெல்குத்தினான். டக்டக் டக்டக்கென்று தாளம் தப்பாத உலக்கைச் சத்தம் அவனைப்பாடத்தூண்டியது. சரசுவுக்கு சிரிப்பு வந்தது. உலக்கையை நிறுத்தி விட்டு சிரிப்பை அடக்க மாட்டாமல் குனிந்து வளைந்து சிரித்தாள். ஏற்கெனவே தாறுமாறாகக் கிடந்த தாவணிச் சேலையில் அவன்கண் போனது.

தென்னை மரத்துப் பாளைக்குள்ளே - ரெண்டு
தேரையிருந்து முழிக்குதுகா
தென்றலடிக்குது என்னைமயக்குது
தேன்மொழியே முத்து வீராயி...

என்றவன் அவளை அணைக்க அணை உடைந்து போனது.

ம்... இதையெல்லாம் இப்போது நினைத்தென்ன செய்வது. விஞ்ஞானம் வளர்ந்து எவ்வளவு வழிகள் கண்டுபிடித்தென்ன காதலுக்கு கதவைத் திறந்துவைத்து, கர்ப்பத்துக்கு கதவை மூடிவிட மருந்துத்தடை இருந்ததே.

இதெல்லாம் பூமணிக்கு புரிகிற வயதில்லை. அவள் கந்தசாமியின் அண்ணன் மகள். அவனுடைய உதவிக்கு வந்திருந்தாள். சின்னம்மாவ ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகவாம். பிள்ளையளப்பாத்துக் கொண்டு வீட்டில நிக்கக்கேட்டவர். போயிற்று நில் நான் வந்து கூட்டிக்கொண்டுவாறன் என்றுதான் தந்தை கூறியிருந்தார். காலையிலிருந்து குரங்குக் காவல். வளவுக்குள் நின்ற மரவள்ளிக் கிழங்கில் ஒரு மரத்தைப் பிடுங்கினால் கிழங்குகள் மீதமாகி விணாகிப்போம். ஒரு மரத்தில் பத்துப்பதினைந்து கிலோ கிழங்கு வரும். பூமணியும் இரண்டு சிறுசர்களான வரதனும் சுதனும் தானே. மரத்தைப் பிடுங்காமல் ஒரு பக்கமாக மண்ணைச் சரித்து ஒரு கிழங்கை மட்டும் பிரித்து கிண்டி எடுத்தாள்.

இரவுக்கு மூன்று மணிக்கெல்லாம் சோற்றைக் காய்ச்சி மீதமிருந்த கிழங்கைக் கறியாக்கி விட்டு, விறகுகள் கொஞ்சம் பொறுக்கி முற்றத்தில் போட 'டமார்...' என்ற சத்தம் அண்மையில் கேட்டது.

'அக்கா செல்லடிக்கிறான்' என்றான் சுதன். பூமணி அவசர அவசரமாக சோற்றை ஒரு சட்டியில் போட்டு அதன் மேல் மரவள்ளிக் கிழங்குக்கறியை வழித்துப்போட்டாள். போர்வைகளையும் கையிலெடுத்தபடி 'வெளிக்கிடுங்கோடா' என்றபடி கதவை இழுத்துப்பூட்டினாள். வாசலில் படுத்திருந்த அவர்கள் வெள்ளைநாய் வாலையாட்டியபடியே அவர்களுக்கு முன்னேயோடியது. 'டமார்' மீண்டும் ஒரு செல் விழும் சத்தம் 'ந்தா...' என்றான் வரதன். 'டம் டமார்...' பிறகும்... 'ந்தா' என்றான் சுதன். பூமணி விரைவாக நடந்தாள். வெளிப்படலை வரை அவர்களைத் தொடர்ந்த வெள்ளைநாய், வாலை ஆட்டியபடி மீண்டும் வீட்டிற்குள் ஓடிப்புதுங்கியது.

'டமார்...' செல் வெகு அண்மையில் விழுந்து வெடித்தது. பூமணி தங்கள் தெருவிலிருந்து சந்துகளைக் கடந்து நாயுண்ணிப் பற்றைகளுடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்று வீரையடிப்பட்டியில் நின்று தாமதித்தாள். செல்சத்தம் கேட்டதில் எருமைகளும் மிரண்டு போய் நின்றன. அவற்றைக்கடந்து குளக்கட்டருகேயிருந்த செல்லர் வீட்டுக்கடவைக்குள்ள போக, நன்கு இருட்டத்தொடங்கிவிட்டது.

'அக்கா... கமலமக்கா... நாய்கட்டியிருக்கே...' என்று கூப்பிட்டாள். 'ஆரது...' சலிப்பாக வந்தது பதில். 'வேறயார் கந்தசாமியின்ர பிள்ளையள் போல... பொழுதுபட்டா பறந்து வந்திருங்கள்...' என்ற பதிலும் உள்ளிருந்தே வந்தது. அது செல்லரும் மனைவியும் பேசிக் கொள்வதுதான். பூமணி மீண்டும்... 'நாய் கட்டியிருக்கே...?' என்று கேட்டாள். 'ம்..ம்... வாங்கோ...' என்றவர் 'ஏதோ இதுகளின்ர உயிர்தான் வெல்லக்கட்டி மாதிரி தூக்கிக்கொண்டு ஓடிவந்திருங்கள்.' என்றார் மனைவியிடம். பூமணி எதுவும் காதில் விழாதது போல போய் திண்ணையில் குந்தினாள்.

கொஞ்சநேரம் அமைதியாகக் கழிந்தது. 'என்னக்கா கறிபிடிச்சியள்' நிலைமையை இயல்புக்குக் கொண்டுவர பூமணி கேட்டாள்.

'சம்டீல்' என்று சம்பல் இடிப்பது போலவே பதில் வந்தது. வானத்தில் குறைச்சந்திரன் தோன்றியிருந்தான். 'சம்பல்தான் இப்ப தமிழீழத்தில விலை கூடின கறி. தேங்காவிலை அப்படி. ஒரு சீனிய வாங்கப்போறியோ, மண்ணெண்ணையை வாங்கப்போறியோ என்ன கிடக்கு. மெய்யேடா வரதன் கொப்பர் கொம்மாவோடதான் வருவாரோ...?'

'இல்ல... உடன வாறண்டுதான் போனவர். அங்க ஊரடங்குச் சட்டம் போட்டுட்டாங்கள் அதாலதான் வரஏலாமக் கிடக்கிறார்போல...'

'மெய்தானோ... அப்ப வெளிக்கிடப் போறானோ?... செல்லடியும் கொஞ்சம் அமந்தறையாக் கிடக்கு...'

பூமணி பதில் பேசவில்லை. எப்ப ஊரடங்குச்சட்டம் முடியும் எப்ப கந்தசாமிச் சித்தப்பா வருவார். நான் வீட்டபோக... என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

காலையில் எங்கும் மயில்கள் அவலமாகக் குரலெழுப்பின. சேர்ந்தாற்போல மந்திகளின் ஹுசங்காரம். நாற்புறக்காடுகளையும் அதிர்த்தன. பல பலவென விடியுமுன் பூமணி எழுந்து விட்டாள். வரதனையும் சுதனையும் எழுப்பிக்கொண்டு வீட்டைநோக்கி நடந்தாள். ஒற்றையடிப் பாதையூடாக நடந்து ஒழுங்கை முகப்பை அடைந்தபோது அங்கே பலர் கூடி நிற்பது தெரிந்தது. 'ஆர்... ஆராயிருக்கும்...?' அவள் அவ்விடத்தை அண்மித்த போது அதில் நின்ற வேலுத்தம்பியர், 'எடியேய் எங்கடி போறாய்'

'...ஆமி வாறானாம்...' என்றார்.

பூமணி திகைத்தாள். ஐயோ எங்கட வீடு... வீட்டில.. சில நாட்களின் முன் இரண்டு போராளிகள் ஒரு பெட்டியைக் கொண்டுவந்து அங்கே வைத்துவிட்டுப் போனார்கள். அது இப்போது அவளுக்கு ஞாபகம் வந்தது. 'எங்கட சாமான் போனாலும் பரவாயில்லை... அண்ணாக்களின்ர பெட்டிய விடக்கூடாது...'

'பெரியப்பு ஆமி எவடத்தை நிக்கிறான்...?'

'சாத்திரி கூழாங்குளம் வந்திட்டானாமடி'

'ம்... வரதன் கெதியாவா வீட்டிலபோய் சாமானுகள எடுப்பம்.' என்றவள் ஒழுங்கையில் போகாமல் பக்கத்திலிருந்த உழவுக்காணிகளுக்குள்ளாக இறங்கி நடந்தாள். வரதனும் சுதனும் ஓடியோடி அவளைத் தொடர்ந்து சென்றனர். தொட்டாவாடியும் வட்டுமுள்ளுமாக அவர்கள் கால்களைப் பதம் பார்த்தன. அதையெல்லாம் லட்சியம் செய்யாமல் ஓடியவள் தங்கள் காணி எல்லைக்கு வந்ததும்... 'வரதன் நில். தம்பியோட நீ இவடத்தை ஒளிஞ்சு நில். நான் போய் பெட்டிய எடுத்துக் கொண்டுவாறன்.'

முட்டச்சுவர் வைத்த அந்தச் சிறு மண்வீட்டின் கதவைத்திறந்து உள்ளே போனாள் பூமணி. அயலில் எங்கும் யாரும் தென்படவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு. பரனில் கிடந்த அந்தப்பெட்டியை நகர்த்திக் கீழே தள்ளினாள். பின் இறங்கி வந்து அதைத் தூக்கினாள். அது அவ்வளவு பாரமாக இல்லை.

என்னவாக இருக்கும்... கீழே விழுந்ததில் விலகிப்போயிருந்த அதன் பூட்டைத் தட்டித்திறந்தாள். முன்னே கிடந்தது ஒரு புகைப்படக் கோவை (அல்பம்) எடுத்துப் பிரித்தாள். அத்தனையும் போராளிகளோ... தெரியாது படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தவளுக்கு கிழக்குப்புற சாளரத்தூடாக வந்தவெளிச்சம் தடைப்பட்டது தெரியவே நிமிர்ந்து பார்த்தாள்.

யன்னலினூடாக இவளைப் பார்த்தபடி ஒரு ஆமி நின்றான். திகைத்தவள் வாசலை நோக்கித்திரும்ப முற்றத்தில் மேலும் இரண்டு ஆமி நிற்பது தெரிந்தது. மூலையில் பாம்பு பூச்சி வந்தால் தேவைப்படும் என்று வைத்த லாம்பெண்ணை கிடந்தது. கணப்பொழுதில் முடிவெடுத்தவள், அந்த எண்ணையை பெட்டியில் தெளித்தாள். நெஞ்சுச்சட்டைக்குள் குளிராமல் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்து தட்டினாள்.

பெட்டி ஜெகஜோதியாக எரிந்தது. யன்னலின் பக்கத்தில் நின்றவன் 'அல்லப்பங் அல்லப்பங்...' என்று கத்த அவள் வெளியே ஓடினாள். முற்றத்தில் நின்றவர்களின் கவனம் அவள் மீது திரும்பியது அவள் ஓடினாள். பெட்டி முற்றாக எரிந்திருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டபோது நின்றாள். அவளைச்சுற்றி நாலைந்து இராணுவத்தினர் நின்றனர்.

அவள் சிரித்தாள். வெறிகொண்டவள்போல சிரித்தாள். துப்பக்கிச்சனியன்கள் துப்பத்தொடங்கின. அந்தப் பதினைந்து வயதுப் பெண்ணின் உடல் சல்லடையானது. அரைமணி நேரத்தில் அவ்விடத்தில் சண்டை மூண்டது. இராணுவம் விரட்டப் பட்டான். வரதனும், சுதனும் வராமல் போன அக்காவைத்தேடி...



ஒரே ஒரு விளக்குக்கூட, மிக சூழ்ந்த இருட்டைப்போக்குகிறது. —மகாத்மா காந்தி




என்ன லாவகமாய் முதலையின் வாயை பிளக்கிறான் இந்தச் சிறுவன். பயம் என்பது இவனுக்கு தெரியாத ஒரு சொல்தான் என்று நினைப்பவர்களுக்கு ஏமாற்றமே அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட இராட்சத முதலையின் மாதிரி ஒன்றே இது.

அமெரிக்காவில் 31 பேரை பலிகொண்ட ஒரு புதிய வகை வைரஸ் ஒன்றை காவும் நுளம்பு ஒன்று தோல் ஒன்றின் மேற் பரப்பில் இரத்தத்தை உறிஞ்சும் உருப் பெருப்பிக்கப்பட்ட படம். இதுவரையும் அமெரிக்காவில் 1764 பேரை இந்த புதிய வகை வைரஸ் பாதித்துள்ளது.







சினிமாக்களில் படமாக்கப்படும் ஒரு காட்சியா? இல்லை. இது கென்யாவில் தீக்கிரையாகிக்கொண்டிருக்கும் நட்சத்திர விடுதிஒன்றின் வரவேற்புப் பகுதி. கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இந்த எரிப்பு சம்பவம் ஒரே இரவில் நான்கு முன்னணி உல்லாச விடுதிகளில் இடம் பெற்றது.கண் முன்னாலேயே பற்றி எரியும் இந்த காட்சியை படம் பிடிக்க தோன்றியிருக்கின்றதே!




அலாஸ்காவில் விளைந்த கோவா என்பதனால் இப்படி இருக்கிறதோ? எனக் கேட்கத் தோன்றும் இந்த 77 பவுண்ஸ் நிறையுடைய முட்டைக்கோவா ஆண்டுதோறும் இடம் பெறும் அதிக நிறைகோவாக்களை காட்சிக்கு வைக்கும் போட்டியில் பங்கெடுத்த 20 போட்டியாளர்களை வென்று முதலாவது இடத்தை தட்டிச்சென்றது. உலக சாதனை முட்டைக் கோவாவின் நிறை 105 பவுண்ஸ் ஆகும்.






மிகவும் எடுப்பாக கமராவுக்கு முகம்கொடுக்கும் பிறந்து இரண்டு வாரமாகிய சிறுத்தை புலிவகை குட்டி ஒன்று நைரோபியில் அமைந்துள்ள விலங்குகள் வாழ்விடம் ஒன்றில் அநாதரவாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த அரிய வகை புலிக்குட்டியினம் தற்பொழுது கென்யாவின் சாவோ தேசிய பூங்காவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.






அண்மையல் பூமிக்கு அண்மையாக தோன்றிய செந்நிறக் கிரகமான செவ்வாயை காண்பதற்கு உலகமே முண்டியடித்தது. சீனாவின் சங்காய் நகரில் தன் மகளுக்கு எவ்வாறு தொலைநோக்கியூடாகப் பார்பது பற்றி விளக்குகின்றார் தந்தையார். அண்மையாகத்தோன்றிய செவ்வாயின் படத்தை வெளியிட்டு வைத்தது நாஸா.





## ஒன்றாகவே

உலகையே சோகத்தில் ஆழ்த்திய இரண்டு மரணங்கள் தொடராக இடம்பெற்று 6 ஆண்டுகள் கடந்து விட்டன. இருவருமே ஒருவரையொருவர் நேசிக்கும் அதேவேளையில் ஏழைகளுக்காக பாடுபட்டவர்கள். 1997 செப்ரெம்பர் 5 அன்று தனது 87 வயதில் உலகைவிட்டுப் பிரிந்த அன்னை திரேசாவின் 6ஆம் நினைவு இன்றாகும் 1979 இல் நோபல் பரிசு பெற்ற திரேசா 1967 இல் இலங்கைக்கும் வருகைதந்திருந்தார். இடது புறம் மறைந்த வேல்ஸ் இளவரசி டயானாவின் சிறுவயதுத்தோற்றம். தனது வாழ்நாளில் பிரித்தானிய அரச குடும்பத்தில் அதிகம் பேசப்படும் நபராக இருந்த இவர் 1997 ஓகஸ்ட் 31 அன்று சுரங்கப் பாதையில் இடம்பெற்ற கார் விபத்தில் அகாலமரணமானார்.



நம்மை நாம் அறிய, ஏடுகளைக்காட்டிலும் இன்னல்களே கற்றுத்தரும். —ஸர்ஜன்டோவில்




# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-

இறுதியாக ஒரு நாள் நூறு முட்டைகள் சேர்ந்து விட்டன. இரும்பன் ஒரு கூடையை எடுத்து முட்டைகளை பத்திரமாகச் சந்தைக்குக் கொண்டுபோகவென அதற்குள் வைக்கோலைப்பரப்பி ஆயத்தப் படுத்தினான். காலை உணவுக்கு பின் அவன் தாயுடன் சந்தைக்குச் செல்ல ஆயத்தமாகினான். அவனுடைய மனம் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது. தனது கோப்பையில் இருந்த மரக்கறிக் கூழை மளமள வென்று விழுங்கி விட்டு முட்டைகளின் பாரத்தால் கனத்துக் கொண்டிருந்த கூடையைத் தூக்கிக் கொண்டு, தாயை விரைவாக வரும்படி அவசரப் படுத்தினான்.

திடீரென டொங்! டொங்! என்று மணியோசை கேட்டது. ஜப்பானியரின் கைக்கூலிகளான "அமைதி பேணும் சபை"யின் வருகையைக் குறிக்கும் ஒலியாக அது இருந்தது. அவர்களின் தலைவனான ஹாவோ ஹைச்செென் வீதியில் நின்றபடி கட்டளைகளை உரத்து முழங்கிக் கொண்டிருந்தான். அவனது அடாவடித்தனங்கள் மிக மோசமானவையாக இருந்ததாலே கிராமவாசிகள் அவனுக்கு "நரகத்தின் இரண்டாவது ராசா என்று பட்டம் சூட்டியிருந்தனர்.

"உங்களுடைய தானியங்களையும் பணங்களையும் கொண்டு வாருங்கள்! இது வரிசேகரிக்கும் காலம் என்று உங்களுக்குத் தெரியாதா? ஜப்பானின் இராணுவத்தின் கட்டளை...." என்று அந்தக் கைக்கூலி கத்திக் கொண்டிருந்தான். அந்தக் கட்டளை கேட்ட போது இரும்பனின் தாயார் சட்டிபானைகளைக் கழுவிக் கொண்டுடிருந்தார். அவளின் மீது மிகவும் குளிரான நீர் அடிக்கப்பட்டது போல் அவளது முதுகெலும்புக்கூடாக ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. அவளுடைய முகம் வெளிறிப் போய் விட்டது. வீட்டுக்குள்ளே ஓடிவந்த அவள் இரும்பனுக்கு அவசர அவசரமாகக் குரல் கொடுத்தாள் "அங்கே நரகத்தின் இரண்டாவது ராசா கத்துவது உனக்குக் கேட்கவில்லையா? அவர்கள் தானியத்தை பறிக்க வந்திருக்கிறார்கள். ஓடிப்போய் கெதியா முட்டைகளை ஒளித்துவை" என்று இரும்பனை நோக்கிக் கத்தினாள்.

அவனது கையில் இருந்த கூடையைப்பறித்து பெட்டகத்துக்குள் வைத்து மூடினாள்.

"அவர்கள் பெட்டகத்துக்குள் பார்த்தால் என்ன செய்வது?" என்று இரும்பன் சொன்னான். அது நடப்பதற்கு உண்மையிலேயே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்று உணர்ந்து கொண்ட அவள், முட்ன்டகளை மறைத்து வைப்பதற்கு வேறு ஒரு இடத்தை அவசரமாகத் தேடினாள்.



கதவுக்குப் பின்னால் இருந்த பெரிய சாடி ஒன்றுக்குள் அதனை மறைத்தாள். ஆனால் அதுவும் தானியச்சாடி போல் இருந்ததால் அதுவும் பாதுகாப்பானதல்ல என்று எண்ணிக் கொண்டாள். வெளிக்கதவை சாத்தும்படி இரும்பனுக்கு சொல்லிவிட்டு அவள் கிழக்குப் புறமாக இருந்த பேரனது அறைக்குள் கூடையைக் கொண்டு போனாள். கிழவன் படுப்பதற்குப் பயன்படுத்தும் கிழிந்த விரிப்புகளுக்கு பின்னால் கூடையை ஒளித்து வைத்தாள்.

வீட்டின் நடு அறைக்குள் வந்தாள். நரகத்தின் இரண்டாவது ராசா கையில் அழைப்பு மணியுடன் முற்றத்தில் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். வேட்டைக்காக வரும் ஓநாயைப்போல் கையை நீட்டிக்கொண்டே அவன் விரைந்து வந்தான். அவன் முகத்தில் சீற்றம் தெரிந்தது.

மினுக்கமான கறுப்பு சற்றின் அங்கியையும் சாம்பல் நிற கம்பளி குல்லாயையும், கம்பளிப் பாதணிகளையும் அவன் அணிந்திருந்தான். அவனது நீளக் காற்சட்டையின் கால் பகுதிகளில் அகலமான பட்டிகளை வரிந்து கொண்டிருந்தான். அவள் உள்ளே விரைந்து வந்தபொழுது ஆத்திரத்தால் பொங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் கைக்கூலிப் படையாளும் வந்து கொண்டிருந்தான்.

"தானியங்களை சேகரிக்க நாங்கள் வரும்போது கதவைப் பூட்ட உங்களுக்கு என்ன துணிவு! கதவைப் பூட்டினால் காவோவை தடுத்துவிடலாம் என்ற எண்ணமா?" என்று கத்தியவன் இரும்பனுடைய தாயை நோக்கி, "நீ தானியத்தையும் கொண்டு வாசலுக்கே வராமல் கதவைப் பூட்டும்படி உன்ர பெடியனுக்கு சொன்னாய் அல்லவா. தானியத்தை தர முடியாது என்று சொல்லுகிறநோக்கமோ?" என்று கோபமாக்க கேட்டான்.

"எங்களுக்குச் சாப்பிடவே தானியம் இல்லை'' என்று வெறுப்பாகச் சொன்ன இரும்பனின் தாய் "எப்படி உங்களுக்கு வரித் தானியத்தை தருவது?" என்று கேட்டாள். இதைச் சொல்லும் போதே அதை மெய்ப்பிப்பது போல், மரக்கறிக் கூழ் இருந்த கோப்பையை அவனது முகத்தில் இடிப்பது போல் நீட்டிக் காட்டினாள். இது அவனுக்கு மேலும் ஆத்திரத்தை ஊட்டி விட அவன் மேலும் கடுமையாக அவளை வெறித்துப் பார்த்தான்.

"இந்த விசர்க்கதை ஒன்றும் வேண்டாம். உன்னிடம் தானியம் இல்லாவிட்டால் பட்டப் பகலில் ஏன் கதவைப் பூட்டினாய்?"

"என்ர கோழி வெளியில போகாமல் தான் கதவை பூட்டினனான். அதில என்ன பிழை?" என்றான் இரும்பன்.

பண்ணையாரின் கைக்கூலி இரும்பனை ஒரு முறை வெறித்துப் பார்த்து விட்டு அவனைத் திட்ட முற்பட்டான். ஆனால் அவனுக்கு இன்னொரு யோசனை வந்தது. கண்களை அங்கும் இங்கும் உருட்டிப் பார்த்தவன், "நல்லது. இங்கே தானியம் இல்லாவிட்டால் நாங்கள் கோழியைக் கொண்டு போவோம்.'' என்று உத்தர விட்டான்.

இதைக் கேட்டதும் இரும்பன் தன் செல்லக் கோழியைக் காப்பாற்ற ஓடினான். அவன் எவ்வளவு முயன்றும் அந்த படையாளை தடுக்க முடியவில்லை. கோழியோ கொக்கரித்தபடி சிறகுகளை அடித்துக் கொண்டு முற்றத்தில் அங்குமிங்கும் பறந்தது. கோழியை இழந்து போனால் என்ன நடக்கும்? கோழி இல்லாமல் அவன் எத்தனை நாளுக்கு பள்ளிக்குப் போகலாம்?

கோழி இப்போது ஒரு மூலைக்குள் விரட்டப்பட்டு பிடிக்கப்படும் கட்டத்தை எட்டியிருந்தது. இரும்பன் ஓடியபடி கத்தினான். "நான் பிடித்துத் தருகிறேன்... கோழி எனக்குப் பிடிபடும் "என்று கத்தினான்.

களைத்துப்போய் மூச்சிறைத்துக் கொண்டிருந்த அந்த படையாள் மகிழ்ச்சியுடன் கோழியைத் துரத்துவதை நிறுத்திக் கொண்டான்.

தமிழில்
வி.பி.யோசப்

(தொடரும்...)

# இன்னும் சொல்ல எவ்வளவோ இருக்கு

*இன்றைக்கெண்டு* காற்றும் இல்லை. ஒரே புழுக்கம் மெல்ல எழுந்து போய் கதைப்புத்தகமொன்றை எடுத்து தட்டிக்கொண்டிருந்தேன். மனம் அதற்கு வெளியே நழுவி நழுவிக்கொண்டிருந்தது. இன்றைக்கென்று வாசிப்பிலும் மனம் ஒட்டவில்லை. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். மனதை அந்தச்சிந்தனை வழியே ஒட்டவிழைந்து தோற்றுக் கொண்டிருந்தேன். என்ன செய்யலாம்....

ஒரு நடை வெளியே போய்விட்டு வருவோம் (இப்போது யார் நடந்து செல்கிறார்கள்!) சைக்கிளை வெளியே எடுத்த போது பின்சில்லில் காற்று இறங்கி விட்டிருந்தது. (யாரைச்சொல்லியழ) சைக்கிளையும் இழுத்துக் கொண்டு வெளியே வந்தேன். சைக்கிள் திருத்துகிற கடையில் காற்றடிக்கலாம். அது வரைக்கும் பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்த மாதிரியாய் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தேன்.

வழியில் என்னைக்கடந்து பலரும் போய்க்கொண்டிருந்தார்கள். யாரோ ஒருவர் சினேகமாய் புன்னகைத்துக்கொண்டு போனார். பதிலுக்கு நானும்.....

எனக்குப்பெரிய ஆசுவாசமாயிருந்தது. இந்தத்தெருவில் இரண்டொரு பேருக்காவது நான் தெரிந்தவனாயிருக்கிறேன். நினைத்த மாத்திரத்தில் மனதில் ஒரு நெருடல்.

சற்றைக்குள் என்னை புன்னகையுடன் கடந்து போனவர் யார்? "தெரியவில்லை" நினைவு அடுக்குகளில் ஒவ்வொன்றாய் மூளை எடுத்து எடுத்து பார்த்த போதும் அந்த முகத்தை ஞாபகம் கொள்ள முடியவில்லை. பிறகேன் அவர் என்னைப்பார்த்து புன்னகைத்துவிட்டு போயிருக்கிறார்.? என்னுடைய பரிதாப நிலையை ஏளனப் படுத்தியிருக்கிறாரோ! இல்லையெனில் அவருக்குத்தானுமொரு நாள் இவ்வாறு காற்றுப்போன சைக்கிளை உருட்டிக்கொண்டு நீண்டதூரம் பயணித்ததை ஞாபகப்படுத்திற்றா! எதுவாயிருக்கும்.

சீ. ஏன் இப்படி மனதை அலட்டிக் கொண்டிருக்கிறேன். அவர் நிச்சயம் எனக்குத் தெரிந்தவர் தான். உறுதியாய் மனதுக்குத் தெரிவித்தேன்.

சைக்கிள் கடையில் இரண்டொருபேர் நிக்கிறார்கள். கட்டையோடு சைக்கிளைச்சாத்தி விட்டு காற்றடிக்கும் பம்மை எடுத்தேன்.

"என்னன்ணை காத்துப்போட்டுதோ"

"ஓம் காத்துப்போட்டுது"

''எல்லோரும் காத்தேறி உதறிக்கொண்டு திரியிற இந்தக்காலத்தில உங்களுக்கு....''

ஏதோவொரு புதிய தத்துவத்தை உதிர்த்து விட்ட பாவனையில் சைக்கிள்கடை வாரியார் தன் பேச்சை எண்ணிப்பெருமைப் பட்டுக்கொண்டிருந்தார். சுற்றி நின்ற இரண்டொரு பேர்களும் கொல்லென்று சிரித்தார்கள். எனக்கு உடம்பெல்லாம் பற்றிக்கொண்டு வந்தது.

ஒரு ரூபாக்குற்றியை எடுத்து ஒட்டுப் பெட்டிக்குள் போட்டுவிட்டு சைக்கிளை எடுத்த போது தெருவின் மறுகரையிலிருந்து என்னை நோக்கி வந்தவரின் முகத்தில் புன்னகை. சைக்கிளை எடுத்தேன் போவதற்கு.

''என்னண்ணை என்னைத்தெரியேல்லையோ அவசரமாய்ப் போறியள் போல கிடக்கு''

"எனக்கு உங்களைத்தெரியேல்ல"

"எனக்கு உங்களைத்தெரியும்"

"தம்பி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவை எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவவுக்கு எங்களைத்தெரியுமோ"

இல்லைத்தான்.

"அப்பிடித்தான் தம்பி இந்த உலகத்தில தெரிஞ்சும் தெரியாமலும் நிறையப்பேர் திரியிறம்."

அதுக்கில்லையண்ணை. உங்களை வழியில கண்டனான். சைக்கிள உருட்டிக்கொண்டு வந்தனீங்கள். ரோட்டிலவைச்சு இதைத்தரக்கூடாது. அதுதான் வீட்டில கொண்டுபோய் கொடுப்பமெண்டு போனனான். உங்கட வீட்டில ஒருத்தருமில்லை. குறைநினைக்கவேண்டாம்.

சொல்லிக்கொண்டு அவன் தந்த அழைப்பிதழை வாங்கிப் பிரித்துப்படித்தேன். (திருமண அழைப்பிதழ்)

"அது போக நீங்கள் நிர்மலனுக்கு"

"நான் நிர்மலனுக்கு சினேகிதம். ஒரேயிடத்தில வேலை செய்யிறம்."

"அப்ப நீங்கள் எனக்கு ஒண்ட விட்ட சினேகிதர் எண்டு சொல்லுங்கோவன்"

"அதெப்படி"

"நீங்கள் நிர்மலனுக்கு சினேகிதர். நிர்மலன் எனக்குச் சினேகிதர். ஆகவே எனக்கு நீங்கள் ஒண்டவிட்ட சினேகிதர்."

சைக்கிள் கடையில் நின்றவர்கள் இன்னுமொரு முறை கொல்லென்று சிரித்தார்கள்.



வனதாஸ்

மனிதனின் இதயம் ஊமையாகும் போது தான் ஆண்டவனின் காதும் செவிடாகும். - குவார்ல்ஸ்

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ்-07-09-2003



## நிரந்தர சமாதானம் இந்த மண்ணில் மலர அனைவரும் அம்பிகையை வேண்டி நிற்போம்!

திருக்கோயில்களில் நடைபெறும் விழாக்களில் மகோற்சவ விழாக்கள் மகத்துவமானது. கொடியேற்றம் தொடக்கம் கொடியிறக்கம் வரை மகோற்சவம் நடைபெறும் நாட்களாகும். தெல்லிப் பழை துர்க்காதேவிக்கு 28.08.2003ல் கொடியேற்றம் ஆரம்பமாகி 08.09.2003ல் இவ்வாண்டு மகோற்சவம் நிறைவு பெறுகிறது. இவற்றுள் இரதோற்சவம் எழுச்சி மிக்க ஒரு திருநாளாகும். அம்பாள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலுக்கும் உரியவள். இவற்றுள் அழித்தல் என்ற சங் காரத் தொழிலுக்கு உரியநாள் தேர்த்திருவிழா நாளாகும்.

பூலோக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்கு நல்லவை பெருகவும் அல் லாதவை மறையவும் வேண்டிய சக்தியை சங்காரம் உணர்த்துகிறது. தீமையை மாய்த்து தீயவர்களையும் தூயவர்களாக்குபவள் துர்க்காதேவி. இதற்காக பிரபஞ்சம் முழுவதிலும் அம்பாள் வியாபித்து இருக்கிறாள். தேவியின் அம்சங்க ளாக இலட்சுமி, சரஸ்வதி, கணேசன், கார்த்திகேயன் ஆகியவர்கள் அண்டங்க ளில் அருள் ஆட்சி புரிகிறாள். வாழ்வு மாண்பு பெறுவதற்கு உறுதுணையாக விளங்குகின்ற சக்திகளை துர்க்காதேவி தனது பரிவாரங்களாக அமைத்துக் கொள்கிறாள். தேவியின் ஆணைமீறி எவரும் செயற்படமுடியாது உயர்ந்த இராணுவ தத்துவமே வடிவெடுத்தவள் எம்பெருமாட்டி துர்க்காதேவி.

பூலோகத்துக்கு எழுந்தருளுகின்ற துர்க்காதேவி தத்துவ விளக்கத்துக்கும் சின்னமாகின்றாள். அவள் மகிசாசுரமர்த்தினியாக மண்ணுலகுக்கு எழுந்தருளு கின்றாள். சிங்கத்தின் மீது நின்று கொண்டு அவள் அவ்வசுரனை வதம் செய் கிறாள். கன்னங்கரேலென்ற நிறமுடைய அவள் நிலத்தில் நிற்கிறாள். அவ ளுக்குச் சற்று உயரத்தில் சிம்மத்தின் மீது நின்று அம்பிகை ஆட்சி புரிகிறாள். இத்தகைய வெற்றிக்குரிய கொற்றவையாக விளங்குகின்ற துர்க்கா தேவியின் திருக்கோயில் பக்தர்களின் வருகையினால் தினமும் எழுச்சியின் மேல் எழுச்சி பெற்று காட்சி தருகிறது. தமிழ்பேசும் மக்கள் சிறப்பாக சைவத்தமிழ்மக்கள் அம்பாளின் அரவணைப்பில் நலமாக வாழ்கிறார்கள் என்பதைக் கேட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம், மேலும் ஈழத்தமிழ் மக்களின் துயர் களையவும் நிரந்தர சமாதானம் இந்த மண்ணில் மலரவும் அனைவரும் தம் சொந்தக் காலில் ஊன்றி நிற்கவும் எல்லாம் வல்ல துர்க்காதேவி அருள்புரிவாளாக என்று அம்பிகையை வாழ்த்தி வணங்கி நிற்போம்.

சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

*சிறப்பிதழாக்கம்*
*காரையூரான்*



## தெல்லிப்பழை துர்க்காதேவி அருள் பெற்று இன்புற்று வாழ பிரார்த்திக்கின்றோம்


பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள்
பொங்கிடும் பார்வையைப்பெற்றிட

**எரிக்கணேஷ்**

பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட
உறுதியான, அழகான வெண் சங்குப்பற்களைக் கட்டிட
இளைய தலைமுறைகளே! மிதப்புப்பற்களா? அழகிய அமைப்பைப்
பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

*யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்*

**எரிக்கணேஷ்**

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான
மாத்திரை விற்பனையில்உண்டு.

மூக்குக் கண்ணாடி அகமும்,
பல்கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P 2486

கிளைகள்:
பழைய பொலீஸ்
நிலையம் முன்பாக
இல.80, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

இல.91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.

[சி–8396]



உங்களது நயம்
நம்பிக்கை நாணயமுள்ள
தங்கவைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**சிறிமாரி நகைமாடம்**

இல.49, கே.கே.எஸ் வீதி,
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

[சி–8395]



தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
**தெல்லிப்பழை**
**ப.நோ.கூ.சங்கம்,**
**தெல்லிப்பழை.**

[சி–8394]



**சயன்**
**உணவகம்**

மல்லாகம் சந்தி,
மல்லாகம்.
உரிமையாளர்:- வை.ரவி

[சி–8393]



*சகல மங்கள*
*வைபவங்களையும்*
*சிறந்த முறையில்*
*படம் பிடித்திட*

**சோதி ஸ்ருடியோ**

மல்லாகம் சந்தி,
மல்லாகம்.
கிளை:- ஏழாலை.

[சி–8392]





**தில்லையம்பதி**

GREAVES LIMITED



**மோட்டோர்ஸ்**



இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222 2488, 021-2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும்
இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.

(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)

[சி–8391]

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்-07-09-2003



## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தற்கால வளர்ச்சியும் சமுதாயப்பணிகளும்

ஈழத்திருநாட்டைப் பொறுத்தவரை இந்நூற்றாண்டில் ஆலயத்தோடுகூடிய சமுதாயப்பணிகளை முன்னுதாரணமாகச் செயற்படுத்துகின்ற ஆலயமாகத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் விளங்குகின்றது. திரண்டுவந்து வணங்கு கின்ற அடியவர்கள் கொடுக்கும் காணிக்கையில் ஆலயத் திருப்பணிகளையும் விருத்திசெய்து, பிறபணிகளையும் ஆலயத்தின் சார்பாக மேற்கொண்டு வருகின் றனர்.கடந்த முப்பத்தைந்து ஆண்டுகால இவ்வாலய வளர்ச்சியில் இவ்வாலயத்தின் பொதுப்பணிகளை இந்து சமுதாயம் என்றும் மறந்துவிடஇயலாது. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் நிர்வாகப்பணிகளைப் பொறுப்பேற்று அரிய பணியாற்றும் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆலயப்பணிகளில் புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளார். கடவுளின் பெயராலே கருணைமிகு ஜீவகாருண்யப்பணிகள் ஆற்றவேண்டும் என்பது அம்மையாரது அடிப்படைக்கொள்கை.

இவ்வாலயத்தில் 1982 இல் ஆதரவற்ற பெண்பிள்ளைகளுக்கான "துர்க்காபுரம் மகளீர் இல்லம்" இவ்வாலயத்தின் சமுதாயப்பணியின் சிறந்த சின்னமாக நிறைவோடு விளங்குகின்றது. இலங்கை வரலாற்றில் யுத்த அனர்த்தங்களினாலும், ஏழ்மையினாலும் ஆதரவற்றுப்போன பெண்பிள்ளைகளை அரவணைத்து அவர்களுக்கு உணவு, உடை, கல்வி வசதிகளைக் கொடுத்து பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த பதினைந்து வருடகால மகளிர் இல்ல வளர்ச்சியை நிரூபிக்கின்ற வகையில் சென்றவருடம் இவ்வில்லத்து மூன்று பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். இவ்மகளீர் இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளுக்கு தொழிற்கல்வியும் வேறுபயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தின் வரவு செலவு அறிக்கையினை அவதானித்தபோது குறிப்பாக வருடமொன்றிற்கு ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகை சமுதாயப்பணிகளுக் காக வழங்கப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளுக்குள் இவ்வாலயம் பிறநிறுவனங்களுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் வழங்கிய உதவிகள் சிலவற்றை நோக்கின் அவை மிகமுக்கிய வரலாற்றுப் பதிவேடாக அமைகின்றன. அவை பின்வருமாறு.

1.வட இலங்கைப் புற்றுநோயாளர் சங்கத்திற்கான உதவி.
2.ஜெய்ப்பூர் நிறுவன செயற்கைக் கால் உற்பத்திக்கான உதவி.
3.யாழ். போதனா வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவுக்கான சளி எடுக்கும் இயந்திரம் அன்பளிப்பு.
4.யாழ். போதனா வைத்தியசாலையில் பொறுப்பேற்கப்படாத பிரேதங்களைக் கொண்டு செல்வதற்குப் பிரேதவண்டி அன்பளிப்பு.
5.மானிப்பாய் மனநோயாளர் நலன்புரிச் சங்கத்துக்கான உதவி.
6.மாற்றுச்சிறுநீரகச் சிகிச்சை செய்வோருக்கான உதவி.
7.நவாலி கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற குண்டுவீச்சில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியுதவி.
8. இடம்பெயர்ந்த இந்துக்குருமாருக்கான நிதியுதவி.
9. இடம்பெயர்ந்த தமிழ் அகதிகள் புனர்வாழ்விற்கான நிதி உதவி.
10.போரில் அகாலமரணம் அடைந்த பொதுமக்களுக்கான நிதியுதவி.
11.ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வு நன்கொடைநிதி.
12.கைதடி வயோதிபர் இல்லத்திற்கானநிதியுதவி.
13.திருகோணமலை அன்பு இல்லம் சிறுவர்களுக்கான பராமரிப்பு நிதியுதவி.
14.கொழும்பில் இயங்கும் "முதிர்வில் உதவி" என்ற நிறுவனத்திற்கு நிதியுதவி.
15.அகில இலங்கை இந்து மாமன்றப் பணிகளுக்கான உதவி.
16.அகில இலங்கைக் கம்பன் கழக வளர்ச்சிக்கு நிதியுதவி.
17.மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் சேவைக்கான நிதியுதவி.
18. மன்னார் இந்துசமய விருத்திச்சங்கத்திற்கு நிதியுதவி.
19.கிளிநொச்சி குருகுலத்திற்கான நிதியுதவி.
20.நல்லை திருஞானசம்பந்த ஆதினத்திற்கான நிதியுதவி.
21.யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட உச்ச வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கான நிதியுதவி.
22.திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கச்சிறுவர்களுக்கான நிதியுதவி.
23.கண்பார்வை அற்ற பிள்ளைகளின் "வாழ்வகத்திற்கு " நிதியுதவி.
24.தொண்டமானாறு சன்நிதியான் ஆச்சிரமத்திற்கான நிதியுதவி.
25.மூத்த கலைஞர்களைக் கௌரவிப்பதற்கான நிதியுதவி.
26.வறுமைக்குட்பட்ட வயோதிபருக்கான நிதியுதவி.

இவை தவிர்ந்த பல வசதிகுறைந்த பாடசாலைகளுக்கும் வருடாவருடம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

ஆலயங்களைச் சமுதாயத்தோடு இணைக்கின்ற கைங்கரியத்தைப் பொறுத்தவரையில் துர்க்கையம்பாள் ஆலயம் பெரும்பணியாற்றி வெற்றிகண்டுள்ளது எனலாம். இன்று சமுதாயத்தில் மேன்மையுற்று விளங்கும் ஆலயங்கள் அருட்பொலிவை வளர்ப்பதோடு அறப்பணிகளையும் ஆற்றவேண்டும். அறப்பணிகளை மேன்மைப்படுத்தவேண்டும். வரும் காலத்தில் சமயமும் சமுதாயமும் ஒத்துப்போகின்ற வாழ்வை நாம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். ஆலயத்தை வழிநடத்துபவர்களை அறக்காவலர்கள் என்றும் தர்மப்பரிபாலகர்கள் என்றும் சமுதாயம் அழைத்ததன் நோக்கத்தை நாம் அறிந்து செயற்படுவோமாக.

செல்வி. விநோதா சந்திரகுமார்







நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்பட
துர்க்கை அம்மனைப்பிரார்த்திக்கின்றோம்.

ராசி சில்க்ஸ்

70, 71A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
தொ.பேசி- 021-2225571

கல்யாணப்பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்

திருமண பட்டுச் சாறிவகைகள்
ஸ்கேட் & பிளவுஸ்
கவுண்
சல்வார் கிற்
சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேட் ஆடைகள்
சோளி கிற்
சேட்டிங் சேட்ஸ்
பேபி சூட்
இந்தியன் சாறி வகைகள்

மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்

நல்லி சில்க்ஸ்

121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி-021-2225573
[சி-8390]

## யாழ்ப்பாணத்திற்கு புதிய விமானத்தை எக்ஸ்போ ஏவியேஷன் சேவையிலீடுபடுத்துகிறது



எக்ஸ்போ ஏவியேஷன் விமானசேவை நிறுவனமானது Fokker F 27 விமானத்தை யாழ்ப்பாணத்துக்கான சேவையிலீடுபடுத்துவதன் மூலம் தனது உயர் தராதர இலக்கில் புதியதொரு பரிமாணத்தில் காலடி எடுத்து வைக்கிறது.

எக்ஸ்போ ஏவியேஷனின் வியாபாரக் குறியீடானது எக்ஸ்போ எயார் ஆகும். எக்ஸ்போ எயார் ஆகாய வழிப்பயணிகளின் உற்ற நண்பனாகத் திகழ்கிறது.

பயணிகளுக்கு உன்னதமான சேவையை வழங்குவதில் தன்னிகரற்றுத் திகழும் எக்ஸ்போ எயார், பாதுகாப்பான, நம்பகமான விமானசேவையை வழங்குவதில் சாதனை படைத்து வருகின்றது. விசேடமாக வடிவமைக்கப்பட்ட இவ்விமானசேவையானது பணத்திற்குப் பெறுமதி மிக்க உயர்ந்த பட்ச வசதிகளின் கிடைப்பனவை உறுதி செய்கின்றது.

(சி-7974)

## திருமறைக் கலாமன்றம்

நடாத்தும்

## ஈழத்துக் கூத்து விழா

காலம்:- 11, 12, 13, 14 செப். 2003 (வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

- வெவ்வேறு பிரதேச கூத்துமரபுகள் தொடர்பான செயல் அறிக்கைகளுடன் இணைந்த கருத்தரங்குகள் முற்பகல் 9.30 மணிதொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரையாழ் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில்
- யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வன்னி, மலையக பிரதேச கலைஞர்களால்அந்தந்தப் பிரதேச கூத்துக்கள் மாலை 6.45 மணி முதல் யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படும்.

ஈழத்தின் வெவ்வேறு பிரதேசங்களிலுமுள்ள கூத்து மரபுகளை அறிக்கை செய்தல், தேசிய அரங்கை நோக்கிய தேடலை ஏற்படுத்துதல் என்னும்நோக்குகளோடு நடாத்துப்படவுள்ள இக் கூத்துவிழாவுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

திருமறைக்கலாமன்றம்

தொ. பே. 021-222239

சி-8502

## கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா



எதிர்வரும் 09-09-2003 அன்று கிளிநொச்சி கந்தசுவாமி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.இந்நாளில் தேரிலேறி வீதியுலாவரும் எம்பெருமான்- வள்ளி மணவாளன் - தமிழ்மக்களின் சுபீட்சமான நல்வாழ்வுக்கு கருணை புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.



## ஏ.எம்.ரி. ரான்ஸ் போட் சேவிஸ் (A.M.T)

NO-71,SHOE ROAD, KOTAHENA,
COLOMBO-13.

(சி-8400)

பருத்தித்துறை வீதி,
இருபாலைச்சந்தி, கோப்பாய்,
யாழ்ப்பாணம்.

T.P-021-2225784

- பொது வைத்திய நிபுணர்கள்
- சத்திரசிகிச்சை நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- மகப்பேற்றியல் பெண்நோயியல் நிபுணர்கள்
- என்பு முறிவு நெரிவு சிகிச்சை நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்
- பல் வைத்தியர்

யாழ்ப்பாணம், வன்னி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

## சன்றைஸ் மெடி கிளினிக்

யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் அனைவரையும் செனலிங் செய்யலாம்

தனியார் மருத்துவத்துறையில் ஒரு புதிய ஆரம்பம்

MBBS வைத்தியர்களின் வெளிநோயாளர் பிரிவு(OPD) காலை 9.00 மணி- மாலை 7.30 மணி வரை

சாதாரண மக்களும் பயனடையும் வண்ணம் நியாயமான கட்டணத்தில் நிபுணத்துவ ஆலொசனை

வீட்டில் இருந்து கொண்டே வைத்தியர்களை Booking செய்ய ☎-222 6069

நவீன வசதியுடன் பற்சிகிச்சை பிரிவு உடற்பயிற்சி (Physlotheraphy)

நீரிழிவு, இரத்த அழுத்தம், ஆஸ்த்துமா என்பவற்றைக் கண்காணிப்பதற்கு விசேடமாக குறைக்கப்பட்ட கட்டணத்தில் கிளினிக் சேவைகள்

கணணி மயமான ஆய்வுகூட சேவை X'ray/ECG கிளினிக் சேவைகள்

கார்பெட் தரை விரிப்பு கொண்ட நோயாளர் இருக்கை மண்டபம் குளிர்மையான காற்றோட்ட வசதி

அதிநவீன திறன் கொண்ட எக்ஸ்ரே ஈசிஜி இயந்திரங்கள் உயர் தொழில் நுட்ப வசதி கொண்ட ஆய்வு கூடமும்

வருமுன் காப்போம்-திட்டத்தின் கீழ் உங்களைப் பூரண மருத்துவ ஆய்வுக்குட்படுத்தி ஆலோசனைகள் வழங்க வசதிகள்

(Full Body Medical Check Up)





இவை யாவும் நகரத்தின் மத்தியில் 388, ஆஸ்பத்திரி வீதியில்-பஸ் நிலையம் வைரவர் கோயில் முன்பாக. யாழ் பேபி நீட்ஸ், இரட்னம் பார்மசி அருகில்

## சன்றைஸ் மெடி கிளினிக்

## SUN RISE MEDI CLINIC

(சி-8501)

# அனுமார் பதில்கள்



● **அனுமாரே! ஒவ்வொரு தேர்தலின் போதும் கட்சி மாறுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ச.கரன்,*
*சங்கானை*

நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன நம்மைக் கடிக்காமல் இருந்தால் சரி.

● **அநுமாரே பெண்னென்றால் பேயும் இரங்குமாம். அப்போ ஆண்?**

எஸ்.ராஜ்மோகன்
திருகோணமலை.

பெண்ணாயிருந்தால் பேய்க்கும் இரங்குவான்.

● **ஹாய் அனுமார், அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமாமே. அம்மணி நகரமாட்டாராமே.**

*செ.சசி,*
*மல்லாவி*

கடிர் காமரின் அடி போதாது போலும்.

● **டியர் அனுமர், நான் கோபம் கொள்வது என்றால் உங்கள் மீதுதான். ஏனாக இருக்கும்?**

ஆ.துளசிகா
உழவனூர்.

கண்ணாடியைப் பார்த்தால் உங்களைப்போல நான் இருப்பதாலா?

● **மலையகத்தில் அயல் நாட்டினரின் அர்ச்சனை அதி கரித்து வருகிறது?**

*சிவாஜி*
*மஸ்கேலியா.*

யாருடையதோ குடுமி சும்மா ஆடரதாம்.

● **பெண்களை மயக்கும் ஒரு ஆசி அருளும் அனுமாரே?**

ரவி
வெள்ளவத்தை.

நீர் ஆணாக இருக்கக் கடவாய்.

● **சதாம் குசைனை அமெரிக்கக் கூட்டுப்படைகள் பிடிப்பதற்கு முயற்சி செய்கிறார்களாமே? அவரைப் பிடிப்பார்களா அனுமாரே?**

எஸ்.செல்வன்,
உடையார்கட்டு.

சிலவேளைகளில் ஜோர்ச் புஸ் போய் சுவாசிநேகர் ஆனோல்ட் அமெரிக்க ஜனாதிபதியாக வந்தால் வில்லன் கதாபாத்திரத்திற்கு சதாமை அழைக்கலாம் அல்லவா?

● **இம்முறை நல்லூரில் முருகனை தீர்த்தமாட அனுமதிக்க வில்லையாமே யாழ். இளைஞர்கள்?**

ஞானேஸ்
வவுனியா.

ஊரெல்லாம் உயர் பாதுகாப்பு வலயமென்று எதிரியின் பிடிக்குள். அதைத் தீர்க்க அவருக்கு (முருகனுக்கு) வக்கில்லை. இந்த இலட்சணத்தில அவருக்கு தீர்த்தமாடல் வேறையா என்று நினைத்திருக்கிறது இளைய தலைமுறை. பிழையில்லைத்தானே.

● **ஜே.வி.பி. சொல்கிறது, தமது சமாதானத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் ஆதரவு தரும் அளவுக்கு சிங்களக் கட்சிகள் ஆதரவு தருவதில்லை என்று. "டக்"ஐப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ரமேஸ்
கொக்குவில்.

நக்கிற நாய்க்கு செக் கென்ன சிவலிங்கமென்ன?

● **அன்பு அனுமாரே! பேனா நட்பு எதுவரைக்கும் இருக்க வேண்டும்.**

விமலினி

பேனையில் மைமுடியும் வரை அல்லாவிடில் எழுதுதாளில் வரி முடியும் வரையும்

● **அனுமாரே! தற்போது சரமாரியாக நிகழும் வாகன விபத்துக்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஊர்க்குருவி,
பூநகரி.

ஊர்க் குருவியின் மடல் வாசித்த பொழுதே பிடரியில் உறைக்கும் கிளிநொச்சி கோர விபத்து செய்தி கேட்டேன். தயவு செய்து இனியாவது உங்கள் கருத்து என்ன என கேட்பதைத் தவிர்த்து நான் என்னசெய்ய வேண்டுமென அவரவர் சிந்தித்தாலே விடிவுண்டு இதற்கு.

● **அறிவு நிறைந்த அனுமாரே வெளிநாட்டுக் காற்று தமிழ் பேசுதே என்ற பாடலை சிலர் வெளிநாட்டுக் காசு திமிர் பேசுதே என்கிறார்களே! எனக்குப் புரியவில்லை.**

கு. மஞ்சு
கறுக்காய்த்தீவு.

மஞ்சு ஒரு ரூபாய்க்கும் ஒரு டொலருக்கும் இடையில் எவ்வளவு இடைவெளியோ அவ்வளவு திமிர் டொலருக்கு இருக்கத்தானே செய்யும். ஆனால் டொலரின் இடத்தில் இந்த டொலர்கள் எங்களிடத்தில் ஒரு ரூபாய் போல்தான்

● **நூறு, இருநூறு, எண்னூறு என்று எல்லாம் சொல்லும் நாம் ஏன் ஒன்பது நூறு என்று சொல்லாமல் தொல்லாயிரம் என்ற சொல்கிறோம்.**

ஐ.மாதவராஜன்,
வள்ளிபுனம்.

பத்து, இருபது, எண்பது என்றெல்லாம் சொல்லும் நாம் ஏன் ஒன்பத்து என்று சொல்லாமல் தொண்ணூறு என்கிறோம்.

● **அண்மையில் யாழில் திரையரங்கு ஒன்று கல்லெறி வாங்கியதாம். ஏன் இந்த பரிணாம வளர்ச்சி?**

ரி.தமிழன்
விசுவமடு.

கல்விதான் எங்கள் ஒரே சொத்து என்று சொல்லி பெருமைப்பட்டுக்கொண்ட தலைமுறை கல்வியிலுள்ள "வி"யை விற்றுவிட்டு கல்லை மட்டும் மூலதனமாக்கி யிருக்கிறார்கள், தரமாயிருக்கிறது.

---

*(02 ம் பக்கத் தொடர்ச்சி...)*

தங்களின் சுய அரசியல் அபிலாசைகளுக்கும் பௌத்த சிங்கள இனத்தின் நலன்களுக்கும் ஏற்ற வகையில் தான் காலத் திற்குக்காலம் தேர்வுகளை மேற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்தியும், நியாயப்படுத்தியும் வந்துள்ளமையே வரலாறு.

தற்போதைய சமாதானம் குறித்த சர்வதேச நிலைப்பாட்டை சந்திரிகாவும் ஆதரிக்கிறார், ரணிலும் அதிகளவு ஆதரிக்கிறார். அல்லது இருவருமே - ஆதரிப்பதாக காட்டிக்கொள்கிறார்கள். இது புற அழுத்தம் காரணமாகவும், வேறு உள்நோக்கங்கள் காரணமாகவும் ஏற்பட்ட நிர்ப்பந்தங்களின் வெளிப்பாடேயாகும்.ஆனால் சந்திகாவின் சமாதான அணுகுமுறையை ரணில் எதிர்ப்பார்- புறக்கணிப்பார்.

ரணிலின் சமாதான நகர்வுகளை சந்திரிகா நிராகரிப்பார், எதிர்ப்பார்.

இருவருமே ஏககாலத்தில் சமாதானம் தொடர்பாக ஒரு நியாயமான கருத்து நிலைப்பாட்டிற்கு எக்காலத்திலும் வரமாட்டார்கள். அப்படி வந்தால் அவர்களின் அரசியலின் ஆதார சுருதியான இனவாதம் கலைந்து விடும்.

கடந்த பொதுத்தேர்தலின் போது போரின் படுவீழ்ச்சியையும், அவமானங்களையும், பொருளாதார மற்றும் மனித வள இழப்புகளையும் சந்தித்துக்களைத்துப் போயிருந்த நிலையில் சந்திரிகாவுக்கு எதிரான ஆயுதமாக 'சமாதான' கோஷத்தை ரணில் எழுப்பிய போது அது அவருக்கு அவசியமாக இருந்ததுடன் சாதகமாகவும் அமைந்தது.

இப்போது மீண்டுமொரு தேர்தல் சூழலை சந்திக்க வேண்டிய நேரம் வந்து கொண்டிருக்கும் வேளையில், சந்திரிகாவின் இனவாத நோக்குடன் கூடிய அரசியல் பிரச்சாரத்தை எதிர்கொள்ள வேண்டிய ரணில் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தான் தமிழருக்கு எதையும் பெரிய அளவில் - சுலபமாக கொடுத்து விடப்போவதில்லை என்பதை சிங்கள சமூகத் தவர்களுக்கு வலியுறுத்திக் கூறி உறுதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் வெளிப்பாடாகவே அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அடுத்த கட்டப்பேச்சுக்கள் இறுக்கமாகவே அமையுமென்றும்.... இது வரை நடைபெற்ற ஆறு சுற்றுப்பேச்சுக்களும் சுமூகமாகவும், வெற்றிகரமாகவும் அமைந்தன வென்றும் ஆனால் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது பல்வேறு நெருக்கடிகள் உருவாகுமெனத் தான் எதிர்பாப்ப தாகவும் தற்காலிகப் பின்னடைவுகள், இறுக்கமான சூழ்நிலைகள் என்பவற்றை இந்தச்சமாதாப் பேச்சுக்கள் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாக க்கூடும் எனவும் வெளிப்படையாக கூறத்தொடங்கி யுள்ளார்.

எந்த விலை கொடுத்தும் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று பிரகடனம் செய்த ரணில் இப்போது சறுகுகிறார்.

அப்போது அவர் நாவால் பேசினார். இப்போது அவரது இதயம் பேசுகிறது.

எச்சரிக்கையுடன் - தமிழினம் ஏமாறாது உறுதியுடன் இருக்க வேண்டிய காலகட்டமும் இது தான்.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 34



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –34

............................................................
............................................................
............................................................
............................................................

பெயர் : ............................................
முகவரி : ............................................
............................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –33



பெ. கலையரசி,
ஆயப்பகுதி,
புளியங்குளம்.

### பரிசுக்குரியவரிகள்

பகை துரத்தலாம்
பகலவன் கொழுத்தலாம் –ஆனால்,
தமிழிச்சி தான் ஒருபோதும்
தலைகுனியமாட்டேன்

### பாராட்டுக்குரிய வரிகள்

*நேர்மையும் நம்பிக்கையும் உனக்கு துணையிருக்க*
*முதிர்ந்தும் நிமிர்ந்து நின்று - வேருக்கு*
*நீர்பாய்ச்ச உழைக்கும் தாயே*
*உன் வாழ்வு வீணல்ல நீ யாருக்கும் சுமையல்ல.*

இ.ராஜன்,
வட்டக்கச்சி.

*கையிலே குடை சுமந்து*
*நெஞ்சிலே சுமை சுமந்து*
*அஞ்சிடா உன் முயற்சி*
*அம்மாவே நீ தெய்வமேதான்.*

ஜே. பேரின்பம்,
புதுக்குடியிருப்பு.

*முகத்தினிலே என்ன் புன்னகை - உன்*
*வியாபாரத்தின் வெற்றியா தாயே*
*வயது குன்றினாலும் தமிழன் -தலை*
*குனியான் எனக் காட்டுகின்றாயா?*

மா. துஷ்யந்தி,
மாங்குளம்.

*வறுமையும், வாழ்வும் எமதாகினும்*
*வாடி நாம் நில்லோம் -தமிழ்*
*தாயக விடிவை தாயவள் (எதிர்) பார்க்கிறாள்*
*தரணியை வெல்வோம்*

சு.கார்த்திக்
வன்னி.

*உற்ற துணையையும் இழந்து தள்ளாடும் வயதினில்*
*ஈன்ற மகவுகளையும் மண்ணிற்காய் அர்ப்பணித்து விட்டு*
*ஆதாரம் எதுவுமற்று தன் ஆகாரத்திற்கெனவே*
*கச்சான் கடைபோட்டும் கதிரவனோடு போராடுகிறாள்.*

சு. கோகிலா,
கிளிநொச்சி

*வேலைக்குப் போன கணவர் வீடு வந்து சேரவில்லை*
*வெலிக்கடையில் அவரெண்டு செய்தி வந்து பலவருடம்*
*பாதைகள் திறந்ததனால் பார்த்திருக்கேன் அவர் வரவை*
*பாதை வியாபாரியாக பேதை நான் முறிகண்டியில்.*

சி.சி செல்வராசா,
முள்ளியவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி.

# CSC

PRASHANNAA COMPUTER STUDY CENTRE

## Computer Sales and Repairing

யாழ் நகரில்,
முதன் முதலாக இரண்டு வருடஉத்தரவாதத்துடன்
மிகக் குறைந்த விலைகளில் தரமான கணனிகளை
மாதாந்த தவணைக் கட்டணஅடிப்படையில் பெற்றுக்
கொள்ளஓர் அரியசந்தர்ப்பம். இன்றே நாடுங்கள்

**Prashanna CSC**
**K.K.S Road, Chunnakam.**

Prashannaa **CSC** இன் ஏனைய சேவைகள்

- Blank CD
- CD Covers
- Floppy
- Computer Parts (கணனி உதிரிப்பாகங்கள்)

(சி-8397)

## அமரர் திரு.வே.சுப்பிரமணியம் மகேந்திரன்(சாமியார்)
(முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன சிரேஸ்ட உத்தியோகத்தர்)

### 31ம்நாள் அழைப்பிதழ்



அன்னை மடியில் 19.05.1940

இறைவன் திருவடியில் 06.08.2003

எமது தந்தையின் இறைபத கிரியை நிகழ்வில். பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர் களுக்கும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அன்பு உள்ளங்களிற்கும்எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் 05.09.2003 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் வீட்டுக்கிரியைநிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல-54,05ம் பண்ணை,
கனகபுரம்,கிளிநொச்சி.

மனைவி
மக்கள்.

(சி-8481)

(சி-8398)

## Sanshigaa



### சன்சிகா நகையகம்

**JEWEL HOUSE**

සන්ෂිගා ජුවෙල්හවුස්



சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும்
தங்க ஆபரணங்களை பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஸ்தாபனம்.

114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL; 024-24028

114

யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,
கொழும்பு -11

## புதிய வியாபார ஸ்தாபன திறப்பு விழா



# முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை

பல வருடங்களாக மல்லாவியில் இயங்கி வரும் எமது ஸ்தாபனம் தனது கிளையினை கடந்த ஒருவருட காலத்திற்கு மேலாக புகையிரத வீதி, கிளிநொச்சியில் ஆரம்பித்து இயங்கிவந்தது. 05.09.2003 இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள அமிர்த சித்தயோகமும் மூல நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

## முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை

என்னும் நாமத்துடன் யாழ்சாலை கிளிநொச்சியில் (நிமலன்ஸ் புகைப்பட கலையகம் அருகாமை) சொந்த கட்டட தொகுதியில் புதுப்பொலிவுடன் இயங்கவுள்ளதால் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



(சி-8399)

உரிமையாளர்

முத்துப் பிள்ளையார் வண்ணச்சோலை.

யாழ்சாலை,
கிளிநொச்சி.


கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.